www.padippakam.com

# புரட்சிப் புயல்

ஆண்டு-20 இதழ்-2 முதல்
ஆண்டு 22 இதழ் 4 முடிய

ஜனவரி 1994-மார்ச் 1996 விலை ரூ.15

## பசுமைப் புரட்சிக்கு பாலிடால்!
## கருமைப் புரட்சிக்கு காம்ப்ளக்சு உரம்!

மறுகாலனியாதிக்கம், ஏழை நாடுகளின் அரசியல் பொருளாதாரத்தை ஒரு புதிய தளத்தில் - புதிய பரிமாணத்தில் மேல்நிலை வல்லரசு நாடுகளின் விரிவாக்கப்பட்ட மறுஉற்பத்திக்கான சங்கிலித் தொடரின் ஒரு கண்ணியாக மாற்றியமைத்து விட்டது. நாடுகள், தேசங்கள், தேச அரசுகள் என்ற எல்லைகள் - தடைகளை அகற்றிவிட்டு, உலகம் முழுவதையும் ஒரே உற்பத்தி நிலையமாகத் தேசங்கடந்த தொழில் கழகங்கள் கருதுகின்றன. சர்வதேச உழைப்புப் பிரிவினை அடிப்படையில் ஒரு பொருளின் பல்வேறு பாகங்களை வெவ்வேறு நாடுகளில் உற்பத்தி செய்து, ஓரிடத்தில் அவற்றைப் பூட்டி, பின் உலக அளவில் உள்ள வர்த்தக வலைப்பின்னலில் விற்பனைக்குக் கொண்டு வருகின்றன தேசங்கடந்த தொழிற்கழகங்கள். எனவே உலகம் முழுமைக்கும் ஒரே உற்பத்தி - விநியோக - வரிவிதிப்பு - உரிமம் அளிப்பு நிதிக் கொள்கைகள் ஆகியவற்றைக் கொண்டு வர முயல்கின்றன. உலக வர்த்தக நிறுவனம் இதற்கான சட்டபூர்வ உலக அதிகார அமைப்பு; நம் நாட்டு விவசாயமும் இந்த அடிப்படையில்தான் தற்போது மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது.

### பூ, பழம், காய்கறிகளை ஏற்றுமதி செய்! உணவுக்கு மேல்நிலை வல்லரசுகளிடம் கையேந்து!

சர்வதேசியமயமாக்கப்பட்ட வேளாண் - உணவுத் தொழிற்சாலை உலக அளவில் பின்வருமாறு ஒழுங்கமைக்கப்படுகிறது. ஏழை நாடுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாடுகள், பருவகாலம் அற்ற மற்றும் தேசத்திற்குப் புறம்பான (அந்நிய) காய்கறிகள், உறைய வைக்கப்பட்ட பழச்சாறுகள், அன்று கொய்த மலர்கள் போன்ற 'ஆடம்பர'ப் பயிர்களையும், கால்நடைத் தீவனங்கள், மாட்டிறைச்சி, மீன், கோழியிறைச்சி போன்றவற்றையும் உற்பத்தி செய்து ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் தனிச்சிறப்பு பெறுதல்; மேல்நிலை வல்லரசு நாடுகள் இதற்கு மாறாக, அடிப்படைக் கூலி உணவுகளான நெல், கோதுமை,

தமிழ் மாநில அமைப்புக் கமிட்டியின் இதழ்
இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)
தமிழ்நாடு

படிப்பகம்

www.padippakam.com

மக்காச் சோளம் போன்றவற்றை ஏராளமாக உற்பத்தி செய்து, ஏழை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் சிறப்புத் தன்மை பெறுதல்; தேசங்க டந்த வேளாண் - உணவு வர்த்தக நிறுவனங்கள் டப்பாபுட்டி - தயார் உணவுகளை தயார் செய்து உலக அளவில் விற்றல்; இதற்கான உள்ளீடுப் பொருட்களைத் தயாரிக்கும் நாடுகளாக ஏழை நாடுகளை மாற்றுதல்.

இதில், ஏழை நாடுகளின் வேளாண் - உணவு உற்பத்தியும் தேவையும் கூடுதல் மதிப்புள்ள அந்நிய சந்தைகளை நோக்கி (நம்பி) ஒழுங்கமைக்கப்படுகிறது. மாறாக, மேல்நிலை வல்லரசுகள் தம்மிடமுள்ள உபரியான தானியங்களை ஏழை நாடுகளில் கொண்டு வந்து நல்ல இலாபத்திற்கு விற்க வகை செய்யப்படுகிறது. இதன் மூலம் ஏழை நாடுகள் தங்களுக்கென ஒருங்கிணைந்த தேசிய விவசாயக் கொள்கை என்று ஒன்றை வகுத்துக் கொள்வதே ரத்து செய்யப்படுகின்றது. இன்னொரு பக்கம் மேல்நிலை வல்லரசு நாடுகளின் விவசாயத் துறை மிகவும் பாதுகாக்கப் படுகிறது.

இப்படி தேசங்கடந்த தொழிற்கழகங்கள் விரும்புகிற 'ஆடம்பர' விவசாயப் பொருட்களை ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்து விட்டு, உள்நாட்டு உணவுத் தேவைகளுக்கு இறக்குமதியை ஏழை நாடுகள் சார்ந்திருப்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு மெக்சிகோ நாடாகும்.

'புதிய விவசாய நாடுகள்' என்றழைக்கப்படும் இந்நாடுகளின் விவசாயக் கொள்கைகளிலிருந்து தேசியத்தன்மை இழக்கச் செய்யப்படுகிறது அல்லது நீக்கப்படுகிறது (Denationalised). அதாவது உணவு உற்பத்தியில் அந்நாடு தன்னிறைவு கொண்டதாக இல்லாமல் ஆக்குவதே இதன் நோக்கமாகும்.

உள்நாட்டு மக்கட்தொகையின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் ஆற்றலைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டே 'பசுமைப் புரட்சி' கொண்டு வரப்பட்டதாகச் சொல்லப் பட்டது. ஆனால் இப்பொழுதோ பசுமைப் புரட்சியின் பெற்றோர்களான ஏகாதிபத்தியம் தரகு முதலாளியமே தங்களது பாலகனைத் தாங்களே குப்பைத் தொட்டியில் வீசி எறிய முன்வந்துள்ளனரே.

### விவசாய உற்பத்தியிலிருந்து தேசிய நலன்களை இழக்கச் செய்தல்

ஏழை நாடுகள் ஏகாதிபத்தியங்களைச் சார்ந்திருப்பதும், ஏகாதிபத்திய சங்கிலியில் பிணைந்திருப்பதும், உலக நாடுகளிடையே ஏற்றத் தாழ்வும் புதிதல்ல. ஆனால் உலக விவசாயத்தில், இதற்கு முந்தைய எல்லாக் கட்டங்களையும்விடத் தன்மை ரீதியில் வேறுபட்ட மாற்றம் தற்போது நிகழ்ந்து வருகிறது. 'பலவகைப்பட்ட ஸ்தல விவசாயமுறைகளிலிருந்து ஒரேவிதமான வேளாண் வர்த்தக - முதலாளித்துவ விவசாய உற்பத்திக்கு மாறுவதாகும்' என்று ஃபிரீட்லேண்டு என்பவர் இதைக் குறிப்பிடுகிறார்.

இதற்கு முந்தைய எல்லா விவசாய நடைமுறைகளும் - சாதாரண குடும்ப உறுப்பினர்கள் மட்டும் செய்யும் விவசாயத்திலிருந்து, பசுமைப் புரட்சிக்கால பொறுக்கு விதைகள், டிராக்டர் போன்ற நவீன கருவிகளைப் பயன்படுத்தி செய்த விவசாய நடைமுறை வரை எல்லா முறைகளும் - தற்போது மாற்றப்படுகின்றன. ஏழை நாடுகளின் விவசாயத் துறைகள் உலகத்தில் எங்கேயோ உயிரியல் ரீதியில் உருவாக்கப்பட்ட உணவுகளைப் பயன்படுத்துகின்ற, மிகவும் தொழிற்மயப்படுத்தப்பட்டதும் முதலாளித்துவமயம் ஆக்கப்பட்டதுமான உணவுத் துறைக்கு மாற்றியமைக்கப்படுகின்றன; அல்லது வெறுமனே மீன், மற்றும் மாட்டிறைச்சி போன்ற வளர்ப்பு விலங்கினங்களை அடிப்படையாகக் கொண்ட உணவு வகைகளை உற்பத்தி செய்வதற்கான சரக்குக் கண்ணிகளாக மாற்றியமைக்கப்படுகின்றன.

பயிரிடுதல் மட்டுமல்ல, கிராமப்புறம், சமுதாயமாக சேர்ந்து வாழ்வது, வாழ்விற்காக உற்பத்தி செய்வது, இயற்கை வளங்களின் மீதான பாரம்பரிய உறவு, உரிமை ஆகியவை மட்டுமல்ல, தேசியப் பொருளாதாரம், தேசிய அரசுகள், தேசிய சமுதாயங்கள் அனைத்தும்

---

இந்த கட்டுரையில் ஏழை நாடுகள் என குறியிடப்படுபவை பின்வரும் வகைகளைக் குறிப்பிடுகின்றன: காலனிய, அரைக்காலனிய, நவீனகாலனிய நாடுகள் ஒரு கட்டத்தில் அரசியல் சுதந்திரம் பெற்று பின் ஆட்சி கவிழ்ப்பு நடத்தப்பட்டு நவீன காலனி ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகள்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய விவசாயத்தால் இல்லாமல் செய்யப்படு கின்றன; அல்லது தன்மை நீக்கம் செய்யப்படு கின்றன.

எல்லா ஏழை நாடுகளும் தற்போது சம அளவில் இந்த சர்வதேச வலைப்பின்னலில் பின்னப்படவில்லை. மத்தியதர வருவாய் உள்ள நாடுகள்தான் இதில் உள்ளன. தட்ப வெட்பநிலை, மண்வளம், உழைப்பு விலை ஆகியவற்றைப் பொருத்து குறிப்பிட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் மையங்களாக நாடுகள் பிரிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட் டாக, கால்நடைத் தீவனங்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளாக பிரேசிலும், மெக்சிகோ வும், தாய்லாந்தும் உள்ளன. உறைய வைக்கப் பட்ட ஆரஞ்சு சாறு ஏற்றுமதியில் மிகப்பெரிய நாடாக பிரேசில் உள்ளது; சிலி நாட்டின் 96% ஏற்றுமதி ஆப்பிளும் மேசை திராட்சையும் பியர்ஸ் பழங்களும் ஆகும். அன்று கொய்த மலர் ஏற்றுமதியில் கொலம்பியா உலகத்தி லேயே இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

மேல்நிலை வல்லரசுகளின் தேசங்கடந்த தொழிற்கழகங்களால் ஏழை நாடுகள் மீது திணிக்கப்படும் இந்தப் புதிய விவசாயம், இந்நாடுகளின் விவசாயப் பொருட்களுக்கான சந்தையை அதிகப்படுத்துவதன் அடிப்படை யில், விவசாயத்தை நவீனப்படுத்தும் ஒரு தேசியக் கொள்கையைக் கொண்டதல்ல; மாறாக, உற்பத்தி மற்றும் நுகர்வுக்கான சர்வ தேச வலைப் பின்னலில் இலாபம் தரும் பகுதியாக இது கருதப்படுகின்றது. மக்களின் அடிப்படை உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதன் ஒரு பகுதியாகப் புதிய விவசாயம் இல்லை. தேசங்கடந்த வேளாண் தொழிற்கழ கங்களின் உள்ளீடுகளுக்கான ஒரு தோற்றுவா யாகப் புதிய விவசாயம் மாறிவிட்டது.

இதற்கு எடுத்துக்காட்டாக மெக்சிகோ வைப் பார்க்கலாம்: 1960 களில் அந்நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த நாடாக இருந்தது. ஆனால் 1980-களில் உணவுத் தேவைக்காக இறக்குமதியைச் சார்ந்திருக்கும் நாடாக மாறியது. மொத்தப் பொருளாதார வளர்ச்சியை விட மெக்சிகோ விவசாயம் 1962-86ம் ஆண்டுகளில் வேகமாக வளர்ந்தது. எனினும், மெக்சிகோ தனது உள்நாட்டு உண வுத் தேவைக்காக அதிக அளவு தானியங்களை இறக்குமதி செய்தது. விவசாயத்துறை வளர்ந் துபெருகிய போதும், மக்களின் தனிநபர் உணவு நுகர்வு குறைந்தது. இதற்கு ஒரு முக்கிய காரணம் மெக்சிகோ விவசாயிகள் மனித நுகர்வுக்கான தானியத்தை விட்டு விட்டு, விலங்குகளுக்கு உணவான சோர்கம் என்ற சோள வகைகளைப் பயிரிட ஆரம்பித்த துதான். மெக்சிகோ விவசாயம் சர்வதேசியமய மாக்கப்பட்டதால், விவசாயிகள் எந்தப் பயி ருக்கு அதிக விலை கிடைக்கிறதோ அதை அதிக அளவில் பயிரிட்டார்கள். விவசாயம் சர்வதேசியமயமாக்கப்பட்டதாலும், மெக் சிகோ அரசு எவ்வித விலைகட்டுப்பாட்டு நடவடிக்கையிலும் இறங்கக் கூடாது என்ற அமெரிக்க உத்திரவை மேற் கொண்டதாலும் உள்நாட்டு விவசாயப் பொருட்களின் விலை கள் சர்வதேசச் சந்தையின் விலைக்கு ஏறின. சோர்கம் அதிக விலைக்கு விற்றதால் அதிக அளவு பயிரிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட் டன. மெக்சிகோ நாட்டின் விவசாயக் கொள்கை இதுதான் என்று கட்டளையிடவும், மூலாதாரங்களை ஒதுக்கவும், சர்வதேசச் சந்தை விலை சமிக்ஞைகளைச் சுதந்திரமாக செயல்ப டவும் மெக்சிகோ அரசு அனுமதித்ததுதான் இதற்குக் காரணம்! இதனால் தேசிய (உள் நாட்டு) உணவு தானிய தன்னிறைவு முற்றி லும் சீர்குலைந்தது; இவ்வாறு விவசாய உற் பத்தி தேசியத் தன்மையை முற்றாக இழந்த உற்பத்தியாக மாறியது.

## விவசாயத்திலிருந்து விவசாயிகளை விரட்டு

புதிய விவசாயத்தின் மற்றொரு முக்கிய மான அம்சம் என்னவென்றால், தேசங்கடந்த உற்பத்தி மற்றும் நுகர்வு வலைப்பின்னலில் ஏழை நாட்டு விவசாயம் எப்படி - இந்த முறையில் இணைக்கப்பட்டுள்ளது என்பதா கும். உற்பத்திக்கான விசையை பண்ணையிலி ருந்து வேளாண் தொழில் நிறுவனங்களுக்கு மாற்றுவதே இது. எனவே, சர்வதேச அளவில் தேசங்கடந்த தொழிற்கழகங்களில் உருவாக்கப் படும் விவசாய உற்பத்தி தொழில்நுட்பங் களை, ஏழை நாட்டு விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். இது மரபு வழி விவசாயிகளை முற்றாக நிலைகுலையச் செய்து விடும். அதா



படிப்பகம்

www.padippakam.com

வது, வாழ்வதற்காக உற்பத்தி என்பதற்குப் பதிலாக, வேளாண் - தொழில்களுக்கான உள்ளீடுகளைத் தயார் செய்யும் உற்பத்தியாக மாற்றிவிடும். எங்கோ வேளாண் -தொழில் கழக மையங்களில் தீர்மானிக்கப்படும் பயிர்களை, விவசாயிகள் விளைவித்து, அதை அப்படியே முற்றாக விற்று விட்டு, அரிசி, கோதுமை, பருப்பு, காய்கள் போன்றவற்றை சந்தையில் வாங்கிச் சாப்பிடும் நிலைக்கு, தங்களது உணவு வகையையும் ருசியையும் தீர்மானிக்கும் அதிகாரத்தைச் சந்தையின் விதிக்குக் கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள்; அல்லது மொத்த தேசியப் பொருளாதாரத்திலிருந்தே விவசாயிகள் ஓரங்கட்டப்படலாம். இவ்வாறு விவசாயிகள் நிலை குலைக்கப்படுகின்றனர்.

மேலும், ஏழை நாடுகளின் மரபு ரீதியான விவசாய ஏற்றுமதிப் பொருட்களுக்கான இரசாயன மாற்றுகளையும், அவற்றை பரிசோதனைக் கூடத்திலேயே உற்பத்தி செய்யவும், புதிய உயிரியல் தொழில்நுட்பங்களையும் பிற முன்னேறிய தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தி, மாற்றுப் பொருட்களைத் தேசங்கடந்த தொழிற்கழகங்கள் உற்பத்தி செய்து வருகின்றன. எடுத்துக்காட்டாக, சர்க்கரைக்குப் பதிலாக தயாரிக்கப்பட்ட ஒரு மாற்று, வளர்ச்சியடைந்த நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது. அங்கு பயன்படுத்தப்படும் சர்க்கரையில் 40% இந்த மாற்றுப் பொருளேயாகும். பாமாயில் மற்றும் தேங்காய் எண்ணெய்க்குப் பதிலாக சாய் எண்ணெய் என்ற தொழிற்சாலை எண்ணெயைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதன் மூலம் வெப்ப நாட்டு மரபு ரீதியிலான ஏற்றுமதிப் பொருட்களைக் குறைத்து, அதைச் சார்ந்திருப்பதிலிருந்து ஏகாதிபத்திய நாடுகள் விடுபட முடியும். இவ்வாறு, தங்களது மரபு ரீதியான ஏற்றுமதிப் பொருட்களுக்கான வாய்ப்பு குறைவதால், ஏழை நாட்டு விவசாயிகள் வேறு வழியில்லாமல் அதிக சந்தை மதிப்புள்ள பயிர்களான மலர்கள், பழங்கள், காய்கறிகளைப் பயிரிடுவதற்கு நிர்ப்பந்தமாகத் தள்ளிவிடப்படுகின்றனர். இல்லாவிட்டால் நிலமும் வயிறும் காய வேண்டியதான்! உள்நாட்டு விவசாயப் பண்டச் சந்தையை சர்வதேசச் சந்தையோடு இணைப்பது இதனோடு சேர்ந்த நடவடிக்கையே ஆகும்.

### ஏழை நாட்டு அரசுகள் தேசங்கடந்த மயமாதல்

மேல்நிலை வல்லரசுகளின் மறுகாலனியாக்கும் போக்கின் ஒரு கூறுதான் தேசிய அரசுகள் உருமாறி, தேசங்கடந்த (transnational States) அரசுகளாவதாகும். அதாவது இத்தகைய அரசுகள் தீட்டும் பொருளாதார, அரசியல், பண்பாட்டுக் கொள்கைகள், திட்டங்கள் யாவும் சொந்த நாட்டின் தேவைகளை, மக்களின் நலன்களை அடைவதை நோக்கமாகக் கொண்டிராது; மாறாக, தேசங்கடந்த தொழிற்கழகங்களின், மேல்நிலை வல்லரசுகளின் உலகளாவிய உற்பத்தி மற்றும் வர்த்தக நலன்களையும், அரசியல் நோக்கங்களையும் பூர்த்தி செய்வதையே இலக்காகக் கொண்டிருப்பதாகும்.

தேசங்கடந்த மற்றும் பன்னாட்டுத் தொழிற்கழகங்கள், வங்கிகள் ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகளின் அரசுகளைத் தமது அரசியல் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விட்டன. அதாவது, நிதி மூலதனம் தனது இன்றைய கட்ட வளர்ச்சிக்கேற்ப தனது அரசியல் ஆதிக்கம் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளைத் தீர்மானிப்பதற்கு இந்த அரசுகளைப் பயன்படுத்துகின்றது; அதே சமயத்தில், தேசங்கடந்த மற்றும் பன்னாட்டுத் தொழில் கழகங்களும் வங்கிகளும் அரசு ஏகபோக முதலாளித்துவமும் ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகளின் உலகப் பொருளாதார மேலாதிக்கத்திற்கு, மறுகாலனிய ஆதிக்கத்திற்கான புதிய வடிவங்கள் - புதிய ஆயுதங்களாக செயல்படுகின்றன.

சர்வதேசியமயமான மூலதனம், உற்பத்தி மற்றும் உழைப்புப் பிரிவினையையும், மூலதன ஒன்றுகுவிப்பையும் அடிப்படையாகக் கொண்ட புதிய சர்வதேச ஏகபோகங்களாகத் தேசங்கடந்த தொழிற்கழகங்கள் மற்றும் வங்கிகள் உள்ளன. இவற்றின் உலகளாவிய உற்பத்தி மற்றும் உழைப்புப் பிரிவினை அடிப்படையிலான நோக்கங்களை நிறைவேற்றும் கொள்கைகள் மற்றும் திட்டங்களைப் பணிந்து நிறைவேற்றும் அரசுகளாக ஒடுக்கப்பட்ட -



படிப்பகம்

www.padippakam.com

ஏழை நாடுகளின் அரசுகள் மாறிவிட்டன. அரசுகள் மட்டுமல்ல, அரசியலே அவ்வாறு மாறி வருகிறது. இந்த மாற்றமும் ஓர் உலகளாவிய நிகழ்ச்சிப் போக்காகும்.

அதாவது, சர்வதேச உழைப்புப் பிரிவினை அடிப்படையில், உலகு தழுவிய அளவில் நடக்கும் உற்பத்தியில் குறிப்பிட்ட உழைப்புப் பிரிவினையை நிறைவேற்றும் கொள்கைகள், திட்டங்கள், உற்பத்திப் பிரிவுகளையே இந்த அரசுகள் மேற்கொள்கின்றன. அரைக் காலனிய, நவீன காலனிய நாடுகளின் சொல்லப்படுகின்ற போலி தேசிய இறையாண்மை மற்றும் அரசியல் சுதந்திரம்கூட இதில் கரைந்து விடுகின்றன. நேரடியாகவே உலக வங்கி, ஐ.எம்.எஃப்., உலக வர்த்தக நிறுவனம் போன்ற உலக நிறுவனங்களால் கட்டளையிடப்படும் உத்திரவுகளைப் பணிந்து நிறைவேற்றும் அரசுகளாக மாறிவிட்டன. குறிப்பிட்ட உற்பத்தித் துறையில் சர்வதேச உழைப்புப் பிரிவினை அடிப்படையில் தேசங்கடந்த தொழிற்கழகங்கள் நிறுவியுள்ள உற்பத்தி மற்றும் வர்த்தகச் சங்கிலித் தொடரின் ஒரு கண்ணியாகத் தேசிய உற்பத்தி மற்றும் வர்த்தக முறைகளையும் அரசியலையும் மாற்றும் நோக்கத்திற்குச் சேவை செய்யும் கருவிகளாக ஏழை நாடுகளின் அரசுகள் மாற்றப்பட்டு வருகின்றன. தேசங்கடந்த தொழிற்கழகங்களின் உலகந்தழுவிய உற்பத்தி மற்றும் விற்பனை வலைப் பின்னலின் ஒரு பகுதியாக ஏழை நாடுகளின் தேசியப் பொருளாதாரங்களையும் அரசியலையும் இயக்கும் கருவிகளாக ஏழை நாடுகளின் அரசுகள் மாறி விட்டன; அவை தேசங் கடந்த தொழிற்கழகங்களின் வர்த்தக, உற்பத்தி நோக்கங்களை நிறைவேற்றும் பல கருவிகளில் ஒன்றாக மாற்றப்பட்டு விட்டன; தேசியத் தன்மையை முழு அளவில் இழக்கும் அரசுகளாக அவை மாற்றப்பட்டு வருகின்றன. மறுகாலனியாதிக்கத்தின் சமஸ்தான அரசுகளாக அவை ஆக்கப்பட்டு வருகின்றன. அதாவது, இந்தியாவில் ஆங்கிலேய காலனியாதிக்கத்தின் கீழ் இருந்த சமஸ்தான அரசுகள் போல மேல் நிலை வல்லரசுகளின் சமஸ்தான அரசுகளாக ஏழை நாடுகளின் அரசுகள் ஆக்கப்பட்டு வருகின்றன.

எனவே, சர்வதேசப் பொருளாதாரம் மற்றும் தொழில் நுட்ப சக்திகளின் தன்னெழுச்சியான வழித் தடங்களுக்கேற்ப ஏழை நாடுகளின் கொள்கையை உருவாக்கும் மைய நிறுவன அமைப்பும் மாறிச் செல்கின்றது. அதன் சுக்கான் தேசங்கடந்த தொழிற்கழகங்களின் கைகளில் கொடுக்கப்பட்டுள்ளது. சர்வதேசச் சந்தையின் சாட்டைக்கு ஆடும் பம்பரங்களாகத் தேசிய முன்னுரிமைகள் ஆக்கப்பட்டுள்ளன. அதாவது ஒடுக்கப்பட்ட ஏழை நாடுகளின் அபிவிருத்தித் திட்ட இலக்குகளும், தேவைகளைப் பூர்த்தி செய்வதும் தேசங்கடந்த தொழிற்கழகங்களின் உற்பத்தி-வர்த்தக வலைப் பின்னல்களைப் பராமரிப்புச் செய்வதற்காகப் பலி கொடுக்கப்படுகின்றன. இந்த நாடுகளின் அரசுகள் மேற்கூறியவற்றைத் திறம்பட நிர்வாகம் செய்யும் பொறியமைவுகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

## உணவுத் தானியத்தில் தன்னிறைவு உடைப்பு கருமைப் புரட்சிக்கு கதவு திறப்பு

இந்தப் பின்னணியில் சற்றுப் பின் சென்று பசுமைப் புரட்சியைப் பார்ப்பது, குறிப்பாக பசுமைப் புரட்சியை அதன் சித்தாந்த வரலாற்றுப் பின்னணியில் பார்ப்பது அவசியமாகிறது. அப்போதுதான் புதிய விவசாயத்தின் உண்மையான உருவத்தைப் புரிந்து கொள்ள முடியும். இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின், உலகப் பாட்டாளி வர்க்க முகாம் பலமடைந்து சோசலிசமுகாம் உருவாகி, உலகெங்கும் தேசிய விடுதலை இயக்கங்கள் கம்யூனிச இயக்கங்களாக வீறுகொண்டு எழுந்து தாக்கும் நிலையிலிருந்தன. ஏகாதிபத்தியங்கள் நவீன காலனிய ஆதிக்கச் சுரண்டல் என்ற வடிவத்தைப் பிரதானமாக மேற்கொள்ள ஆரம்பித்தன. அந்த கால கட்டத்தில்தான் பசுமைப் புரட்சியை ஏகாதிபத்தியங்கள் உலகம் முழுவதும் திணித்தன. நவீன காலனியச் சுரண்டல் முறையின் ஒரு வடிவமாக பசுமைப் புரட்சி இருந்தது.

இன்று, ஏகாதிபத்திய முகாம் ஒப்பீட்டளவில் தாக்குதல் நிலையிலும், பாட்டாளி வர்க்க இயக்கம் பிளவுண்டு தற்காப்பு நிலையிலும் என்று உலக வர்க்க அணி சேர்க்கை மாறி இருக்கின்றது. இன்றைய கால கட்டத்தில், புதிதாகத் தோன்றியுள்ள மேல்நிலை வல்லரசுகள், ஏழை நாடுகளை ஒடுக்கவும் சுரண்டவும்



படிப்பகம்

www.padippakam.com

பிரதானமாகக் கடைப்பிடிப்பது மறு காலனியா திக்கச் சுரண்டல் வடிவமாகும்; இதன் ஒரு பகுதியாகவே புதிய விவசாயத்தைப் பார்க்க வேண்டும்; ஏழை நாடுகளின் நீர்வளம், நிலவ ளம், கடல் வளம், காடு வளம், மலைவளம் ஆகிய அனைத்து வளங்களையும் நாசப்படுத் திச் சூறையாடும் இந்தக் கொள்கையைக் கரு மைப் புரட்சி என்று சொல்ல வேண்டும். உணவுத் தன்னிறைவே இல்லாமல் ஆக்கி, ஏழை நாடுகளை உணவுக்காக மேல் நிலை வல்லரசுகளிடம் பிச்சையெடுக்கும் நிலைக்குத் தள்ளுவதால் இதை வறுமைப்புரட்சி - பிச் சைப் புரட்சி என்றும் சொல்லலாம்.

இன்னும் சொல்வதென்றால் நவீன கால னியச் சுரண்டல் காலத்தில் கடன் மூலதன ஏற்றுமதி அதிகரித்தது; ஏழை நாடுகள் வாங்கிய கடன்கள் அதிகரித்து, கடன் வலையில் சிக்கிய காலத்திற்குப் பின் மறுகாலனியாதிக்கம் வந் துள்ளது. இன்னொரு பக்கம், அறிவியல் - தொழில் நுட்பப் புரட்சியினால் ஏற்பட்ட மாற்றத்தால், தேசங்கடந்த தொழிற் கழகங்க ளின் வளர்ச்சி - முதிர்ச்சி, - மேல் நிலை வல்லரசுகளின் தோற்றமும் வளர்ச்சியும், உற் பத்தி - விநியோகம் - உழைப்புப் பிரிவினை சர்வதேசியமாதல், இதன் விளைவாக ஏற்பட்ட காட் ஒப்பந்தம், உலக வர்த்தக நிறுவனத்தின் தோற்றம் ஆகியன பசுமைப் புரட்சியை ஒழித் துக் கருமைப் புரட்சியைக் கொண்டு வரக் காரணமாக இருந்துள்ளன.

பசுமைப் புரட்சி காலத்தில் வீரிய ஒட்டு இரக விதைகள், நவீன இரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றை ஏகாதிபத்தி யங்கள் வழங்கின. உற்பத்தியைப் பெருக்குவது நோக்கம் என்று அறிவித்தன. ஏழை நாடுகளி லும் ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழ கங்கள் கட்டவும் உதவின; அந்நாடுகளின் உள்நாட்டு உணவுத் தேவையைப் பூர்த்தி செய் வதையே தன்னிறைவு அடைவதையே, இவை இலக்காகக் கொண்டிருந்ததாகச் சொல்லின. இங்கு தன்னிறைவு என்பது வறுமைக் கோட் டின் கீழே பாதிக்கும் மேற்பட்ட மக்கள் பட்டினியால் வாட, இவர்கள் கைகளுக்கு எட்டாமலேயே தேங்கி நிற்கும் தானியத்தைக் கொண்டு குறிக்கப்படுகிறது என்பதை நினை வில் கொள்ள வேண்டும்.

ஏகாதிபத்தியங்கள் அன்று பசுமைப் புரட் சியைக் கொண்டு வந்ததற்குக் காரணம், ஏழை நாடுகளை வளப்படுத்தி, அந்நாட்டு மக்களின் உணவுத் தேவையைத் தன்னிறைவு கொண்ட தாக மாற்றுவது என்பதற்காக அல்ல; மாறாக, தங்களது வீரிய விதைகளுக்கும், உரம், பூச்சி மருந்துகளுக்கும், விவசாய எந்திரங்களுக்கும் சந்தையை உருவாக்குவதும் பல்வகைப்பட்ட ஏழை நாட்டு பல்லாயிரக்கணக்கான தாவர, பூண்டு வகைகளைச் சேகரித்து, அவற்றின் உயிரணுக்களைச் சேமித்து ஏகபோகமாக்கிக் கொள்வதும் தான் அவற்றின் குறிக்கோள்க ளாக இருந்தன. எனினும், இவற்றில் ஏழை நாடுகளின் அரசுகளும் பங்கேற்றன; தங்கள் பங்கிற்கு மானியங்கள், சலுகைகள் அளித்து ஆராய்ச்சிக்கு உதவியும், விவசாய உற்பத்தி யைப் பெருக்க முயற்சிகள் எடுத்துக் கொண் டன என்பதைப் பார்க்கத் தவறக் கூடாது.

ஏழை நாடுகள் கடன் வலையில் சிக்கும் வரையிலும் இந்த பசுமைப் புரட்சி தொடர்ந் தது. சொகுசு உணவுகளையும் கச்சாப் பொருட் களையும் தேயிலை, காபி, கோகோ முதலிய தோட்டப்பயிர்களையும் ஏகாதிபத்திய நாடுக ளுக்கு அளிப்புச் செய்யும் நாடுகளாக ஏழை நாடுகள் பசுமைப் புரட்சி வரையிலும் இருந் தன. பசுமைப் புரட்சி இந்த நிலையை மாற்றி, உணவு தானிய உற்பத்தியை உள்நாட்டில் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

தேசங்கடந்த தொழிற் கழகங்களின், மேல் நிலை வல்லரசுகளின் தோற்றமும் வளர்ச்சி யும், காட் ஒப்பந்தமும் பெற்றெடுத்துள்ள கருமைப் புரட்சி ஏழை நாடுகளின் விவசா யத்தை தற்போது பழைய காலனிய கால கொள்ளை முறைக்கு ஆளாக்கியுள்ளது.

காலனிய ஆதிக்கம் ஏற்படும் முன்பு ஏழை நாடுகள் உணவு தானிய உற்பத்தியில் சுயதேவைப் பூர்த்தியடைவனவாக இருந்தன; சுயதேவைப் பூர்த்தியடைந்த கிராமச் சமூகங்க ளைக் கொண்ட இந்தியா இதற்கு ஓர் எடுத்துக் காட்டு. ஆங்கிலேய காலனியாதிக்கவாதிகள் இந்தியாவைக் கைப்பற்றி சுயதேவைப் பூர்த்தி



படிப்பகம்

www.padippakam.com

யடைந்த கிராம சமூகங்களை உடைத்தெறிந்தனர். அணைகள், குளங்கள், கால்வாய்களை வெட்டி, அவைகளை மராமத்துப் பார்த்து, தண்ணீரை முறை வைத்துப் பாய்ச்ச அரசனும் கிராமச் சமூகமும் செய்திருந்த ஏற்பாட்டைப் புதிதாக அரசு அதிகாரத்தில் அமர்ந்த ஆங்கிலேயர்கள் செய்யத் தவறினர். ஜமீன்தாரி போன்ற நிலவரி வசூல் முறையைப் புகுத்தினர். உணவு உற்பத்தியில் இருந்த சுயதேவை பூர்த்தியடையும் நிலையைத் தகர்த்தது, அதாவது, கிராமச் சமூகங்களின் பொருளாதார அடிப்படையைத் தகர்த்தது, பொதுச் சொத்துடைமையினிடத்தில் தனிச் சொத்துடைமையைப் புகுத்தியது என்ற சமுதாயப் புரட்சியை ஆங்கிலேய காலனியாதிக்கவாதிகள் - நிதியாதிக்க உயர்குடியினரான கிழக்கிந்தியக் கம்பெனிக்காரர்கள் - செய்து முடித்தனர். இதனைச் சமூகப் புரட்சி என்றார் மார்க்ஸ்.

ஜமீன்தாரி முறையைப் புகுத்திய போது 'கிராமப்புற மக்களிலேயே ஜமீன்தார்கள்தான் மிகவும் கற்றறிந்தவர்கள்; அவர்களுக்கு நிலச் சொத்துடைமையையும் உரிமையையும் உறுதி செய்து, நிலத்தை அபிவிருத்தி அடையச் செய்வதோடு, சிறந்த விவசாயத்தையும் பெற முடியும்', என்றே காலனியாதிக்கவாதிகள் கதை கட்டினர். உண்மையில் விவசாயம் மட்டுமல்ல, கிராமத் தொழில்களும் சீரழிந்தன. விவசாயம் ஸ்தலத்திலில்லாத நிலப்பிரபுத்துவ முறையாகக் (absentee landlordism) கெட்டொழிந்தது. கிராமமே ஸ்தலத்திலில்லாத நிலவுடைமையாளர்கள் மற்றும் உடைமையில்லாத விவசாயிகள் என்று இரு விவசாய வர்க்கங்களாகப் பிரிந்தது. அரசுக்கும், உண்மையாக உழைப்பவர்க்கும் இடையில் எக்கச்சக்கமான குத்தகையைக் கறப்பதில் மட்டுமே அக்கறை கொண்ட இடைத் தரகர்களை இந்த முறை உருவாக்கியது; காலனிய அரசு இந்தியாவின் கச்சாப் பொருட்களைக் கொள்ளையடிப்பதிலும் நிலவரி வசூலிலும் மட்டுமே அக்கறை செலுத்தியது. தன் தொழிலுக்குத் தேவையான அவுரி போன்ற பண்டப் பயிர்களைப் பயிரிடச் சொல்லிக் கட்டாயப்படுத்தி விளைவிக்கச் செய்து, குறைந்த விலைக்குக் கொள்முதல் செய்து கொண்டது.

ஒரு புறம், பொது மராமத்துப் பணிகளைப் புறக்கணித்து விவசாயத்தைச் சீரழித்ததோடு, மற்றொருபுறம் அனாதிகாலந்தொட்டு சிறந்து விளங்கிய நூற்பு மற்றும் நெசவுத் தொழில் நீராவியின் சக்தியின் மூலமும் வர்த்தக சுதந்திரம் ஆற்றிய வினையாலும் நசுக்கப்பட்டது. இந்த இரு நடவடிக்கைகள் மூலம் இந்திய சமுதாயத்தின் முழு அமைப்பையும் ஆங்கிலேய காலனியாதிக்கவாதிகள் சின்னாபின்னமாக்கியதையும் புத்தமைப்பிற்கான அறிகுறி ஏதுமின்றி இந்தியாவில் நிலவிய எண்ணற்ற சிறு சமூகங்களின் சுயதேவைப் பூர்த்தியடையும் பொருளாதார அடிப்படைகளைத் தகர்த்தெறிந்ததையும்தான் ஆசியாவிலேயே மிகப் பெரியதும் முதலாவதுமான சமூகப் புரட்சி என்றார் மார்க்ஸ்.

அன்று காலனியாதிக்கவாதிகள் செய்ததைத்தான், இன்று மறுகாலனியாதிக்கவாதிகள் உயர்ந்த தளத்தில் புதிய பரிமாணங்களோடு வேறொரு தொடக்கப் புள்ளியிலிருந்து தொடங்கிச் செய்கிறார்கள். இன்றும் சுயதேவைப் பூர்த்தி ஒழிக்கப்படுகிறது. நீராவி என்ஜினுக்குப் பதிலாக கணிப்பொறிகளும் தகவல் தொடர்பு சாதனங்களும் அடங்கிய அறிவியல் தொழில் நுட்பப் புரட்சியின் கருவிகள்; வர்த்தகச் சுதந்திரத்திற்குப் பதிலாக தாராளமயம், தனியார் மயம், உலக மயம், காட் ஒப்பந்தம், மற்றும் உலக வர்த்தக நிறுவனம். நிலப்பிரபுத்துவத் தனி அரசுகளை ஒழித்துவிட்டுத் தங்களுக்கு அடிபணியும் சமஸ்தானங்களை அன்று காலனியாதிக்கவாதிகள் கட்டியமைத்தனர். இன்று மேல்நிலை வல்லரசுகளுக்கு ஏழை நாடுகள் ஒவ்வொன்றும் அன்றைய நிலப்பிரபுத்துவத் தனி அரசு போலத் தெரிகின்றது; எனவே அவற்றை ஒழித்து சமஸ்தானங்களைக் கட்டியமைக்க முயல்கிறது. அன்று ஜமீன்தார்கள்; இன்று தேசங்கடந்த தொழில் கழகங்கள். ஆனால் இவர்கள் நிலத்தைக் குத்தகைக்குக் கொடுப்பவர்கள் அல்ல, எடுப்பவர்கள். விவசாயிகள்தான் கொடுப்பவர்கள். அன்று வணிகத்தை அடிப்படையாகக் கொண்ட நிதியாதிக்க உயர் குடியினர்; இன்று அதே நிதியாதிக்கக் கும்பல்கள்; நாடுகளையே விலை பேசும் அளவிற்கு மீப்பெரும் நிதியாதிக்கக் கும்பல்கள்; மற்றும் உலக வங்கியும், ஐ.எம்.எஃப்-ம்.



படிப்பகம்

www.padippakam.com

ஆங்கிலேய காலனியாதிக்கவாதிகள் அன்று செய்தது அழிவுப் பணியேயாயினும், இழிந்த நோக்கங்களால் தூண்டப்பட்டிருப்பி னும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தேங்கி, மோன நிலையில் இருந்த இந்தியச் சமுதாயம் அடுத்த கட்டத்திற்குச் செல்ல அந்த நடவடிக் கைகள் வழி வகுத்தமையால்தான் அதனை சமுதாயப் புரட்சி என்று மார்க்ஸ் வரையறுத் தார். இன்றும் மேல்நிலை வல்லரசுகளும், தேசங்கடந்த தொழிற்கழகங்களும் இலாப வெறி எனும் இழிந்த நோக்கங்களால் தூண்டி விடப்பட்டுள்ளனர்; அவர்கள் செய்யப் போவ தும் அழிவுப் பணிதான். எனினும் இது இந்தியாவைத் தற்போது இருக்கின்ற நிலையி லிருந்து இன்னும் மோசமான நிலைமைக்குத் தான் கொண்டு செல்லும் என்பதால், புத்தாக்கத் திற்கான அறிகுறியின்றி படுகுழியில் தள்ளப் பட இருப்பதனால், மேல் நிலை வல்லரசுக ளின் கூடுதல் கொள்ளைக்கு கிராமப்புறங்கள் மேலும் சுரண்டப்பட இருப்பதால், இயற்கை வளங்களையும், மனித வளத்தையும், சுற்றுச் சூழலையும் என்றுமில்லாத அளவுக்குச் சுரண் டுவதோடு, சூறையாடி நஞ்சாக்கி, நாசமாக்கி, பாலையாக்கி மனித இனம் வாழ முடியாமல் ஒழிக்கப் போவதால், இதனை கருமைப்பு ரட்சி, தரித்திரப் புரட்சி, வெறுமைப் புரட்சி, ஓட்டாண்டியாக்கும் புரட்சி, அழிவுப் புரட்சி என்று பல பெயர்களால் அழைக்கப்படும் கொடிய பிரளயமாக இது இருக்கின்றது.

### கருமைப் புரட்சியின் கூறுகள்

கருமைப் புரட்சியின் சித்தாந்தமும் அதன் நிறுவன வடிவமும் மூன்று வகையான மாற்றங் களை விவசாயக் கொள்கையில் கொண்டு வந்துள்ளன. அவை, 1. உணவு ஏற்றுமதிக்குப் பொருளாதார மானியங்கள். 2. அரசு சேவைக ளுக்குப் பதிலாக ஒப்பந்த விவசாய முறை யைப் புகுத்துதல். 3. விவசாயத் தொழில் நுட்பங்களைப் புகுத்துவதிலும் வளர்ப்பதிலும் தனியார் துறையை அதிகமாக ஈடுபடுத்துதல்.

#### 1. அந்நிய நாட்டு மக்களுக்கு மானிய விலையில் வளங்கள் ஏற்றுமதி

பசுமைப் புரட்சி காலத்தில், ஏழை நாடுக ளின் அரசாங்கங்கள் விவசாயிகளுக்கு விலை ஆதரவுக் கொள்கையை வழங்கின. நீர்ப்பாச னம், சாலை, உரங்கள் முதலியவற்றுக்கு மானியங்கள் வழங்கி, புதிய விதைகளையும் தொழில் நுட்பங்களையும் விவசாயிகள் பயன் படுத்த ஊக்கம் அளித்து வந்தன. பசுமைப் புரட்சியின் கீழ் இவை நல்ல பயனை ஒரு பக்கம் தந்தன. ஆனாலும் புதிய பொருளாதா ரக் கொள்கை மற்றும் காட் ஒப்பந்தங்களால் வருகின்ற கருமைப் புரட்சி தேசங்கடந்த தொழில் கழகங்களுக்கு உள்ளீடு பொருட் களை வழங்கவும் ஏற்றுமதிக்கான விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்யவும்தான் அதிக மாக முக்கியத்துவம் அளிக்கிறது. மெக்சிகோ நாடு இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

மெக்சிகோவில் நிலச்சீர்திருத்தமும், பசு மைப் புரட்சியும் நீர்ப்பாசனமுள்ள பகுதிகளில் கோதுமை, மக்காச்சோளம் ஆகியவற்றின் விளைச்சலை வியக்கத்தக்க அளவு பெருக்கி யது. பின்னர் அமெரிக்கச் சந்தையைக் குறி வைத்து புத்தம் புதிய பழங்கள், காய்கறிகள், கால்நடைத் தீவனம், கால்நடைகள் ஆகிய வற்றை ஏற்றுமதி செய்யும் மெக்சிகோ அரசு, தனது பொருளாதாரக் கொள்கையை மாற்றிய மைத்தது. இதன் விளைவாக இலாப நோக்கே விவசாயிகளின் விருப்பத்தைத் தீர்மானித்தது; அதிக இலாபம் தராத உணவுப் பொருட்கள் மற்றும் மரபு ரீதியான பயிர்களைப் பயிர் செய்வதைக் கைவிட்டு விட்டு, வெளிநாட்டுச் சந்தையில் நல்ல விலைக்குப் போகும், இலா பப் பயிர்களை பயிரிட முனைந்தனர். இதன் விளைவாக 1950-களில் 'சோர்கம்' என்ற கால்ந டைத் தீவனம் பற்றி ஒன்றுமே அறியாது இருந்த மெக்சிய விவசாயிகள் சோர்கம் அதிக மாகப் பயிரிடத் தொடங்கினர்; சோர்கம் உற் பத்தி முதலிடத்தைப் பெற்றது; இதனால் உணவு தானிய உற்பத்தி குறைந்து அவற்றை இறக்குமதி செய்ய நேர்ந்தது. ஏற்றுமதியில் கிடைத்த டாலர்களை மெக்சிகோ அரசு இதற் குப் பயன்படுத்தியது; உணவுப் பொருள் பற்றாக்குறையினால் மக்களிடையே ஏற்படும் அதிருப்தியைச் சமாளிக்க, நகரத்து மக்களுக்கு உணவுப் பொருட்களுக்குப் பெருமளவு மானி யம் கொடுத்தும், சிறிய விவசாயிகளுக்கு கடன்களும் சந்தையில் பொருட்களை விற்க உதவியும் மெக்சிகோ அரசு செயல்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

மேலும், 1986-லிருந்து உலக வங்கியின் கட்டளைப்படி மெக்சிகோ நாடு மேற்கொண்ட கட்டுமானச் சீர்திருத்தத் திட்டத்தின் படி மெக்சிகோ அரசாங்கம் விவசாயிகளுக்கு அளித்து வந்த உணவு தானிய மானியங்களை ஒழித்தது; அரசு முகமை நிறுவனங்களைத் தனியார்மயமாக்கியது; உள்நாட்டில் விவசாயப் பொருட்களின் விலைக்கட்டுப்பாடுகளை நீக்கியது. கட்டுப்படியாகும் விலை கொடுப்பதை நிறுத்தியது; உரம், பூச்சி மருந்து போன்ற உள்ளீடுப் பொருட்களுக்கான மானியங்களை வெட்டியது; விவசாய அமைச்சரவையின் கீழ் வேலை செய்தவர்களில் பலரை வேலையை விட்டு நீக்கியது. இவ்வாறு கிராமப்புறத்திலிருந்து அரசு பின்வாங்கியது; தனது முதலீடுகளைப் பெருமளவு குறைத்தது. அதாவது கருமைப் புரட்சி காலத்தில் தேசங்கடந்த தொழிற்கழகங்களின் நலன்களுக்காகவும் உலகச் சந்தையில் நேரடியாக இணைக்கப்பட்டு அதற்குச் சாதகமாகவும் தேசிய வளர்ச்சிக் கூறு பலி கொடுக்கப்பட்டது என்பதைப் பார்க்க முடியும்.

இன்னோர் எடுத்துக்காட்டு டொமினிக்கன் குடியரசாகும். நூற்றாண்டுகளாக இந்த நாடு சர்க்கரை ஏற்றுமதியையே சார்ந்திருந்தது; ஆனால், சர்க்கரைக்குப் பதிலாக புதிய இரசாயனப் பொருட்களைத் தேசங்கடந்த தொழிற்கழகங்கள் பயன்படுத்த ஆரம்பித்ததால், ஏற்றுமதிச் சந்தை விழுந்தது; எனவே, மரபுவழி சந்தைப் பொருட்களை ஏற்றுமதி செய்ய அந்நாடு தள்ளப்பட்டது; கூடவே, கட்டுமானச் சீர்திருத்தக் கடன் வாங்கியதால், உலக வங்கியும் விவசாயத்தை ஏற்றுமதிக்குச் சாதகமாகத் திசையமைக்கும்படி நிர்ப்பந்தித்தது. எனவே, உள்நாட்டு உணவு உற்பத்திக்கு அளித்து வந்த ஆதரவை அந்நாடு விலக்கிக் கொண்டது. மேலும், அன்னாசிப் பழங்களை ஏற்றுமதி செய்ய சிகுடா, டோல் போன்ற அமெரிக்க தேசங்கடந்த தொழிற்கழகங்கள் உட்பட அந்நிய வேளாண் வர்த்தகக் கம்பெனிகளுக்கு 10,000 ஹெக்டேர் அரசு நிலங்களை குறைந்த தொகைக்கு வாடகைக்கு விட்டது. இவ்வாறு அரசுத் துறையானது தனது கொள்கைகள், நடவடிக்கைகள் மூலம் சர்வதேசச் சந்தை நலன்களுக்குச் சேவை செய்தது. அரசுத் துறையை விலக்கி விட்டு அந்த இடத்தில் தனியார் துறை முற்றாக வரவில்லையெனினும், இந்த மாதிரியான கொள்கை மாற்றங்கள் கானா, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளிலும் ஏற்பட்டு வருகின்றன; விவரங்களில் மாறுபட்டாலும் அடிப்படையில் இவை ஒன்றே.

இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி பற்றி ஆராய்ந்த டி. கிருஷ்ணகுமார் மற்றும் அசோக் மித்தல் ஆகியோர் (எகானாமிக் அண்ட் பொலிடிகல் வீக்லி - டிச. 2. 1995) கீழ்க்கண்ட உண்மையை நிலை நாட்டியுள்ளனர். உள்நாட்டு உற்பத்தியில் உள்நாட்டு நுகர்வுக்காக பெரும்பகுதி செலவிடப்படும் சரக்குகள் மற்றும் அத்தியாவசியமான விவசாயப் பண்டங்கள், எடுத்துக்காட்டாக, தேயிலை மற்றும் உணவுப் பொருட்களின் ஏற்றுமதி குறுகிய மற்றும் நடுத்தர காலக் கட்டங்களில் அதிகரிக்காது. அதே வேளையில் நுகர்வுக்கு ஏற்ப உற்பத்தி அதிகரித்தால் மட்டும் ஏற்றுமதியை அதிகரிக்க முடியும் என்பதே அந்த உண்மை; இந்நிலையில் தேயிலையின் உள்நாட்டுச் சந்தை விலையையும் சர்வதேசச் சந்தை விலையையும் ஒன்றாக இணைத்தால், விவசாயப் பண்டங்களைச் சுதந்திரமாக ஏற்றுமதி செய்ய அனுமதித்தால், உள்நாட்டு விலைகள் சர்வதேச விலைக்கு உயர்வது உறுதி. ஏனென்றால் நம் போன்ற ஏழை நாட்டு நாணயங்களின் மதிப்பு குறைந்து கொண்டே போகின்றது. எனவே, விவசாயப் பண்டங்களின் வாணிகத்தைத் தாராளமயமாக்கினால், அது உள்நாட்டு உற்பத்தியிலோ, ஏற்றுமதியிலோ அதிகரிப்பு நடக்காமலேயே உள்நாட்டு விலைகள் கட்டாயம் ஏறும் என்று ஆய்வின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் உணவுத் தானிய உற்பத்தியின் அளவு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்தாலும், ஒரு தனி மனிதனுக்குச் சராசரியாக நுகர்வுக்கு கிடைக்கும் உணவுத் தானியத்தின் அளவு (மொத்த உணவுத் தானிய உற்பத்தி அளவை மக்கட் தொகையால் வகுத்தால் வரும் அளவு) குறைந்து கொண்டு போகின்றது என ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஏறத்தாழ 3 கோடி டன் உணவுத் தானியங்கள்,



படிப்பகம்

www.padippakam.com

மக்களிடையே வாங்கும் சக்தி இல்லாமையால் அரசு கிட்டங்கிகளில் தேங்கிக் கிடக்கின்றன. உணவுத் தானியங்களை உள்நாட்டு மக்களுக்கு சலுகை விலையில் விற்கக் கூடாது என்ற உலக வங்கியின் உத்திரவுப்படி, அரசு தேங்கிக் கிடக்கும் 3 கோடி டன் உணவுத் தானியங்களை விற்காமல், அதே வேளையில் மானியம் கொடுத்து ஏற்றுமதி செய்கிறது; குறிப்பாக, உயர்ரக அரிசியான பாசுமதி அரிசி மற்றும் கோதுமையை ஏற்றுமதி செய்கிறது. 1991 ஏப்ரல் - 1992 மார்ச் வரை அரசாங்கம் 5 லட்சம் டன் கோதுமையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 280 என்ற விலைக்கு விவசாயிகளிடம் வாங்கி, ரூ. 215 என்ற விலைக்கு ஏற்றுமதி செய்தது. அதாவது குவிண்டாலுக்கு ரூ. 65 மானியம் கொடுத்து ஏற்றுமதி செய்தது. 1992 நவம்பரில் உணவுத் தானியப் பற்றாக்குறை என்று சொல்லி 30 லட்சம் டன் கோதுமையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 526 என்ற விலையில் இறக்குமதி செய்தது. இப்படி அந்நிய நாட்டினருக்கு மானியம் கொடுத்து ஏற்றுமதி செய்கின்றது.

இன்னொரு பக்கம் அண்மையில் சர்க்கரை உற்பத்தி அதிகரித்தபோது சந்தையைத் திறந்து விடுதல் என்ற தனது கொள்கைப்படி மத்திய அரசு சர்க்கரையைச் சந்தையில் தாராளமாக அனுமதிக்காமல் கட்டுப்படுத்தியது. காரணம் குறிப்பிட்ட மட்டத்திலேயே அதன் விற்பனை விலையை நிலை நாட்டவும், அதன் மூலம் சர்க்கரை ஆலை முதலாளிகளின் இலாபம் குறையாமல் பாதுகாக்கவும் தான். அரவைத் திறனையோ, சர்க்கரை ஆலை எண்ணிக்கையையோ அதிகரிக்காமல், 18 மாதங்கள் ஆகியும் கூட சர்க்கரை ஆலைகள் கரும்பை வெட்டாமல் விவசாயிகளைப் போண்டியாக்கியதற்கு அரசே உடந்தையாக இருந்தது. புதிய விவசாயக் கொள்கைப்படிச் சர்க்கரையை ஏற்றுமதி செய்ய முடியாது. தமிழ்நாட்டில் மட்டும் சுமார் ரூ. 800 கோடி அளவிற்குச் சர்க்கரை விற்க முடியாமல் இருப்பு இருக்கின்றது என்று தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் கு.ப. கிருஷ்ணன் தெரிவித்தார். மேலும், ''சர்க்கரையை இப்போது ஏற்றுமதி செய்யவும் முடியாது. பெரிய அளவில் இருப்பு வைக்கவும் முடியாது என்றாலும் சர்க்கரை இறக்குமதி செய்யப்படுகின்றது'' என்றும் அவர் தெரிவித்தார். (தினமணி - டிச. 1995) புதிய விவசாயத்தின் கொடூரத் தன்மைக்குச் சாட்சியம் அளிப்பதாக இது இருக்கிறது.

### 2. தேசங்கடந்த தொழிற்கழகங்கள் சொல்வதையே பயிரிடு; தேசங்கடந்த தொழிற்கழகங்கள் வைத்ததே விலை

இரண்டாவது, ஒப்பந்த முறையில் பயிரிடுவதாகும். பசுமைப் புரட்சி காலத்தில் இரண்டு தேசியக் கொள்கைகள் பின்பற்றப்பட்டன. ஒன்று, ஸ்தல சுற்றுச்சூழல், சமூக விருப்பங்கள், மூலாதாரங்கள் இவற்றிற்கேற்ப பயிர் வகைகள் உருவாக்கப்பட்டன. இரண்டு, அரசு முகமைகள் மூலம் விவசாயிகளுக்கு நிதி மற்றும் தொழில் நுட்பச்சேவைகள் வழங்கப்பட்டன. கருமைப் புரட்சியில் இவ்விரண்டு கொள்கைகளையும் 'தேசிய' அரசுகள் வேளாண் வர்த்தகத் தொழில் கழகங்களின் கைகளில் ஒப்படைக்கிறது. இதன் விளைவாக இந்த தொழில் கழகங்கள் ஒப்பந்தப் பயிரிடுதல் முறையைக் கிராமப்புறங்களுக்குக் கொண்டு வருகின்றன. இந்த முறையில் ஒப்பந்தம் செய்யும் கம்பெனி எல்லா சேவைகளையும் உள்ளீடுகளையும் - விதைகள், விவசாய இரசாயனங்கள், நிதி, சந்தை வசதிகள் ஆகியவற்றை - முன்பு அரசு நிறுவனங்கள் மானிய விலையில் தந்தவற்றை இப்போது சந்தை விலையில் தரும். உலகச் சந்தைப் போட்டியின் மாறும் சிக்கலான இலாப நிலைமைகளுக்கேற்ப, பயிரிடுவதற்கு நிலத்தைப் பயன்படுத்துவதுதான் ஒப்பந்த பயிரிடுதலாகும். தேசங் கடந்ததொழில் கழகங்களால் உலகையே ஓர் அலகாக வைத்துக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்ற உழைப்புப் பிரிவினை - வேலைத் திட்டத்தில் ஏழை நாட்டு விவசாயத்தை இது கொண்டு வரும். புதிய பயிர்த் தொழில் நுட்பங்கள், உழைப்பு முறைகள் ஆகியவற்றைப் புகுத்துவதாகும். வேளாண் வர்த்தகக் கழகங்களில் மேலும் மூலதனத்தைக் குவிப்பதாகும். வேளாண் வர்த்தகத் தொழில் கழகங்களின் மூலதனம் மூலம் கிராமப்புற உற்பத்தி முறைகளை, தொழில் உற்பத்தி



படிப்பகம்

www.padippakam.com

முறையாக மாற்றுவதன் மூலம் கிராமப்புறச் சுரண்டலை மேலும் தீவிரப்படுத்தும் முறையாகும்.

மேலும், உலக நிதி நிறுவனங்களால் இந்த முறை பலமாகப் பரிந்துரைக்கப்படுகின்றது. எடுத்துக் காட்டாக, உலக வங்கியுடன் சேர்ந்து பிரிட்டன் காமன்வெல்த் அபிவிருத்திக் கழகம் ஏழை நாடுகளில் பாமாயில், கோகோ மற்றும் இரப்பர் பயிர்களை வளர்ப்பதில் முன்னுரிமைப் பாத்திரம் வகித்துள்ளது. தனியார் மட்டுமல்ல, அரசு நிறுவனங்கள் தேசங்கடந்த தொழில் கழகங்களின் ஒப்பந்தக்காரர்களாக இருந்து செயல்படுவது ஒப்பந்தப் பயிரிடுதலின் ஓர் அம்சமாகும். கென்யாவில் தேயிலை உற்பத்தி, மலேசியாவில் இரப்பர், பிலிப்பைன்சில் பாமாயில் உற்பத்தி போன்றவை இம்முறையில் ஒப்பந்தம் செய்யப்பட்டவையே. இவை ஏழை நாட்டு அரசுகளுக்கு வசதியாக உள்ளன. ஏனெனில் விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து வாழ வைக்கிறோம் என்று சொல்லிக் கொண்டே கிராமப் புறத்திலிருந்து பின் வாங்குவதற்கு ஒப்பந்தப் பயிரிடுதல் முறை அரசுகளுக்கு மிகவும் வசதியாக இருக்கின்றது.

தேசங்கடந்த தொழில் கழகங்கள் ஏழை நாட்டு அரசாங்கங்களிடமிருந்து வாடகைக்குப் பெற்ற நிலத்தில் வேலை செய்ய விவசாயிகளை ஒப்பந்தம் செய்து கொள்வது ஒரு முறையாகும். இன்னொரு முறை தேசங்கடந்த தொழிற்கழகங்கள் தாங்கள் சொல்கின்ற பயிரைப் பயிர் செய்யச் சொல்லி விவசாயிகளிடம் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு, விளைச்சலை வாங்கிக் கொள்வதாகும். இரண்டு முறைகளிலும் தேசங்கடந்த தொழில் கழகங்கள் அளவு, தரம், உள்ளீடுகள், உற்பத்தி முறை மற்றும் சந்தைக்கான வாய்ப்பு ஆகியவற்றை முழுமையாகத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு விவசாயிகளைத் தங்கள் விருப்பம் போல ஆட்டிப் படைக்க முடியம். உள்ளூர் வணிகர்களும் அந்நியக் கம்பெனிகளும் சேர்ந்துள்ள கூட்டுப் பங்கு நிறுவனங்களுக்காகவோ அல்லது ஏற்றுமதியாளர்களுக்காகவோ உள்ளூர் வணிகர்கள் விவசாயிகளை ஒப்பந்தம் செய்து கொள்வதும் இன்னொரு முறையாகும். இந்தியாவில் கூட பெப்சி கம்பெனி இரண்டு இந்திய நிறுவனங்களோடு - ஒன்று தனியாருடையது; மற்றொன்று அரசு நிறுவனம் - சேர்ந்து ஒரு கூட்டுப்பங்கு நிறுவனத்தை ஆரம்பித்தது. அதன் மூலம் பஞ்சாப் மாநிலத்தில் காய்கறிகள் பயிரிட இந்திய விவசாயிகளை ஒப்பந்தம் செய்துள்ளது.

இவ்வாறு ஒப்பந்தப் பயிரிடுதல் முறை, உற்பத்தியிலிருந்து அதன் தேசியத் தன்மையை இழக்கச் செய்கிறது. உற்பத்தியின் கட்டுப்பாட்டை ஸ்தலத்திலிருந்து, விவசாயிகளிடமிருந்து, வேளாண் வர்த்தகத் தேசங்கடந்த தொழில் கழகங்களுக்கு மாற்றுவதன் மூலம் இவ்வாறு ஆகிறது. என்ன உற்பத்தி செய்வது, எவ்வளவு, எந்த முறையில் உற்பத்தி செய்வது, யாருக்காக உற்பத்தி செய்வது என்பது பற்றிய முடிவுகள் உலக சரக்குச் சந்தையின் ஏற்றத் தாழ்வுகளால்தான் இறுதியாக்கப்படுகின்றன. உள்நாட்டுச் சந்தை நிலவரங்களோ அல்லது தேவைகளோ, தேசிய அரசின் திட்டங்களோ இவற்றைத் தீர்மானிப்பதில்லை. எனவே இதனோடு சேர்ந்து, உண்வின் சுவை மற்றும் அது உட்கொள்ள ஏற்புடையதுதானா என்பதைப் பற்றிய கட்டுப்பாட்டு முடிவுகளும் - உணவுப் பாதுகாப்பு முறைகள், தானியங்கள், காய்கறிகள், பழங்களில் தங்கியுள்ள இரசாயன உரத்தின் அளவு, பதப்படுத்தும் முறைகளும் அதற்குப் பயன்படுத்தும் இரசாயனங்களும்; காய்கறிகள், பழங்கள் போன்றவற்றின் உருவம் ஆகியவற்றைத் தீர்மானிக்கும் உரிமையும் - உள்ளூர் அரசுகளிடமிருந்து தேசங்கடந்த தொழிற்கழகங்களால் பறிக்கப்பட்டு விடுகின்றன. ஏற்றுமதி செய்யப்படுகின்ற நாட்டின் சுற்றுச் சூழல் நிமைமைகளைப் பூர்த்தி செய்ய முடியாததால், ஏற்றுமதிக்கான உணவு, பழங்கள், காய்கறிகள் நிராகரிக்கப்பட்டதுண்டு; இம்மாதிரியான சமயங்களில் ஒப்பந்தக்காரர்கள் உள்ளூர் விவசாயிகளிடமிருந்து வாங்குவதை நிறுத்தி விடுவதுண்டு; இதனால் விவசாயிகள் பெருத்த நட்டமடைந்துள்ளார்கள்.

மேலும், புதிய தொழில் நுட்பங்களை சோதித்துப் பார்ப்பதற்கான ஊடகங்களாக ஒப்பந்தப் பயிரிடும் முறை தேசங்கடந்த தொழிற்கழகங்களால் பயன்படுத்தப்பட முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

இந்த தொழில் நுட்பங்கள் உள்ளூர் அரசுகளின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாக இருக்கின்றன. இந்தக் கழகங்கள் தமது சொந்த விதைகள் இரசாயனங்களையே விவசாயிகள் பயன்படுத்த வேண்டுமெனக் கட்டாயப்படுத்தி அமுல் நடத்துகின்றன. எடுத்துக்காட்டாக, தனது பதப்படுத்தும் முறைக்கு உள்ளூர் தக்காளி இரகங்கள் ஏற்புடையது அல்ல என்று இந்திய பெப்சி கம்பெனி அறிவித்தது. தானே தயாரித்த உயிரின ரீதியிலான தக்காளி விதைகளை 107 உள்ளூர் விவசாயிகளிடம் கொடுத்து 1600 ஹெக்டேர் நிலங்களில் பயிரிடுமாறு செய்தது.

மேலும் பசுமைப் புரட்சிக் காலங்களில் அரசு அறிவித்த பல்வேறு சலுகைகள், மானியங்களைப் பணக்கார விவசாயிகளும் நிலப்பிரபுக்களுமே பெருமளவு பயன்படுத்திக் கொண்டார்கள் என்ற போதிலும், இந்த மானியங்கள், சலுகைகளின் நோக்கம் சிறு, நடுத்தர விவசாயிகளை மேம்படுத்துவதுதான் என்று பொதுவாகத்தான் முன் வைக்கப்பட்டன; ஓரளவிற்கு அதில் சிறிய, நடுத்தர விவசாயிகள் பயனடைந்தார்கள் என்பதும் உண்மை. ஆனால் ஒப்பந்தப் பயிரிடுதல் முறையில் இம்மாதிரியான எவ்வித நோக்கமும் கொள்கையளவில்கூட இல்லை. எனவே ஒப்பந்தப் பயிரிடுதல் முறையில் முழுக்க முழுக்கப் பணக்கார விவசாயிகளும், நிலப்பிரபுக்களும், ஏற்கனவே நன்கு நிலை நாட்டப்பட்ட பயிரிடும் முறைகளை வைத்துள்ளவர்கள் தான் பயனடைவார்கள். ஏழை நடுத்தர விவசாயிகள், தேசங்கடந்த தொழில் கழகங்கள் கொடுக்கும் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. அரசாங்கம் தங்களது சேவையை நிறுத்திக் கொள்வதால் இவர்களின் நிலை ஏற்கனவே இருந்ததைவிட மோசமாகும். கூலி விவசாயிகளின் நிலையோ எப்போதையும் விட மோசமாகப் போகும்; ஏனென்றால் வேலை வாய்ப்பு இன்னும் குறையும்.

### 3. எல்லாம் தனியார் துறை கொள்ளைக்கே

விவசாய ஆராய்ச்சியில் தனியார் துறைக்கு, குறிப்பாக, தேசங்கடந்த தொழில் கழகங்களுக்கு ஆதிக்கமும் மேலாண்மையும் அளித்தலாகும். ஏகாதிபத்திய நலன்களுக்காக ஏகாதிபத்தியங்களால் பசுமைப் புரட்சித் திட்டம் கொண்டு வரப்பட்டிருந்தது. அதனால் நிலப்பிரபுக்கள், தரகு முதலாளிகள், பணக்கார விவசாயிகளே பெரும்பாலும் ஆதாயம் அடைந்திருந்தனர்; இருப்பினும், சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனங்கள், மற்றும் ஏழை நாடுகளின் அரசாங்க ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகிய பொதுத்துறை நிறுவனங்கள் புதிய விதைகளையும் பயிரிடும் முறைகளையும் கண்டுபிடிப்பதிலும் பரப்புவதிலும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதிலும் பெரும் பங்காற்றின. ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து புதிய தொழில் நுட்பங்கள், பயிற்சிகள் வந்திருந்தாலும் இந்தியா, பிரேசில், மெக்சிகோ போன்ற நாடுகள் அடிப்படை ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான ஆற்றல்களை வளர்த்துக் கொண்டன. வேறு நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தொழில் நுட்பங்களைத் தமது நாட்டுக்குத் தகுந்தபடி மாற்றியமைக்கும் ஆற்றல்களையும் பலநாடுகள் சுயேச்சையாகப் பெற்றன. பசுமைப் புரட்சி விதை இரகங்களை உருவாக்குவதில் தனியார் நிறுவனங்கள் பெரும்பாலும் ஒதுங்கியே இருந்தன. ஏனென்றால் அது அவ்வளவு இலாபம் அளிக்கும் துறையாக இல்லை.

ஆனால் கருமைப் புரட்சிக் காலத்தில் எல்லாம் தலைகீழாக மாறுகின்றன. விதைகளை சரக்குமயமாக்குவதில் உயிரியல் தொழில் நுட்பம் தனியார் துறையின் கையில் ஆற்றல் வாய்ந்த கருவியாக செயல்படுகின்றது. தேசங் கடந்த தொழில் கழகங்கள் பல்கலைக் கழகங்களையும் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, தாவர உயிரியல் தொழில் நுட்பங்களின் மூலம் விதைகளை உருவாக்கி, தமது ஏகபோகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளன. அதே வேளையில், அரசு ஆராய்ச்சி நிறுவனங்களை 'அடிப்படை ஆராய்ச்சி'யோடு மட்டும் கட்டுப்படுத்த முயல்கின்றன; அல்லது அவைகளைத் தமக்கு உதவியாக, சேவை புரிவதாக இணைத்துக் கொள்ள முயலுகின்றன; அல்லது உயிரியல் தொழில் நுட்ப ஆராய்ச்சியிலிருந்து அவற்றை விலக்கி வைக்கின்றன. அவைகளுக்கான நிதி ஆதாரங்களை வெட்ட முயலுகின்றன; அல்லது பல்வேறு நாடுகளில் உள்ள விஞ்ஞானிகளையும் தொழில் நுட்ப வல்லுநர்களையும்



படிப்பகம்

www.padippakam.com

பயன்படுத்த, அந்தந்த நாடுகளில் தங்களது மேலாண்மையுடன் கூடிய கூட்டு முயற்சி உயிரியல் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிறுவனங் களையும் நிறுவி, அங்கே கண்டு பிடிக்கப்படும் முறைகளைத் தங்களுடையனவாக ஆக்கிக் கொள்ள முயலுகின்றன.

இந்தியா போன்ற நாடுகளில் தாவர உயிரி யல் தொழில் நுட்பவியல் துறையில் ஆராய்ச்சி களை மேற்கொள்ளுவதற்கான மூலதனமும் நிபுணர்களும் உள்ளனர். பல நிறுவனங்களும் ஆங்காங்கே தோன்றி வளர்ந்து வருகின்றன. எனினும் அரசாங்க, பொதுத்துறை நிறுவனங் கள் இந்தத் துறை ஆராய்ச்சிகளிலிருந்து ஒதுக் கப்படுகின்றன. தனியார் துறைக்கு ஊக்கம் அளிக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக - இந் திய அரசாங்கம் இப்படிப்பட்ட தனியார் நிறுவ னங்களுக்கு நேரடியாகப் பண உதவி செய்யா விட்டாலும், மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறை, மாநில அரசுகள் உயிரி யல் தொழில் நுட்ப முனைவோர்களைக் கவர் வதற்கானத் திட்டங்களைத் தொடங்க உதவு கின்றது. மத்திய அரசின் உயிரியல் தொழில் நுட்பத் துறையின் வழிகாட்டுதலில் கேரள மாநிலம் நாட்டின் முதலாவது உயிரியல் தொழில் நுட்பப் பூங்காவை அமைத்துள்ளது. அங்கே அரசாங்கமானது, திறமையிருந்தும் ஆனால் மூலாதாரங்கள் இல்லாததால் உயிரி யல் தொழில் நுட்ப நிறுவனங்களை நிறுவ முடியாமல் இருப்பவர்களுக்கு நிலம், தண் ணீர், மின்சாரம் மற்றும் பிற உதவிகளை வழங்கித் தொழில் தொடங்க உதவுகின்றது. இப்படிப்பட்ட தனியார் முயற்சிகளில் உதவுவ தாக, கூட்டுச் சேருவதாக அந்நியக் கம்பெனி கள் முன் வந்து உதவி, ஆராய்ச்சி முடிவுகளைத் தமது வடிவுரிமையாக்கிக் கொள்கின்றன.

மேலும் கடன் வழங்கும் ஏகாதிபத்திய நிறுவனங்கள் அரசு - பொதுத்துறை ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு ஏழை நாட்டு அரசுகள் உதவு வதை குறைத்துக் கொள்ளச் சொல்லி தொடர்ந்து நிர்பந்திக்கின்றன.

**ஏரி, குளம், கால்வாய் நிலப்பிரபுக்களுக்கு-தண்ணீருக்கும் காசு!**

உலக வங்கி, காட் ஒப்பந்தம், புதிய பொருளாதாரக் கொள்கை ஆகியவற்றினால் நம் போன்ற ஏழை நாட்டு மக்களின் மீது திணிக்கப்படும் வறுமைப் புரட்சியினால் ஏற்ப டும் மாற்றங்கள் - விளைவுகள் பற்றி இது வரை பார்த்தோம். பசுமைப் புரட்சியைப் பாடைக்கு அனுப்பும் வறுமைப் புரட்சியை அமுல் நடத்தவுமான முயற்சிகள் இந்தியாவில் நான்காண்டுகளுக்கு மேலாக நடந்து வருகின் றன.

பழத் தோட்டங்கள், பூ வளர்ப்பு போன்ற தொழில்கள் அதிகமான மனித ஆற்றலைக் கோருபவை; இந்தியா போன்ற நாடுகளில் அவை அதிகமாகவே உள்ளன. மேலும் மலி வான கூலி உழைப்பைப் பெற, சிறிய, நடுத்தர, கூலி விவசாயிகளைப் பாரம்பரிய மற்றும் பசுமைப் புரட்சி விவசாய முறைகளி லிருந்து மாற்றவும் அவர்களிடமிருந்து நிலத் தைப் பறிக்கவும் வேண்டியுள்ளது. தேசங் கடந்த தொழில் கழகங்களின் பெரிய அளவி லான விவசாய முறைக்கு இது அவசியமும் ஆகும். எனவே, நில உச்ச வரம்புச் சட்டத்தை ஒழிப்பதும், ஏழை, நடுத்தர, கூலி விவசாயிக ளுக்கு மானியம், கடன் போன்ற சலுகைகளை வழங்குகின்ற கொள்கைகளை ஒழிப்பதும் புதிய விவசாயத்திற்கு அவசியமாக உள்ளது.

புதிய பொருளாதாரக் கொள்கைகளையும் காட் ஒப்பந்தத்தையும் 'தீவிரமாக' எதிர்த்த ஜனதா தளம் ஆளும் கர்நாடகா அரசாங்கம், அண்மையில் நிறைவேற்றியுள்ள விவசாயக் கொள்கையும் நிலச்சீர்திருத்த சட்டமும், இதற் கெல்லாம் முன்னோடியாகவும் அப்பட்டமான தாகவும் இருக்கின்றது. காங்கிரசு ஆளும் மாநிலங்கள் உட்பட எந்த மாநில அரசும் நிறைவேற்றாது இருந்த இந்தச் சட்டமும் விவசாயக் கொள்கையும் மேல் நிலை வல்லர சுகளும் தேசங்கடந்த தொழிற்கழகங்களும் என்னென்ன கோரினார்களோ அவை அனைத் தையும் நிறைவு செய்கின்ற கூறுகள், கொள் கைகளைக் கொண்டதாக இருக்கின்றன.

விவசாயக் கொள்கை ஒன்றை வரைய றுத்து, இந்தியாவிலேயே முதன் முதலாக வைத்தது கர்நாடக மாநில ஜனதா தள அரசு தான். "பொருளாதாரத் தாராளமயம் என்னும் ஒட்டு மொத்தச் சுற்றுச் சூழலில் தேசிய அளவிலும், உலக அளவிலும் வர்த்தகத்தால்



படிப்பகம்

www.padippakam.com

திறந்து விடப்பட்டுள்ள வாய்ப்புகளைப் பயன் படுத்திக் கொண்டு, விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகளில் வளர்ச்சியை முடுக்கிவிடும் நோக்கத்தில்'' இந்த விவசாயக் கொள்கையைக் கொண்டு வந்ததாகக் கர்நாடக அரசு கூறுகிறது.

இந்தக் கொள்கை அறிக்கை விவசாயம், தோட்டக்கலை, மலர் வளர்ப்பு, பட்டுப் பூச்சி வளர்த்தல், கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு ஆகிய அனைத்தும் கலந்து ஒருங்கிணைந்தது தான் விவசாயத்துறை என்று வரையறுக்கின்றது. மேலும் ஏற்றுமதிக்காக கடற்கரையோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு, உள்நாட்டு செயற்கை முறை மீன் வளர்ப்பு, பெரிய அளவிலான கோழி வளர்ப்பு, பால் பண்ணை வைத்தல், பட்டு வளர்ப்பு ஆகியவைகளைச் செய்ய வேண்டுமெனக் கொள்கை அறிக்கை முன் வைத்துள்ளது. அடுத்த ஐந்தாண்டுகளுக்கு ஆண்டுக்கு ரூ. 100 கோடி என விவசாயத் துறையில் முதலீடு இருக்கும் என்றும், இதனால் தற்போதுள்ள வளர்ச்சி விகிதமான 2.2%, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் 4.5% ஆக உயருமென்றும் இக்கொள்கை மதிப்பிட்டுள்ளது. இந்த நோக்கத்தை அடையத் தனியார் துறையும் பொதுத்துறையும் சம அளவில் முதலீடு செய்வதாக இருக்கும் என்று இக் கொள்கை எதிர்பார்க்கிறது. இந்தக் கொள்கை எப்படி வறுமைப் புரட்சிக்குப் பொருத்தமாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதற்கு கொள்கை அறிக்கையில் உள்ள கீழ்க்கண்ட அம்சங்கள் சாட்சிகளாகும்.

பொதுத்துறை நிறுவனங்களின் முதலீடுகள், பொருளாதார மற்றும் சமூக அடிப்படைக் கட்டுமானங்களை உருவாக்குவதற்கே பிரதானமாக ஈடுபடுத்தப்படும். ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, நீர்ப்பாசன வசதிகளை உருவாக்குதல், தண்ணீர் பயன்படுத்துதலை முறைப்படுத்துதல், சாலைகள், ஆரம்ப சுகாதார வசதிகள், கல்வி போன்றவற்றிற்குக் கூடுதல் அழுத்தம் கொடுக்கப்படும். இதற்காக பட்ஜெட் நிதி ஒதுக்கீடுகள் மட்டுமின்றி, மாநில பொதுத் துறை நிறுவனங்களை விற்பது அல்லது பங்குகளை விற்பதன் மூலமும் தண்ணீர், மின்சாரம் போன்றவைகளுக்கு உரிய விலை வைத்து விற்பதன் மூலமும் மூலதனம் திரட்டப்படுமாம். அதே சமயம், தனியார் துறையோ இந்த அடிப்படைக் கட்டுமான வசதியைப் பயன்படுத்திக் கொண்டு விவசாய விளைபொருட்களை உற்பத்தி செய்வது, சந்தையில் விற்பது, பதப்படுத்துதல், விதைகள் பெருக்கம், சேமிப்பு வசதிகள், தொழில் நுட்பத்தை மேம்படுத்துதல் போன்ற துறைகளில் முதலீடு செய்ய ஊக்குவிக்கப்படுமாம்.

விவசாயிகளுக்கான கடன் தள்ளுபடி, வட்டிக்கான மானியங்கள் போன்றவை இனிமேல் செய்யப்பட மாட்டா என்றும், கடன் கொடுத்தல், வசூலித்தல் ஆகியவைகளில், வணிக வங்கிகள் சுதந்திரமாகவும் கறாராகவும் நடந்து கொள்ள அனுமதிக்கப்படும் என்றும் இக் கொள்கை அறிவிக்கிறது.

மாநில நீர்ப்பாசனத் துறை, நிதியில் தன்னாட்சி அதிகாரம் கொண்ட வாரியமாக மாற்றப்படும். அதன் நிர்வாக போர்டில் விவசாயிகளுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படும். பாசனக் கால்வாய்களைச் சொந்தத்தில் வாங்கிப் பயன்படுத்திக் கொள்ளவும், நிர்வாகம் செய்யவும் பாசன நீர் பயன்படுத்துவோர் கழகங்கள் அமைக்கப்படும். நீர்ப்பாசனத் திட்டங்களில் பங்குகளை வாங்குவதன் மூலம் விவசாயிகள் இணை உடைமையாளர்களாக ஆகலாம். இவை எல்லாம் அக்கொள்கை அறிக்கையில் இருப்பவை; எல்லா விவசாயிகளும் பாசனக் கால்வாய்களையும் நீர்ப்பாசனத் திட்டங்களையும் சொந்த உடைமையாக ஆக்கிக் கொள்ளலாம் என்று கொள்கையறிக்கையில் இருந்தாலும், உண்மை நிலவரப்படி, பணக்கார விவசாயிகளும், நிலப்பிரபுக்களும், தேசங்கடந்த தொழிற்கழகங்களும் இவற்றை வாங்கித் தமது ஏகபோக உடைமையாக்கிக் கொண்டு, சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகளைச் சுரண்டுவார்கள்; அல்லது அவர்களைக் கபளீகரம் செய்து விடுவார்கள். இதைத் தான் இக்கொள்கை அறிக்கை செய்யவுள்ளது.

மேலும் மின்சார விநியோகம் தனியார் மயமாக்கப்படும்; கர்நாடக மின் வாரிய நிர்வாகத்தில் விவசாயிகளுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும்; மின் பாக்கிகளை வசூலிக்க விவசாயிகளின் கழகங்களுக்கு அதிகாரம் அளித்தல்; அதற்காக அக்கழகங்களுக்குக் கமி



படிப்பகம்

www.padippakam.com

சன் அளித்தல், மின்வாரியத்தின் வழமையான நடவடிக்கைகளைத் தொழில் ரீதியில் திறமை யாக நடத்தவும் தவறுகளுக்கு பொறுப்பாக்க வும் செய்தல் போன்றவற்றையும் இக்கொள் கையறிக்கை முன் வைத்துள்ளது. விவசாயிக ளின் கழகங்கள் என்ற பெயரில் நிலப்பிரபுக்க ளின் கழகங்கள் அமைக்கப்பட்டு, அவர்களின் நிர்வாகத்தில் மின் வாரியமும், மின் விநியோக மும் கொடுக்கப்பட்டு, அவர்களின் குண்டர் படைகள் மின் விநியோகத்தை மேற்கொள்வார் கள் என்பதே இதன் பொருளாகும்.

விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைக ளிலிருந்து அடுத்த நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஏற்றுமதி மூலம் ஆண்டுக்கு ரூ. 5000 ரூபாய் கோடி ஈட்ட, கொள்கை அறிக்கை இலக்கு நிர்ணயித்துள்ளது. இதற்காக ஏற்றுமதி மேம் பாட்டுக் கவுன்சில் ஒன்று அமைக்கப்படும். இக்கொள்கை அறிக்கையில் உள்ள இன்னொரு பரிந்துரை 'ஒப்பந்தப் பயிரிடும் முறைக்கு'ச் சட்டபூர்வ தகுதி வழங்குவதாகும். இதன் மூலம் சிறு நில உடமையாளர்கள், குறிப்பாக, பழங்கள் மற்றும் காய்கறிகள் பயிரிடும் விவசா யிகள், தனியார் கம்பெனிகளுக்குத் தங்கள் நிலங்களை வாடகைக்கு விட வகை செய்யப்ப டுகிறது. ரூ. 200 கோடி மதிப்புள்ள மீன் வளர்ச்சித் திட்டம் ஒன்றை உருவாக்குவதில் தனியார் துறைக்கு அதிக பங்கு அளிக்கப்படும். மேலும் பொது விநியோக முறையிலிருந்து 'தகுதியற்ற' நுகர்வோர் நீக்கப்பட்டு, அது மறு ஒழுங்கமைப்பு செய்யப்படும்; அத்தியாவசி யப் பொருட்கள் சட்டம் நீக்கப்படும்; முறைப் படுத்தப்பட்ட விலைக் கொள்கை அமுலாக்கப் படும்; வேறு வழியின்றி வந்த விலைக்கு விவசாயப் பொருட்களை விற்கும் நிலை தடுக்கப்படும். பயிர் பாதுகாப்பு (இன்சூரன்ஸ்) முறை மறு ஒழுங்காக்கம் செய்யப்படும். நிலவ ரங்கள் பற்றி கண்காணிக்கவும், தெரியப்படுத்த வும் வலுவான செய்தியமைப்பு முறை நிறுவப் படும் போன்றவையும் கொள்கை அறிக்கை யில் அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும், விவசாயப் பொருட்களை பதப்ப டுத்துதல், விதை தயாரித்தல் மற்றும் விவசாயத் தொடர்பான தனது அரசு நிறுவனங்கள் அனைத்தையும் ஒன்றாக்கி, ஒரு பெரிய மாபெ ரும் விவசாயப் பொருள் கழகமாகக் கட்டிய மைக்கவும், இதில் 49% பங்குகளைத் தனியா ருக்குக் கொடுக்கவும் கர்நாடக அரசு முடிவு செய்துள்ளது. இவை அனைத்தும் மானியங் களை வெட்டுவது என்று உலக வங்கியும் உலக வர்த்தக நிறுவனமும் உத்தரவிட்டுள்ள தன் அடிப் படையில் செய்யப்பட்டவை ஆகும்.

''விவசாயம் தொழில் துறைக்குத் துணை புரிவதாக இருக்க வேண்டும். விவசாயத் துறையை சுறுசுறுப்பான இயங்கு தன்மை கொண்டதாக மாற்ற பெருத்த அளவில் தனி யார் முதலீட்டை ஈடுபடுத்துவதைத் தவிர வேறு வழியில்லை'' என்று கர்நாடக மாநிலத் திட்ட வாரியத்தின் துணைத் தலைவர் நஞ்சுண் டப்பா கூறியிருப்பதே, இந்தக் கொள்கை அறிக்கை எவ்வாறு விவசாயத் துறையை அரசின் கட்டுப்பாட்டிலிருந்து எடுத்து, நிலப் பிரபுக்களுக்கும் தேசங்கடந்த தொழில் கழகங் களுக்கும் தாரை வார்க்க இருக்கிறது என்ப தற்கு அத்தாட்சியாகும்.

## நில உச்சவரம்பு நீக்கப்படுகிறது

விவசாயத் துறையைத் தனியாருக்கு, குறிப்பாக வேளாண் வர்த்தகக் கழகங்களின் வேட்டைக்குப் பரக்கத் திறந்து விடுவது; ஏற்றுமதியை நோக்கி சர்வதேசச் சந்தையின் சதிராட்டத்திற்கு தகுந்தாற் போல உற்பத்தி, விலை ஆகியவற்றைத் தீர்மானிப்பது என்ற விவசாயக் கொள்கையின் இரு அடிப்படைக் கூறுகளுக்கு ஏற்ப, கர்நாடக அரசு 1974-ம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் சட்டத்தில் மாபெரும் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது.

தனியார் மூலதனத்தின் தாண்டவத்திற்கு விவசாயத் துறையைத் திறந்து விடும் திட்டத் திற்குப் பெரும் தடைக் கற்களாக இருந்த 1974 நிலச்சீர்திருத்த சட்டத்தின் கூறுகளான 1. குத்த கையைத் தடை செய்தல் 2. நில உச்சவரம்பு ஆகியவற்றைப் புதிய சட்டம் அகற்றி விட் டது. 1. நிலத்தைச் சுதந்திரமாக விற்பது, வாங்குவது; 2. ஒரு தனி நபர், அல்லது ஒரு கம்பெனி அல்லது ஒரு நிறுவனம் வைத்துக் கொள்ளும் அதிக பட்ச நிலம்; 3. விவசாய மற்ற ஒரு நிறுவனம் விவசாய நிலங்களை


படிப்பகம்

www.padippakam.com

வாங்குவது தொடர்பாக இருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்படுவது விவசாயக் கொள்கை வெற்றிகரமாக அமலாக்கப்படுவதற்கு அவசியமாகும். கர்நாடக அரசின் புதிய நிலச்சீர்திருத்தச் சட்டம் இதைத்தான் செய்துள்ளது. கடற்கரை மாவட்டங்களான தெற்கு மற்றும் வடக்கு கர்நாடக மாவட்டங்களிலும் நீர்வாழ் உயிரினத் துறைக்கு விவசாய நிலங்களை 20 ஆண்டுகளுக்குத் குத்தகைக்கு விடலாம் என புதிய சட்டத்தின் 5-வது பிரிவு அனுமதிக்கிறது.

நிலச்சீர்திருத்தம் தொடர்பான 1972-ம் ஆண்டு வழிகாட்டும் நெறிகள் புரட்சிகரமானவை, முற்போக்கானவை என்று ஆளும் வர்க்கங்கள் பிரச்சாரம் செய்து வந்துள்ளன; வருகின்றன. ஆனால் உண்மையில் 1960-களில் எழுந்த விவசாயிகளின் போர்க்குணமிக்கப் போராட்டங்களிலிருந்து, குறிப்பாக நக்சல்பாரி - சிரிகாகுளம் போன்ற இடங்களில் மார்க்சிய-லெனினியப் புரட்சியாளர்களின் தலைமையில் நடந்த விவசாயிகளின் எழுச்சிகள் ஆளும் வர்க்கங்களை நடுநடுங்க வைத்தன. இந்த புரட்சிகரப் போராட்டப் பாதையிலிருந்து விவசாயிகளைத் திசை திருப்பவே ஆளும் வர்க்கங்கள் நிலச் சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்தன.

பல்வேறு வகைகளில் ஓட்டைகளை வைத்து இச்சட்டங்களை வடிவமைத்ததோடு மட்டுமல்லாமல், அவற்றையும்கூட ஒப்புக்கே அமல்படுத்தி மக்களை ஏமாற்றின. ''சுதந்திரத்திற்கு முன்பும், சுதந்திரத்திற்குப் பின்பும், தேர்தலுக்குத் தேர்தல் ஒவ்வொரு தேர்தலிலும் நாம் வாக்குறுதி கொடுத்தது செய்யப்படவில்லை'' என்று நிலச்சீர்திருத்தச் சட்டம் அமல் பற்றிப் பிரதமர் நரசிம்மராவ் கூறியுள்ளார். இவ்வாறு கூறியதாக ஹர்கிஷன்சிங் சுர்ஜீத் எழுதிய ''இந்தியாவில் நிலச்சீர்திருத்தங்கள். வாக்குறுதிகளும் நடைமுறையும் 1992'' என்ற கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1992-இல் நடைபெற்ற வருவாய்த்துறை அமைச்சர்களின் மாநாட்டில் பிரதமர் நரசிம்மராவ் கூறியது நமது கூற்றுக்குத் தெளிவான நிரூபணமாகும்.

இரு போகங்களுக்கு நீர்ப்பாசன வசதியுள்ள நிலத்திற்கு உச்சவரம்பு 10 ஏக்கரிலிருந்து 40 ஏக்கருக்கும் நீர்ப்பாசன வசதியற்ற நிலத்திற்கு உச்சவரம்பு 54 ஏக்கரிலிருந்து 216 ஏக்கருக்கும் புதிய சட்டத்தில் உயர்த்தப்பட்டுள்ளது.

1974-ம் ஆண்டு பழைய நிலச்சீர்திருத்த சட்டத்தின் படி விவசாயி அல்லாத ஒருவர், அரசிடமிருந்து சிறப்பு அனுமதி பெறாமல் விவசாய நிலத்தை வாங்க முடியாது. கணிசமான அளவு விவசாயமல்லாத ஆதாயத்தை வைத்திருக்கின்ற விவசாயிகூட விவசாய நிலத்தை வாங்க முடியாது. 1974-ம் ஆண்டு சட்டத்தின் படி விவசாயமல்லாத துறைகளிலிருந்து ஒருவரது வருமானம் வருடத்திற்கு ரூ. 50,000-க்கு மேல் சென்றால், அவர் நிலம் வாங்க முடியாது. இந்த இரண்டு வரம்புகளும் புதிய சட்டத்தால் நீக்கப்பட்டு விட்டன. இன்று அந்த வரம்பு ரூ. 2 இலட்சத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் அரசாங்கம் நினைத்தால் இந்த வரம்பைக்கூடத் தள்ளி வைக்கலாம். இன்னும் தொழிற்சாலை நோக்கத்திற்கு என்றால் 20 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரையிலும், கல்வி நிறுவனங்களுக்கு என்றால் 4 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரையிலும், வீடு கட்டும் திட்டம் என்றால் 10 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரையிலும் பொது நலன் என்ற வரையறைக்குள் வருகின்ற பிரிவுகளுக்கு என்று நில உச்சவரம்பில் சலுகைகளை அரசு அளிக்கலாம்.

விவசாய நிலங்களை நில உச்சவரம்பிலிருந்து விடுவிக்கச் சொல்லி, தொழில் முதலாளிகள் நீண்ட காலமாகவே கர்நாடக அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுத்து வந்தனர். வணிகரீதியில் தேக்கு மரம் பயிரிடும் தோட்டங்களை நடத்தி வரும் அனுபவ் பிளாண்டேசன்ஸ் மற்றும் ஸ்டெர்லிங் ட்ரீ மேக்னம் என்ற இரண்டு நிறுவனங்கள் இதில் முன்னோடியாக நின்றுள்ளன. இந்த நிறுவனங்கள் இந்தியா முழுவதும் நிலங்களை வாங்கிக் குவித்து வருகின்றன. இந்த நிறுவனங்களின் விருப்பத்திற்கு (லஞ்சத்திற்கு) இணங்கித்தான் கர்நாடக அரசு 1974-ம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. 1974-ம் ஆண்டு சட்டத்தால் நிலத்தை இழந்த நிலப்பிரபுக்கள் கொஞ்சம் கொஞ்சமாக அவற்றைச் சட்ட விரோதமாகத் திரும்ப ஆக்கிரமித்து வந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

இப்பொழுது இப்புதிய சட்டம் இதைச் சட்ட பூர்வமாக்கியுள்ளது. இவ்வாறு நிலப்பிரபுக்க ளின் கையிலும் வேளாண் வர்த்தக நிறுவனங்க ளின் கையிலும் நிலங்கள் ஏராளமாகக் குவியும். மொத்தத்தில் ஒரு தனி மனிதன் 43.74 ஹெக் டேர் நிலங்களை சொந்தமாக வாங்க முடியும். 87.48 ஹெக்டேர் நிலத்தை வாடகைக்கு எடுத் துக் கொள்ள முடியும்.

இவ்வாறு அரசாங்கத்திற்கு அளிக்கப்பட் டுள்ள அதிகாரம் நல்ல விவசாய நிலங்கள் வரைமுறையற்ற முறையில் வணிகமயமாக்கத் திற்கு ஆட்படுத்தப்பட வழி வகுத்துள்ளது. மேலும், இலஞ்ச ஊழல் புகுந்து விளையாட வும் இது வாய்ப்பளித்துள்ளது. 'பொதுநலன்' என்ற வார்த்தை, எவ்வளவு வேண்டுமானாலும் அர்த்தத்தை நீட்டித்துக் கொள்கின்ற ஒரு நீள் தன்மை கொண்டதாகும். பட்டு வளர்ப்பு, நீர்வாழ் உயிரின வளர்ப்பு, மலர் வளர்ப்பு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்கு எங்கெல்லாம் நிலம் தேவையோ அங்கெல்லாம் வாங்க இந்த மாற் றங்கள் அவசியமானவை என்று கர்நாடக அரசாங்கம் சொல்லியுள்ளது. உள்நாட்டு உணவு தானிய உற்பத்தியை விட, ஏற்றுமதிக் கான 'அந்நியமான' சரக்குகளை உற்பத்தி செய்வதற்கு ஏற்ப, விவசாய விளைநிலங்களை வளைத்துப் போட வசதி செய்து கொடுப்பது தான் புதிய சட்டத்தின் நோக்கம் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

### தேசங்கடந்த தொழில் கழகங்களால் நன்மையா?

தேசங்கடந்த தொழில் கழகங்களை விவ சாயத்தில் அனுமதித்தால் அவை உயர் தரத்தி லான விவசாயத்தொழில் நுட்பங்களையும் விதைகளையும் நேரடியாகத் தனிப்பட்ட விவ சாயிகளுக்கு வழங்கும்; இதனால் விவசாய உற்பத்தியின் அளவும் தரமும் பெருகும்; ஏற்று மதிக்கான வாய்ப்பு ஏராளமாகக் கிட்டும் என்று சிலர் வாதிடுகின்றனர். ஆனால் இது நடைமு றையில் பொய்ப்பிக்கப்பட்டுள்ளதாக சுமன் சஹாய் என்பவர் சுட்டிக் காட்டுகிறார் (இந்து, 14/2/96). எடுத்துக்காட்டாக, விவசாய ஆராய்ச் சியிலும் உணவுப் பதப்படுத்தலுக்குப் பொருத் தமான இரகங்களை உருவாக்குவதிலும் ஏராள மான முதலீடு செய்வதாக வாக்குறுதி கொடுத் துதான் பெப்சி கோலா கம்பெனி குளிர்பானம் மற்றும் உணவுப் பதப்படுத்தல் துறையில் நுழைந்தது. ஆனால் வாக்குறுதி அளித்தவாறு, அக்கம்பெனி முதலீடு செய்யவில்லை. இது வரை ஒரு புதியரகத்தைக் கூடப் புகுத்த வில்லை. அக்கம்பெனி விற்கும் உருளைக் கிழங்கு வருவல் இந்திய ரகங்களிலிருந்து தயாரிக்கப்பட்டவையே. அக்கம்பெனி தான் உருவாக்குவதாக, பீற்றிக் கொள்ளும் 'நவீன்' என்னும் தக்காளி வளர்ப்பதற்கான அடிப் படை வளர்ப்புப் பொருளை (breeding Material) வழங்கியது லூதியானா விவசாயப் பல்கலைக் கழகம் என்று சுமன் சஹாய் சுட்டிக் காட்டியுள் ளார். (இந்து, 14/2/96).

இவ்வாறு தேசங்கடந்த தொழில் கழகங் களை அனுமதித்தால், அவை விவசாயப் பல்கலைக்கழகங்கள், விவசாய ஆராய்ச்சி நிறு வனங்கள் ஆகிய பொதுத்துறை நிறுவனங்க ளைப் பயன்படுத்தியும் காட் ஆட்சியின் அதி காரத்தின் கீழ் உயிரின இரக விதைகளை உரிமைப் பதிவு செய்து கொண்டு விதைத் துறையில் ஏகபோகமாக ஆக்கிக் கொண்டும் இந்திய உணவு உற்பத்தியையும் அதற்கான வழிமுறைகளையும் தங்களது ஆதிக்கத்தில் கொண்டு வந்து விடும். அண்மையில் இந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகளி டையே பேசிய அமெரிக்க விவசாயத் துறைச் செயலர் டேனியல் கிளிக்மேனின் (Daniel Glickman) பேச்சு இதையே நிரூபிக்கிறது. இந் திய அரசாங்கம் மற்றும் இந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனம் போன்ற பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து தேசங்கடந்த தொழிற்க ழகங்களைப் பாதுகாத்து இந்தியா ஊக்கப்ப டுத்த வேண்டும் என்று பேசியுள்ளார். தலைசி றந்த இந்திய விஞ்ஞானிகள் தேசப்பற்று அறவே இல்லாமல் இந்தப் பேச்சை வாயைப் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தது தேசிய அவமானமாகும்.

### தேசங்கடந்த தொழில் கழகங்களின் லாப வேட்டைக்களமாக்கப்பட்டுள்ளது இந்திய விவசாயம்

இந்தப் புதிய சட்டத் திருத்தத்தின் படி விவசாயத் துறையில் கருப்புப் பணம் வெள்ள



படிப்பகம்

www.padippakam.com

மாகப் பாய்வதுடன், தேசங்கடந்த தொழிற் கழகங்கள் சுதந்திரமாகப் புகுந்து நிலங்களை வாங்கிக் குவிக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது. நிலத்தின் விலை கிடுகிடுவென்று உயரும். புதிய முறையில் விவசாயம் செய்வது சிறு, நடுத்தர விவசாயிகளுக்கு இலாபம் அளிப்ப தாக இல்லாததாலும் மற்றும் சந்தையின் ஏற்றத் தாழ்வுகளைத் தாங்கிக் கொள்ள முடியாததா லும் அவர்கள் நிலத்தில் பயிரிடவே அஞ்சுகின் றனர். இந்நிலையில் எதிர்பாராத நல்ல விலை கிடைப்பதால், நிலத்தை விற்றுவிட்டுச் செல்ல இச்சட்டம் மிகவும் தூண்டுதலாக இருக்கின் றது. இது விவசாயிகளுக்கு மட்டுமல்ல, விவ சாயத்திற்கே பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். உணவுத் தானியங்களை உற்பத்தி செய்வதில் பெரும்பங்கு வகிப்பவர்கள் சிறிய, நடுத்தர விவசாயிகளே. இவர்கள் தங்களது நிலங்களை விற்க நிர்ப்பந்திக்கப்படுவதாலும், ஏற்றுமதி அடிப்படையிலான வேளாண் வர்த்தகக் கம்பெ னிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படுவதாலும் உணவு உற்பத்தி நிச்சயமாகக் குறையும்.

மேலும் சட்டப் பூர்வமான முறைகள், நேர்மையான முறைகள் மூலம் மட்டும் நிலங்க ளைச் சொந்த உடைமைக்கோ குத்தகைக்கோ தேசங்கடந்த தொழிற்கழகங்களும் பெரிய நிலப்பிரபுக்களும் கைப்பற்றி, புதிய விவசாய வர்த்தகத்தில் ஈடுபட்டு இலாபம் பெறுவ தில்லை. அதிகார வர்க்கத்தையும் போலீசையும் வைத்துக்கொண்டு நிலத்தைப் பலாத்காரமாகப் பறிப்பார்கள். நிலப்பதிவு அலுவலகத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு குறைந்த விலைக்குப் புதிய விவசாயம் செய்வ தற்காக சசிகலா கும்பல் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை தமிழ்நாட்டில் பறித்து வரு வது ஓர் எடுத்துக்காட்டாகும்.

வர்த்தகரீதியில் ஒரு தொழில் நிறுவனம் போல ஆட்டுப் பண்ணை, பழப்பண்ணை, தேக்கு மரப் பண்ணைகள், இறால் பண்ணை கள், பண்ணை வீடுகள் (ஓய்வு இல்லங்கள்) அமைப்பது, உல்லாச விடுதிகள் அமைப்பது, நல்ல தண்ணீர் கிடைக்கின்ற இடங்கள், கால் வாய்கள், ஆறுகள், ஏரிகள் குளங்களைச் சொந்த உடைமையாகவோ வாடகைக்கோ வாங்கித் தண் ணீர் வியாபாரம் செய்வது போன்றவையும் புதிய விவசாயத்தோடு சம்பந்தப்பட்ட தொழில்களாகும். ஏனென்றால், இவை அனைத்தும் நல்ல விளை நிலங்களை விவசா யிகள் அல்லாத நகர்ப்புற முதலாளிகளும் அதிகார வர்க்கத்தினரும் மேல்தட்டு குட்டி முதலாளிகளும் வாங்கித் தங்களது இலாப நோக்கங்களுக்காகத்தான் பயன்படுத்துவர். இதனால் விவசாயிகளோ தங்களது தேவைக் கான குடிநீர், உணவுத் தானியங்கள், பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை ''சர்வதேசச் சந்தையு டன் பிணைக்கப்பட்ட உள்நாட்டுச் சந்தை'' என்ற ஈவு இரக்கமற்ற சக்தியிடமிருந்து பெற வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்படுவார்கள். காடுகளில் ஆடு மேய்ப்பது, விறகு பொறுக்கு வது, என்ற அடிப்படை உரிமையை பழங்குடி மக்களும் விவசாயிகளும் இழப்பர். ஏனென் றால் முதலாளித்துவ வணிக முறையிலான ஆட்டுப் பண்ணை வளர்ப்பிற்கான மேய்ச்சல் நிலங்களாகக் காடுகளையே அரசிடமிருந்து இவர்கள் குத்தகைக்கு எடுத்துக் காடுகளை ஆதிக்கம் செய்யப்போகிறார்கள்.

கூலி, ஏழை, நடுத்தர விவசாயிகள் வேறு தொழில்களை நாடிச் செல்வதால், அவர்கள் விவசாயிகள் என்ற தகுதியை இழக்கிறார்கள். அதாவது விவசாயம், அந்தச் சூழலைச் சார்ந்த சமுதாயம், நீர், நிலம், புல்லிலிருந்து ஆல் வரை ஆயிரமாயிரம் தாவர வகைகளிலிருந்து அவர்கள் விரட்டப்படுவார்கள்.

ஏற்கனவே 43 மலர் வளர்ப்பு இந்திய நிறுவனங்கள் ஏராளமான நிலங்களை வாங் கிப் போட்டுள்ளன என்று அண்மையில் செய்த மதிப்பீடு ஒன்று கூறுகிறது. இதில் 12 கம்பெ னிகள் ஐரோப்பிய தேசங்கடந்த தொழில் கழகங்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளன. சுவீடன் நாட்டு ஆஸ்ட்ரா உட்பட சில தேசங்கடந்த தொழிற் கழகங்கள் மலர் வளர்ப்பதில் தங்க ளது துணைக் கம்பெனிகளைத் தொடங்க உள்ளன. இவை ஒவ்வொன்றும் பல கோடி மதிப்புள்ள கம்பெனிகளாகும். ஏற்கனவே டாட்டாவும் சிங்கப்பூர் ஒப்பந்தக் குழுமம் ஒன்றும் சேர்ந்து அமைக்கவுள்ள சர்வதேச விமான நிலையத்திற்கு 10,000 ஏக்கர் விவசாய நிலங்கள் வாங்கப்பட்டு வருகின்றன. (தேவன ஹள்ளி மற்றும் தொட்டபன்னபுரா, சிக்கமல்ல



படிப்பகம்

www.padippakam.com

புரா, ஹோஸ்கோட் வட்டங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில்) விமான நிலையத்தைக் கட்டி முடித்தவுடன் தேசங்கடந்த தொழிற் கழகங்கள் கிளேடியோலியா (Gladiolia), ஜெர்னியம்ஸ் (Geranlums) டப்போடில்ஸ் (Daffodils) துலிப்புகள் (Tulips) போன்ற தங்களது பூ வகைகளைக் கொடுத்து, பயிரிடச் சொல்லி அவற்றை அன் நாடம் ஆம்ஸ்டர்டாமுக்கு விமானம் மூலம் எடுத்துச் செல்லத் திட்டமிட்டுள்ளார்கள் (ஆம்ஸ்டர்டாம் - உலகத்தின் மலர் சந்தையில் முதலிடம் வகிக்கும் இடம்). இதனால் கர்நாடகாவின் முக்கிய பூ வகைகளான தாமரை மற்றும் கக்டா (Kakda) ஆகியவை சந்தையில் இல்லாதொழிக்கப்படும். மலர் வளர்ப்பு பெருத்த முதலிட்டு உள்ளீடுகளைக் கோரும் தொழிலாகும். உணவு உற்பத்திக்குத் தேவையானதை விட, ஏராளமான தண்ணீர், உரம், பூச்சி மருந்துகள் இதற்குத் தேவைப் படும். எனவே விரிந்த அளவிலான நில உடமையையும் இது கோருகின்றது. நில உச்ச வரம்பை உயர்த்த தேவகௌடா அரசு முடிவு எடுத்ததற்கு, மலர் வளர்ப்பு தேசங் கடந்த தொழிற்கழகங்களின் நிர்ப்பந்தம் ஒரு முக்கிய காரணமாகும்.

பழங்கள், காய்கறிகள் பயிரிடுவதில் மேக்ஸ்வொர்த் பழத்தோட்டமும் அதன் சகோதர நிறுவனமான ஸ்டெர்லிங் மர மேனைம் மற்றும் அனுபவ் பிளாண்டேசன்ஸ் ஆகிய இரண்டும் தேக்கு மரம் பயிரிடுவதிலும், முந்திரி பயிரிடுதலில் மூல்சந்த் நிறுவனம் என்றும் ஏற்கனவே நூற்றுக்கு மேற்பட்ட தொழில் நிறுவனங்கள் ஏற்றுமதிக்கும் சர்வதேச வேளாண் உணவுக் கழகங்களின் உள்ளீடுக்குமான விவசாயப் பண்டங்களை உற்பத்தி செய்வதில் பெருமளவு இறங்கி விட்டன. இவை தண்ணீர் வசதியுள்ள நல்ல விளைச்சல் நிலங்களையே வாங்குகின்றன. கிராமத்தில் இருக்கின்ற ஆளும் கட்சி அல்லது பிற வோட்டுக் கட்சிப் பிரமுகர்கள், சாராய வியாபாரிகள் துணையோடு போலீஸ், ரௌடிகளையும், நகரத்தில் உள்ள நிலப்பதிவு அலுவலக அதிகாரிகளையும் இலஞ்சம் மூலம் தமது கைப்பாவையாக்கிக்கொண்டு இந்நிறுவனங்கள் நிலங்களை விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு மிரட்டிப் பறிக்கின்றன. அத்துடன் ஏராளமான புறம்போக்கு நிலங்களையும் வளைத்துக் கொள்கின்றனர். மேலும் இந்தக் கம்பெனிகள் ஆழ்துளைக் குழாய்கள் அமைத்து நிலத்தடி நீரை உறிஞ்சுகின்றன. ஏனென்றால் காய்கறி, பழம் வளர்ப்பிற்கு நிறையத் தண்ணீர் தேவைப்படுகிறது. இதனால் பக்கத்து நிலத்து விவசாயியின் கிணறு / ஆழ்துளைக் குழாய்க் கிணறு வற்றி விடுகின்றது. எனவே விவசாயம் செய்ய முடிவதில்லை. இதை வைத்து நிர்ப்பந்தப்படுத்தி, மேலும் நிலத்தை குறைந்த விலைக்கு வாங்கிக் குவிக்கின்றனர். 2005-ம் ஆண்டுக்குள் 150 இலட்சம் ஏக்கர்களில் நாங்கள் பயிரிடத் திட்டமிட்டுள்ளோம் என்று மேக்ஸ்வொர்த் பழத்தோட்ட நிறுவனம் கூறியிருக்கின்றது. இதிலிருந்தே அவற்றின் நிலப்பசியைப் புரிந்து கொள்ள முடியும். இதனால் பல இலட்சம் விவசாயிகள் நிலம் இழந்து ஓட்டாண்டியாகப் போகிறார்கள்.

மேலும் இந்த நிறுவனங்கள், தமக்கு வேண்டிய மூலதனத்தையும் பங்குச் சந்தை மூலம் நமது நகர்ப்புறக் குட்டி முதலாளிகளிடமிருந்தே திரட்டிக் கொள்கிறார்கள். ஆனால் இவர்களின் விவசாயத்தால் சுற்றுச்சூழல், மண்வளம், நிலத்தடி நீர்வளம், தாவர இன வளம், மிருகங்கள் இன வளம் ஆகிய அனைத்து வளங்களும் சூறையாடப்பட்டு விடும்.

### நாட்டை விற்பதில் வோட்டுக் கட்சிகள் ஒன்றுக்கொன்று சளைத்தவையல்ல

கர்நாடக அரசு கொண்டு வந்த நிலச்சீர்திருத்த திருத்த மசோதா - 1994 கர்நாடக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டது. வேறு ஒரு சம்பவம் தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் - ஒரு சி.பி.எம். எம்.எல்.ஏ. தவிர - அனைவரும் வெளிநடப்பு செய்திருந்த சமயத்தில் எவ்வித விவாதமுமின்றிச் சந்தடியின்றி நிறைவேற்றிக் கொண்டது ஜனதா தள தேவகௌடா அரசு. இந்த சட்டம் காங்கிரசின் தாராளமயக் கொள்கையை வலுப்படுத்தும் என்றும் தேவகௌடா பெருமையாகக் கூறிக் கொண்டார். 1974-ம் ஆண்டு கர்நாடக நிலச்சீர்திருத்தச் சட்டத்தில் பெரும் மாற்றங்களைச் செய்துள்ள இப்புதிய சட்டத்தை எதிர்ப்பதாக காங்கிரசு காட்டிக் கொள்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

புதிய பொருளாதாரக் கொள்கையையும் காட் ஒப்பந்தத்தையும் காங்கிரசு கொண்டு வந்தபோது பி.ஜே.பி.யும், ஜனதா தளமும், சி.பி.ஐ, சி.பி.எம். போலிக் கம்யூனிஸ்ட்டுகளும் அதை எதிர்ப்பதாக நாடகமாடின. பின்னர், இவர்கள் ஆளும் மாநிலங்களில் இதே புதிய பொருளாதாரக் கொள்கையையும் காட் ஒப்பந்தத்தையும் அமல்படுத்தினர். காங்கிரசு ஆளும் மாநிலங்களை விட, முன்னோடியாகவும் தீவிரமாகவும் இவர்கள் செயல்படுவதும், அதை எதிர்ப்பதாகக் காங்கிரசு காட்டிக் கொள்வதும் இவ்வாறு ஒரு தேர்ந்த நாடகத்தை இவர்கள் நடத்தி வருவது நாடு அறிந்த ஒன்றுதான்.

பிரதமர் நரசிம்மராவும், நிதி அமைச்சரும் நில உச்சவரம்புச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதை எதிர்த்துள்ளனர். மகாராட்டிர, கர்நாடக அரசுகள் இயற்றியுள்ள நிலச்சீர்திருத்த மசோதாக்களுக்குக் குடியரசுத் தலைவர் அங்கிகாரம் வழங்கப்பட மாட்டாது என்று மத்தியக் கிராமப்புற அமைச்சர் ஜெகன்னாத் மிஸ்ரா தெரிவித்துள்ளார். கருமைப் புரட்சியை நமது நாட்டில் நுழைப்பதற்கு வழித்தடம் போட்டுக் கொடுத்த இவர்களின் இந்த அறிவிப்புகள் தேர்தலுக்காக வெளியிடப்பட்டவையே. ஏனென்றால், கர்நாடக அரசு மட்டுமல்ல, 1993-ல் மகாராட்டிர காங்கிரசு அரசும் மத்திய அரசுக்கு நில உச்சவரம்புச் சட்டத்தை மாற்றச் சொல்லி கோரியுள்ளது. அதன்பின் வந்த பி.ஜே.பி. - சிவசேனா அரசும் இந்தச் சட்ட மாற்றத்தைப் பின் வாங்கிக் கொள்ளவில்லை.

இதேபோன்ற முன்மொழிதல் ஒன்று மாநில முதலமைச்சரின் பரிசீலனையில் இருப்பதாகத் தமிழ்நாடு தலைமைச் செயலர் அண்மையில் கூறியுள்ளார். நில உச்சவரம்புச் சட்டத்தை அகற்றும்படி பஞ்சாப் அரசும் கேட்டுக் கொண்டுள்ளது. இடது முன்னணி ஆளும் மேற்கு வங்காள அரசும் தனது நில உச்சவரம்புச் சட்டத்தில் திருத்தம் செய்து குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளது.

நடைமுறையில் ஏற்கனவே இறால் பண்ணைகள் வைப்பதற்கு 300 ஏக்கர் வரை தனியார் ஒருவர் நிலங்களை வாங்கலாம் என்று ஆந்திரா, தமிழ்நாடு அரசுகள் அனுமதி அளித்துள்ளன (ஃபைனான்சியல் எக்ஸ்பிரஸ் - 22-01-95). மேலும் மகாராட்டிர அரசு நீர்ப்பாசனத்தைத் தனியார்மயமாக்க ஒரு முன்மொழிதலை வைத்துள்ளது. போடுகின்ற மூலதனத்துக்கு 15% இலாபம் தருகின்ற வகையில் இது இருக்குமாம். இதன் மூலம் தண்ணீர் பயன்படுத்துகின்ற சிறிய, நடுத்தர விவசாயிகள் பிழியப்படுவர்.

ஆளும் வர்க்கக் கட்சிகளும், சமரசக் கட்சிகளும் கருமைப் புரட்சியை ஒன்று, நேரடியாகவே ஆதரிப்பார்கள் அல்லது, ஓட்டுக்காக எதிர்ப்பது போல நடித்துக் கொண்டே அது அமுலாக எல்லா தடைகளையும் அகற்றுவார்கள் என்பது தெரிந்த ஒன்றுதான்.

### கருமைப் புரட்சியின் இலக்குகள்-

விவசாயத்தின், விவசாயிகளின் தன்மையை இழக்கச் செய்தல் (Depeasantisation of agriculture) மற்றும் விவசாயக் கொள்கையிலிருந்து தேசியத் தன்மையை இழக்கச் செய்தல்; (Denationalisation of agricultural policy) உணவு உற்பத்தியில் தன்னிறைவை இழக்கச் செய்தல்; நிலம், நீர், இயற்கை வளங்கள், சுற்றுச்சூழல், தாவரங்கள், விலங்குகள் போன்ற பல்வகை உயிரிகள், உற்பத்தி இவைகளின் மீது இம்மண்ணின் மைந்தர்களுக்கு இருந்து வரும் பாரம்பரிய உரிமையை, உறவை இழக்கச் செய்தல், உழைப்பாளிகளிடமிருந்து உழைப்பதற்குள்ள உரிமையை - ஆற்றலை இழக்கச் செய்தல்; மனிதன் வாழ்வதற்குரிய உரிமையையே இழக்கச் செய்தல்; அரசாங்கம் ஆட்சி செய்வதற்குரிய அரைகுறை அதிகாரத்தையும் மேல்நிலை வல்லரசுகளிடம் இழத்தல்; மொத்தத்தில் இந்த நாடும் சமுதாயமும் தன்னை இழத்தல் - இவைதான் புதிய விவசாயத்தின், கருமைப்புரட்சியின் இலக்குகளாகும்.

### விவசாயிகளின் விவசாயப் புரட்சி ஒன்று தான் ஒரே தீர்வு

ஏற்கனவே உள்ள பிரஷ்யன்-ஜங்கர் நிலப்பிரபுக்களோடு இப்போது தேசங்கடந்த தொழில் கழகங்களின் ஏகாதிபத்திய முதலாளிகளும் கூட்டுச் சேர்ந்து, நேரடியாக விவசாயிகளைக் கொள்ளையிடுவது நடக்கும். ஸ்தலத்தில் இல்லாத நிலப்பிரபுக்களாகத் தேசங்கடந்த



புடிப்பகம்

www.padippakam.com

தொழிற்கழகங்களின் முதலாளிகளும் தரகுப் பெருமுதலாளிகளும் இப்போது செயல்படத் தொடங்குவார்கள். மேலும், விவசாயிகளின் நிலங்களை அப்கரிக்கத் தேசங்கடந்த தொழிற் கழகங்களுக்கும் நகர்ப்புற நிறுவனங்களுக்கும் அடியாள் படையாகச் செயல்படும் அரசியல் ரௌடிக் கும்பலையும் அதிகார வர்க்கத்தையும் இனி அடிக்கடி கூலி, ஏழை, நடுத்தர, பணக் கார விவசாயிகள் எதிர்கொள்ள வேண்டியிருக் கும்.

புதிய விவசாயத்தின் விளைவாக ஏற்க னவே இருந்து வரும் பிரஷ்யன்-ஜங்கர் முறை யிலான விவசாயம் மேலும் உறுதிப்படுத்தப்ப டும்; காரணம், இது விவசாயிகளை மேலும் ஓட்டாண்டியாக்கி, மேலும் அவர்களுக்குத் துன்ப துயரங்கள் நிறைந்த பாதையில் முதலா ளித்துவத்தை மிகமிக மெதுவாக விவசாயத்தில் வளர்க்கிறது. சொல்லப்போனால் உற்பத்தி சக் திகள் பாழாக்கப்படும். இயற்கை வளங்கள், மனித வளங்கள் இரண்டும் சூறையாடப்படும். புதிய விவசாயக் கொள்கை மூலமாக நிலப்பிர புக்களும், ஸ்தலத்தில் இல்லாத நிலப்பிரபுக்க ளும் மேலும் வலிமையூட்டப்படுகின்றனர். நீர், நீர்ப்பாசனக் கால்வாய்கள், நீர் நிலைகள், மின்சாரம் ஆகியவை தனியார் மயமாக்கப்படு வதாலும், சரக்காக்கப்படுவதாலும் புதிய பொருளாதாரக் கொள்கை, காட் ஒப்பந்தம் காரணமாகக் கிராமப்புறங்களிலிருந்து விரட் டப்படுகின்ற விவசாயிகளைத் தொழிற் துறை ஈர்க்கின்ற வாய்ப்பு இல்லாததாலும், ஏற்க னவே உள்ள நிலப்பிரபுத்துவ கௌரவம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் புதிய வடிவில் பின்பற்றப்படுவதாலும் அரை நிலப்பிரபுத்து வம் மேலும் பாதுகாக்கப்படுகின்றது.

விவசாயச் சங்கங்கள் இனி கட்டுப்படியா கும் விலை, நல்ல கூலி, உரம், பூச்சி மருந்து மின்சாரம் ஆகியவைகளை மானிய விலையில் கோருவது போன்ற கோரிக்கைகளைவிட 'விவசாயிகளாகிய எங்களிடமிருந்து விவசா யத்தைப் பறிக்காதே' என்பதையே முதன்மை யான கோரிக்கையாக வைத்துப் போராட வேண்டியுள்ளது. இந்த மண் எங்களுடையது; இந்த சுற்றுச்சூழல் எங்களுடையது; இந்நாட் டின் மக்களுக்காகவே எங்களது விவசாயம்; இந்த மண்ணையும் சுற்றுச்சூழலையும் பாது காப்போம்; உழுபவனுக்குத்தான் நிலம் சொந் தம்; இவற்றையெல்லாம் தீர்மானிக்கும் அதி காரம் விவசாயிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகள் கமிட்டிகளுக்கே இருக்க வேண் டும்! என்ற கோரிக்கைகளை முன் வைத்துச் செயல்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

விவசாயிகளுக்கான இந்த அதிகாரத்தைத் தேர்தல் பாதை மூலம் அடைய முடியாது என்பது கண்கூடு. எனவே, 'உழுபவனுக்கே நிலம்', 'உழைப்பவருக்கே அதிகாரம்' என்ற முழக்கங்களை மையமாகக் கொண்ட விவசா யிகளின் விவசாயப் புரட்சியே - புதிய ஜனநாயகப் புரட்சியே - ஒரே தீர்வாகும்.

★ ★ ★



படிப்பகம்

www.padippakam.com

# மாசேதுங் சிந்தனை பற்றிய பொதுப் பிரகடனம்

(நெதர்லாந்தில் இயங்கும் மார்க்சிய - லெனினியக் கட்சிகளின் சர்வதேச ஒருங்கிணைப்புக் குழுவால் மாசேதுங் சிந்தனை பற்றிய இப்பொது பிரகடனம் தயாரிக்கப்பட்டது. இது வரை பத்து மார்க்சிய - லெனினியக் கட்சிகள் மற்றும் குழுக்கள் இதை அங்கீகரித்துள்ளன. அவை: பிலிப்பைன்ஸ் பொதுவுடமைக் கட்சி, ஜப்பானியப் பொதுவுடமைக் கட்சி (இடது சாரி), ஜெர்மானிய மார்க்சிய - லெனினியக் கட்சி, ஆஃப்கானிஸ்தான், அர்ஜண்டைனா, ஸ்பெயின், லக்சம்பர்க், நெதர்லாந்து, உருகுவே மற்றும் ஜைரே நாட்டு மார்க்சிய - லெனினிய அமைப்புகள் ஆகியவை. தகவல் மற்றும் ஆய்வுக்காக இது முழுமையாக வெளியிடப்படுகிறது. - ஆசிரியர்)

மாபெரும் கம்யூனிச சிந்தனையாளரும் தலைவருமான தோழர் மாசேதுங் டிசம்பர் 26,
1893 ~~1983~~-இல் பிறந்தார். அவரது நூற்றாண்டில் கொண்டா்டுமுகத்தான் நாங்கள் இப்பிரகடனத்தை வெளியிடுகிறோம். இது மார்க்சிய - லெனினியக் கோட்பாடு மற்றும் நடைமுறைக்கு அவரது மகத்தான பங்களிப்பை மெச்சிப் புகழ்கிறது. இன்றைய உலக நிலைமைகளில் அவற்றின் அவசரத் தேவையை சுட்டிக் காட்டுகிறது.

முன்னெப்போதைக் காட்டிலும், மேலும் உறுதியாக, மாசேதுங் சிந்தனையின் அடிப்படை போதனைகளைக் கற்று நடைமுறைப்படுத்தும்படி உலகம் முழுவதிலும் உள்ள தொழிலாளர் வர்க்கப் புரட்சிகரக் கட்சிகளையும், அனைத்து நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தையும், ஒடுக்கப்பட்ட தேசங்களையும் மக்களையும், பாட்டாளி வர்க்கப் புரட்சிகரப் போராளிகளையும் அறைகூவி அழைக்கிறோம்.

தோழர் மாசேதுங் மார்க்சிய - லெனினிய போதனையையும் நடைமுறையையும் மரபுரிமையாகப் பெற்று, உயர்த்திப் பிடித்து, பாதுகாத்து விரிவுபடுத்தினார்; மார்க்சிய - லெனினியத்தை ஒரு புதிய உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்தினார்; மார்க்சிய - லெனினிய மாசேதுங் சிந்தனை அல்லது மாவோயியம் என்ற அழிவற்ற பலமிக்க மரபுரிமைச் செல்வத்தை நமக்கு விட்டுச் சென்றுள்ளார். மகத்தான கம்யூனிசத் தலைவர்களான மார்க்சு, எங்கெல்சு, லெனின், ஸ்டாலின் ஆகியோருடன் இவரும் ஒரு மகத்தான கம்யூனிசத் தலைவராக விளங்குகிறார்.

## மார்க்சிய - லெனினியத்துக்கு மகத்தான பங்களிப்பு

மார்க்சும், எங்கெல்சும் முன்வைத்த மார்க்சியத்தினுடைய மூன்று உள்ளடக்க கூறுகளின் (பொருள் முதலியல் தத்துவம், அரசியல் பொருளாதாரம் மற்றும் அறிவியல்பூர்வ சோசலிசம்) அடிப்படைக் கோட்பாடுகளைக் கையேற்று, அவற்றை மேலும் வளர்ப்பதற்கு அவர் பங்களிப்புச் செய்தார்.

பொருள் முதலியல் தத்துவத்தில், மாவோ மகத்தான பங்களிப்பைச் செய்தார். முரண்பாட்டின் விதிகளினுடைய அதிமிகு அடிப்படை, எதிர்மறைகளின் ஒற்றுமை என்ற விதியே என்பதை லெனின் குறித்துக் காட்டியதைப் பின்பற்றி அவர், எதிர்மறைகளின் ஒற்றுமை என்ற விதியை விரிவுபடுத்தினார்; இதன் வாயிலாக இயங்கியல் பொருள் முதலியல் பற்றிய நமது புரிதலை மேலும் ஆழப்படுத்தினார்.

சமூக நடைமுறையானது உற்பத்தி, வர்க்கப் போராட்டம், அறிவியல் சோதனை ஆகியவற்றை உள்ளடக்கியது; இதுவே சரியான கருத்துக்களின் ஊற்று மூலம் என மெய்ப்பித்தார். அறிவுக்கும் சமூக நடைமுறைக்கும் இடையிலான இயங்கியல் உறவினை அவர் நிரூபித்தார். இது போலவே அறிதலின் நிகழ்ச்சிப் போக்கில் புலனறிவு மற்றும் பகுத்தறிவு மட்டங்களுக்கு இடையிலான இயங்கியல் உறவையும் அவர் நிரூபித்தார்.

உற்பத்தி உறவுகளைக் காட்டிலும் உற்பத்தி சக்திகளே முதன்மையானது. மேல் கட்டுமானத்தைக் காட்டிலும் உற்பத்தி முறையே முதன்மையானது என்ற பொதுவான உண்மையை தமது மகத்தான மார்க்சிய மூலவர்களைப் போலவே இவர் ஏற்றுக் கொண்டார்.

ஆனால் இடையறாத புரட்சிகர மாறுதல்கள் என்ற நிகழ்ச்சிப் போக்கில் புதிய உற்பத்தி உறவுகளும் புதிய மேற்கட்டுமானமும் தலை



படிப்பகம்

www.padippakam.com

யாய பாத்திரமாற்ற முடியும்; புதிய உற்பத்தி உறவுகள் உற்பத்தி சக்திகளை பழைய தளைகளிலிருந்து விடுவிக்கும்; மேற்கட்டுமானமோ புதிய உற்பத்தி முறையை வலுப்படுத்தும் என அவர் சுட்டிக் காட்டினார்.

வர்க்கத் தன்மை என்பது உற்பத்தி சாதனங்களின் உடைமை, உற்பத்தியில் ஆற்றும் பாத்திரம், சமூக உற்பத்தி வினியோகிக்கப்படுவது ஆகியவற்றால் மட்டும் தீர்மானிக்கப்படாமல் சமூக உற்பத்தியை நடத்துகின்ற சிந்தனை முறையாலும் தீர்மானிக்கப்படுகிறது என்பதை மாவோ சுட்டிக் காட்டினார். சமூக வாழ்வுக்கும் சமூக உணர்வுக்கும் இடையிலான இயங்கியல் உறவைத் தெளிவாகப் புரிந்து கொண்ட அவர், தொடர்ச்சியாக சிந்தனையைப் புரட்சிகரமாக்குவது மற்றும் கலாச்சாரப் புரட்சியின் தேவையை வலியுறுத்தினார்.

பொருளாதாரம் மற்றும் அரசியலின் பிரதிபலிப்பே கலாச்சாரம் என அவர் வரையறுத்தார். இவற்றுடன் கலாச்சாரம் ஒரு இயங்கியல் உறவைக் கொண்டுள்ளது. கலை இலக்கியம் பற்றிய தமது கோட்பாட்டில், படைப்புகள் புரட்சிகரமான வர்க்கப் போராட்டத்தை பிரதிபலிக்க வேண்டும் என்றும் படைப்புகளில் புரட்சிகர தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் படைவீரர்கள், தலைவர்கள் என்ற முக்கியத்துவத்தை வகிக்கச் செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். புரட்சிகர வீர - காதல் பண்பை ஆதரித்த அவர், இந்த அடிப்படையில் கவிதைகள் எழுதினார். வெகு மக்களுக்கு கல்வி அளிப்பதில் கலையும் இலக்கியமுமே முக்கியமான வழிமுறை என அவர் அறைந்து கூறினார்.

தனது முந்தைய மாபெரும் தலைவர்களின் வரலாற்றியல் பொருள் முதலியல் பற்றிய போதனையினால், குறிப்பாக, வர்க்க சமுதாயத்தில் அரசும் புரட்சியும் பற்றி போதனையினால், அவர் பேரூக்கம் கொண்டார். மார்க்சியத்தின் புரட்சிகர சாரத்தை அவர் உறுதியாக வரித்துக் கொண்டார். பாட்டாளி வர்க்கம் வர்க்கப் போராட்டத்தைத் தொடுக்க வேண்டும், அரசு அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும், முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான வர்க்க சர்வாதிகாரமான சோசலிச அரசை நிறுவ வேண்டுமென அவர் உறுதியாக வற்புறுத்தினார்.

பருண்மையான நிலைமைகளைப் பற்றிய பருண்மையான ஆய்வு சமூக ஆய்வு மற்றும் மக்கள் திரளிடையிலான பணி ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்; அனைத்து வகைப்பட்ட கருத்து முதலியல்வாதம், தன்னோக்கு வாதம், வலது மற்றும் ''இடது'' சந்தர்ப்பவாதம் ஆகியவற்றை அவர் எதிர்த்துப் போராடினார்; சரியான கருத்துக்களை ஒரு இயற்பியல் (பௌதிக) சக்தியாக மாற்றுவதற்காக அவர் மக்கள் திரள் வழியை கைக் கொண்டார் - புரட்சிகர நடைமுறையின் போது இவை அனைத்தையும் அவர் மேற் கொண்டார்.

மார்க்சு மற்றும் எங்கெல்சினுடைய அறிவியல்பூர்வ சோசலிசத்தின் உருவரையான முதலாளியம் பற்றிய விமரிசனம், லெனின் மற்றும் ஸ்டாலினுடைய ஏகபோக முதலாளியம் அல்லது நவீன ஏகாதிபத்தியம் பற்றிய விமரிசனம், சோசலிசப் புரட்சியை சாதிப்பது மற்றும் கட்டியமைப்பதையும் பற்றிய போதனைகள் ஆகியவற்றை ஆழமாக தன்வயமாக்கிக் (கிரகித்துக்) கொண்டார்.

சோவியத் யூனியனில் சோசலிசத்தைக் கட்டியமைத்ததன் நேர்மறை மற்றும் எதிர் மறைப் படிப்பினைகளைக் கற்றறிந்தார். 1957-இல் நவீன திரிபுவாதத்தையும் முதலாளிய மீட்சியையும் விமர்சித்து மறுதலித்தார். சோவியத் நவீன திரிபுவாதிகளின் வர்க்க இயல்பையும், சோவியத் யூனியன் ஏகபோக அதிகார வர்க்க முதலாளிகளாக இழிந்து போனதையும் திரை கிழித்துக் காட்டினார். சமூக - பாசிசத்தை நோக்கிய சோவியத் யூனியனின் பொதுப் போக்கை வெளிப்படுத்தினார். அமெரிக்க ஏகாதிபத்தியம், சோவியத் சமூக ஏகாதிபத்தியம் ஆகிய இரு மேல்நிலை வல்லரசுகளின் புதிய காலனியத்தை எதிர்த்து நின்றார். இவை அனைத்துக்கும் மேலாக பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்வில் ஊன்றி நின்று சீனாவில், சுயசார்பு அடிப்படையில் சோசலிசப் புரட்சியிலும் கட்டுமானத்திலும் ஈடுபட்டார். இவை அனைத்தின் மூலம் மார்க்சிய அரசியல் பொருளாதாரம் மற்றும் அறிவியல் பூர்வ சோசலிசம் பற்றிய நமது அறிவை அவர் மேலும் விரிவுபடுத்தி ஆழப்படுத்தினார்.

மார்க்சிய - லெனினியத்தின் முழுநிறை உண்மைத் தத்துவத்தை சீனாவின் அரை - கால



படிப்பகம்

www.padippakam.com

னிய அரை - நிலப்பிரபுத்துவப் பருண்மையான நிலைமைகளுடன் மாவோ இணைத்தார்; உலகப் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சி என்ற நிலைமைக்கு ஏற்ப, அவர், பாட்டாளி வர்க்கத் தலைமையில், சீனப் புரட்சியை வழி நடத்தினார், மானிட இனத்தின் கால் பகுதியினரைக் கொண்ட, பரந்து விரிந்த சீனாவில் அவர், புதிய ஜனநாயகப் புரட்சியை வெற்றிக்கு வழிநடத்திச் சென்றார்; இதனால் மாவோ எவரும் மறுக்க இயலாத ஒரு மகத்தான கம்யூனிச சிந்தனையாளராகவும் தலைவராகவும் ஆனார்; இதற்காக உலகப் பாட்டாளி வர்க்கமும் மக்களும் அவர் குறித்துப் பெருமிதம் கொள்ள முடியும்.

சீனப் புரட்சியின் வளர்ச்சியில், பொதுவுடமைக் கட்சியை, தொழிலாளர் வர்க்கத்தின் முன்னேறிய படைப்பிரிவாக கட்டியமைப்பது பற்றிய மகத்தான லெனினது போதனைகளால் மாவோ வழிநடத்தப்பட்டார். புரட்சிகர பாட்டாளி வர்க்க கட்சியை சித்தாந்த, அரசியல் மற்றும் அமைப்பு ரீதியில் வலுப்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாக அவர் சீர் செய்யும் இயக்கத்தை அறிமுகப்படுத்தினார்.

இயங்கியல் பொருள் முதலியல் அடிப்படையிலான அரசியல் மற்றும் இராணுவ அறிவியலில் மேதமை பெற்ற அவர், அவற்றில் ஈடிணையற்றவரானார். அவர், நீண்டகால மக்கள் யுத்தத்தின் கோட்பாட்டையும் யுத்த தந்திர வழியையும் வகுத்து வெற்றிகரமாக வழிநடத்தினார். இன்றளவிலும், புரட்சி யுத்தத்தில், அவரது இராணுவப் படைப்புகள் தெளிவிலும் வளத்திலும் கடக்கப்படாதவையாக விளங்குகின்றன. வெவ்வேறு கட்டங்களிலும் வெவ்வேறு ஆயுதப் போராட்ட வடிவங்களிலும் மிகப் பிரம்மாண்டமான அளவில் புரட்சிகர சக்திகளை அவரது படைப்புகள் வழி நடத்தின.

கோடானு கோடி மக்களைத் தட்டியெழுப்புவதற்கு புரட்சிகர ஐக்கிய முன்னணியில் ஊன்றி நிற்கும்படியாக அவர் பொதுவுடமைக் கட்சியை வழி நடத்தினார். அதே வேளையில், அவர், தொழிலாளர் வர்க்க கட்சியின் சுயேச்சைத் தன்மையையும் முன்முயற்சியையும் உத்திரவாதப்படுத்தி, அதன் தலைமையாற்றும் பாத்திரத்தை உறுதி செய்தார். நாடு தழுவிய அளவில், அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்பே, ஐக்கிய முன்னணியில், இந்த வழியை அவர் உத்திரவாதப்படுத்தினார். நாடு தழுவிய வெற்றிக்குப் பின்னர், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கருவாகக் கொண்ட, மக்கள் ஜனநாயக அரசை அவர் நிறுவினார்.

அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதன் வாயிலாக புதிய ஜனநாயகப் புரட்சி அடிப்படையில் நிறைவுற்ற பின்னர், சோசலிசப் புரட்சியையும் கட்டுமானத்தையும் தலைமையேற்றுத் தொடர்ந்து முன்னேறிய மாவோ, லெனின் மற்றும் ஸ்டாலின் தலைமையிலான சோவியத் யூனியன் வழங்கிய முன் அனுபவத்தை மேலும் முன்னேற்றினார். பொதுவுடமைக் கட்சி சோசலிச அரசில் தலைமைப் பாத்திரம் ஆற்றியது. அது, பல கட்சி ஆதரவைக் கொண்டிருந்தது; சமூகத்தின் அனைத்துக் கூறுகளையும் அது, புரட்சிமயமாக்க முயற்சித்தது.

உற்பத்தி சாதனங்களில் தனியுடைமையை பொது உடைமையாக மாற்றி சோசலிசக் கட்டுமானத்தில் மாவோ ஈடுபட்டார். சமச்சீரான மற்றும் தகவுப் பொருத்தமான சுயசார்பு பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிட்டு எடுத்துச் சென்றார்; விவசாயம் அடிப்படைக் காரணியாகவும், கனரக மற்றும் அடிப்படைத் தொழில்கள் தலைமைக் காரணியாகவும், நுகர்வுத் தொழில் இவற்றை இணைப்பதாகவும் அமைந்தது; மக்களின் வாழ்க்கைத் தரமும் கலாச்சாரமும் ஒரு மட்டத்திலிருந்து அடுத்தமட்டத்திற்கு சீராக முன்னேறியது. அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கும் உழைக்கும் மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கும் மீமிகு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டது.

மாபெரும் பாய்ச்சல், ''இரு கால்களால் நடப்பது'', கம்யூன்களை உருவாக்குவது ஆகியவற்றின் வாயிலாக சோசலிசப் புரட்சியையும் கட்டுமானத்தையும் முன்னெடுத்துச் செல்லும் மாவோவின் வழி சோதிக்கப்பட்டு சரியென நிரூபிக்கப்பட்டது. அவரது வழி ஏகாதிபத்திய முற்றுகை, திரிபுவாத சீரழிவு, இயற்கைப் பேரழிவுகள் ஆகியவற்றை வெற்றி கொண்டதுடன் சீனாவின் தொழில் வளர்ச்சிக்கான அடிப்படையை பலப்படுத்தியது. அமோக அறுவடைகள் நடந்தன; விவசாய உற்பத்திக்குப் போதுமான அளவு உதவும்படியாகவும் மக்களின் நுகர்வைத்



படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்து உயர்த்துவதாகவும் தொழில் உற்பத்தி அமைந்தது.

மாசேதுங்கின் தலைமையில், சீனா உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் நம்பகமான கோட்டையாக விளங்கியது. சீனப் பொதுவுடைமைக் கட்சியும் பாட்டாளி வர்க்கமும் அனைத்து தேசிய இனங்களைச் சேர்ந்த மக்களும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைப் பற்றி ஒழுகினர். ஏகாதிபத்தியம், சமூக ஏகாதிபத்தியம், நவீன திரிபுவாதம், அனைத்து பிற்போக்கு ஆகியவற்றுக்கு எதிரான புரட்சிகரப் பொதுத் திசைவழியில் சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தை ஐக்கியப்படுத்தவும் பலப்படுத்தவும் தம்மால் இயன்றது அனைத்தையும் அவர்கள் செய்தனர்.

அவர்கள், தேச விடுதலைக்கும் அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கும் எதிரான, கொரிய மற்றும் இந்தோ - சீன மக்களின், வீரமிக்க மற்றும் வெற்றிகரமான போராட்டங்களுக்கு தன்னலமற்ற ஆதரவை அளித்தனர்; ஏகாதிபத்தியம், சமூக ஏகாதிபத்தியம், காலனியம், நவீன காலனியம், இனவெறி (நிறவெறி) ஆகியவற்றுக்கு எதிராக அடக்கி ஒடுக்கப்பட்ட ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க தேசங்களையும் மக்களையும் அணி திரட்டினர்; ஏகபோக மூலதனத்துக்கு எதிராகப் போராடி சோசலிச இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக முதலாளிய மற்றும் திரிபுவாதிகளினுடைய ஆட்சிகளின் கிழான பாட்டாளி வர்க்கத்தினதும் மக்களினதும் போராட்டங்களைத் தட்டியெழுப்பினர்.

உலக அளவிலான வர்க்கப் போராட்ட நிலைமையில் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்களை கூர்மையாக ஆய்வு செய்த மாசேதுங், உலகு மூன்று உலகங்களாகப் பிரிந்துள்ள யதார்த்தத்தைக் கவனத்தில் கொண்டு சோசலிச சீனத்தின் சரியான வெளியுறவுக் கொள்கையை மேற்கொண்டார். பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாட்டிற்குத் தகவான வழியில் ஏகாதிபத்தியம், சமூக ஏகாதிபத்தியம், அனைத்துப் பிற்போக்கு ஆகியவற்றுக்கு எதிரான சர்வதேச ஐக்கிய முன்னணியை ஊக்குவித்தார்; உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியை ஒழித்துக் கட்டும் திரிபுவாத வழிக்கு எதிரானதாக மாவோவின் வழி விளங்கியது.

## மாவோவின் மகத்தான சாதனை

சோசலிசத்தை கெட்டிப்படுத்தவும், நவீன திரிபுவாதத்தை எதிர்க்கவும், முதலாளிய மீட்சியைத் தடுக்கவும், மாவோ, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்ற கோட்பாட்டை முன்வைத்து நடைமுறைப்படுத்தினார். இது மாவோவின் மகத்தான சாதனையும், மார்க்சிய - லெனினியத்துக்கு அவரது மகத்தான பங்களிப்புமாகும்.

ஒரு பெரும் வரலாற்றுக் கால கட்டத்தைக் கொண்ட சோசலிச சமூகத்தில் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளிய வர்க்கத்துக்கும் இடையிலான வர்க்கப் போராட்டமே பிரதான முரண்பாடு என்று மாவோ உறுதிபடக் குறித்துக் காட்டினார். சோசலிச சமூகத்தின் முன்னேற்றத்தில் வர்க்கப் போராட்டமே கேந்திரக் கண்ணி என்றார் மாவோ. இந்தக் கேந்திரக் கண்ணியைக் கைவிட்டு விட்டால், பாட்டாளி வர்க்கப் புரட்சிகர உணர்வு, தேய்ந்து, சோசலிசமானது முதலாளியமாக அமைதியான வழியில் பரிணமித்து விடும்.

ஸ்டாலினின் தலைமையிலான சோவியத் அனுபவத்தைக் கவனத்தில் கொண்டு, மக்கள் மத்தியிலான முரண்பாடுகளுக்கும், மக்களுக்கும் எதிரிகளுக்கும் இடையிலான முரண்பாடுகளுக்கும், இடையில் உள்ள வேறுபாட்டை அங்கீகரிக்க வேண்டும் என்றும், மக்கள் மத்தியிலான முரண்பாடுகளை, தாம் தெளிவுபடுத்திய முறையிலேயே சரியாக கையாள வேண்டும் என்றும் மாவோ தெளிவுபடக் கூறினார்.

சோசலிச சமுதாயத்தில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் என்று மகத்தான தமது மார்க்சிய மூலவர்கள் கருதியவற்றை மாவோ கவனத்தில் கொண்டார். பழைய சுரண்டும் வர்க்கங்களின் மீதமிச்சங்கள் மற்றும் செல்வாக்கு, தொழிலாளர் வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான முரண்பாடுகள், நகரப்புறத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையிலான முரண்பாடுகள், மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையிலான முரண்பாடுகள், சிறு விதித உற்பத்தியால் தன்னெழுச்சியாக முதலாளிகள் உருவாவது, பழைய வழக்கங்கள் மற்றும் மரபுகளின் பலம் ஆகியவை சோசலிச சமுதாயத்தில்



படிப்பகம்

www.padippakam.com

தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளாக இருந்ததை மாவோ கண்டறிந்தார்.

நவீன திரிபுவாதத்துக்கும் முதலாளிய மீட்சிக்கும் எதிரான போராட்டத்தில், அப்பிரச்சினையைத் தீர்க்க அடுத்தடுத்து பல கோட்பாடுகளை முன்வைத்து, சர்வதேசப் பொதுவுடைமை இயக்கப் போராட்டத்தில் அவர் முன்னணியில் நின்றது மாவோவிற்கு பெரும் பெருமை சேர்த்தது.

சீனப் பொதுவுடைமைக் கட்சியில் அதிகார முதலாளித்துவ நீரோட்டங்களையும், இது போலவே வெளிநாடுகளில், யுகோஸ்லேவிய, சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நவீன திரிபுவாத மற்றும் முதலாளிய மீட்சியின் வளர்ச்சி பற்றியும் ஆய்ந்தறியும் சாதகமான நிலையை மாவோ பெற்றிருந்தார். சோசலிச சமூகத்தில் சோசலிசத்தைக் குழி பறித்து அழிக்கும் முதலாளியத்தின் நடைமுறை மற்றும் உள்ளார்ந்த ஆற்றல் காரணிகளை அவர் சுட்டிக் காட்டினார்.

தன்னலம் மற்றும் ஊழல், பெர்ன்ஸ்டின், காவுத்ஸ்கி ஆகிய திரிபுவாத மூலவர்களினுடைய 'உற்பத்தி சக்திகள் பற்றிய கோட்பாடு' என்பதற்கு சீரழிவது, பழைய சுரண்டும் வர்க்கங்களின் இடையறாது புதுப்பிக்கப்படும் கருத்துக்கள் மற்றும் செல்வாக்கு, அதிகார வர்க்கமும் புதிய அறிவாளிப் பிரிவினரும் குட்டி முதலாளிய மயமாவது, புதிய முதலாளிகள் உருவாவது ஆகிய இவை அனைத்துக்கும் எதிராக வெகு மக்கள் விழிப்புணர்வும் ஊக்கமான எதிர்ப்புணர்வும் கொண்டிருக்க வேண்டுமென அவர் அறைகூவி அழைத்தார்.

உற்பத்தி சாதனங்களில் தனியுடமையை அழித்து சோசலிச உற்பத்தி உறவுகளை முன்னிலைக்கு கொண்டு வருமாறும், உற்பத்தியில் பாட்டாளி வர்க்கப் புரட்சிகர அரசியலை ஆணையில் வைக்குமாறும், மேல்கட்டுமானத்தின் அனைத்துக் கூறுகளையும் புரட்சிகரமானதாகச் செய்யுமாறும் அவர் பாட்டாளி வர்க்கத்தையும் மக்களையும் அறைகூவி அழைத்தார்.

மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் வாயிலாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்ற கோட்பாட்டின் செயற்பாடானது 1966 முதல் 1976 வரையிலான பத்து ஆண்டுகள் வெற்றிகரமாக நடந்தேறியது; மானிட இனம் முன்னெப்போதும் அனுபவத்திராத அளவுக்கு அதிமிகப் பரந்து விரிந்த அளவிலான ஜனநாயகத்தைப் படைத்தது. ஆனால் மாவோவின் மறைவுக்குப் பின், எதிர்ப்புரட்சி வலதுசாரி முதலாளியப் பாதையாளர்கள், ஒரு ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தி மக்கள் சீனக் குடியரசில் முதலாளிய மீட்சியை நடத்தி முடிக்க இயன்றுள்ளது. 1871 பாரிஸ் கம்யூனினுடைய குறுகிய கால வெற்றியையும், அதையடுத்து அது அடைந்த தோல்வியையும் பற்றி காரல் மார்க்சு ஆய்ந்தறிந்த ஆக்கபூர்வ புரட்சிகரக் கண்ணோட்டம் மற்றும் முறைகளை பிரயோகித்தே சீனாவில் நடந்த மாறுதல்களை ஆய்ந்தறிய வேண்டும்.

எப்படி இருந்த போதிலும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்ற கோட்பாடு இன்னமும் செல்லுபடியாகக் கூடியதே; அதன் நடைமுறைப் பிரயோகத்தின் நேர்மறை மற்றும் எதிர்மறைப் படிப்பினைகள் இன்னமும் தொகுக்கப்பட வேண்டும். பாரிஸ் கம்யூனின் தோல்வி, எந்த விதத்திலும் பாட்டாளி வர்க்கப் புரட்சி மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற கோட்பாட்டை பொய்ப்பித்து விடவில்லை; மகத்தான அக்டோபர் சோசலிசப் புரட்சியின் இறுதி வெற்றிக்கான படிப்பினைகளை அது அளித்தது.

மாவோ, நவீன திரிபுவாதம் பற்றியும் அமைதியான பரிணாம வளர்ச்சியின் வாயிலாக முதலாளிய மீட்சி நடந்தேறுவது பற்றிய பிரச்சினையை எழுப்பியதுடன் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்ற கோட்பாட்டை முன்வைத்தது மிகச் சரியானது என்பது நிரூபிக்கப்பட்ட விசயமாகும். திரிபுவாதக் கட்சிகளும் ஆட்சிகளும் நெருக்கடிகளில் வீழ்ந்து, பலவீனமடைந்து கலைந்து போனதும் - கிழக்கு ஐரோப்பாவிலும் முன்னாள் சோவியத் யூனியனிலும் நாள் தோறும் இடையறாது மோசமடையும் முதலாளிய நிலைமைகளிலான சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறையும் - மாவோவின் சரியான முடிவுகளுக்கு நிருபணமே. சமூக ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசு தகர்ந்து போனதானது மாவோ 1964-இல் முன்



படிப்பகம்

www.padippakam.com

வைத்த, ''திரிபுவாதிகள் ஆட்சிக்கு வருவது என்பது முதலாளிகள் ஆட்சிக்கு வருவதையே தெளிவாகக் காட்டுகிறது'' என்ற உண்மையை உறுதிபடுத்துகிறது.

சீனாவில் மாவோவை எதிர்ப்பவர்கள் அதிகாரத்துக்கு வந்தது, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்ற கோட்பாடு மற்றும் நடைமுறை பின்னடைவுக்கு உள்ளானது ஆகியவற்றின் விளைவாக சீனாவில் முதலாளிய மீட்சி நடந்தேறியது. சீனா, இப்போது ஊழல் படிந்த அதிகாரவர்க்க முதலாளிகளாலும் பெரும் தரகு முதலாளிகளாலும் ஆளப்படுகிறது. இவர்கள் நகர்ப்புறத்தில் உள்ள சிறப்புச் சலுகை - உரிமைகள் பெற்ற குட்டி முதலாளிகளாலும் (கிராமப்புறத்தில் - மொ.ர்) பணக்கார விவசாயிகளாலும் ஆதரிக்கப்படுகின்றனர். சீன முதலாளிகள் சீனப் பாட்டாளி வர்க்கத்தையும் மக்களையும் ஒட்டச் சுரண்டி அடக்கி ஒடுக்குகிறார்கள். ஏகாதிபத்திய மூலதனத்தின் பரந்தளவு நுழைவுக்கு சீனாவின் கதவுகள் விரியத் திறக்கப்பட்டு உள்ளன.

சீன அரசு தனது சோசலிசத் தன்மையையும் சீனப் பொதுவுடைமை கட்சியோ தனது மார்க்சிய - லெனினியத் தன்மையையும் பறி கொடுத்து விட்டன. உள்நாட்டு முரண்பாடுகள் மற்றும் புதிய காலனியவாதிகளின் நிர்ப்பந்தங்களின் விளைவாக - கிழக்கு ஐரோப்பாவிலும் முன்னாள் சோவியத் யூனியனிலும் நிகழ்ந்தது போல, சீன நவீனத் திரிபுவாதிகளும் முதலாளியப் பாதையாளர்களும் ''சோசலிச'' முகமூடியை வீசியெறிவது என்பது உடனடியாகவோ அல்லது சிறிது காலம் தாழ்ந்தோ நடக்க கூடிய விசயமாகும். ஆனால், மாவோ சிந்தனையினுடைய புரட்சிகரமான வழித்தோன்றல்களான நேர்மையான சீனப் பொதுவுடைமையாளர்களும், பாட்டாளி வர்க்கமும், மக்களும் மீண்டும் ஒரு முறை கிளர்ந்தெழுந்து, தமது ஒடுக்குமுறையாளர்களையும் சுரண்டலாளர்களையும் தூக்கி எறிவர் என்று நாம் நம்புகிறோம்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவது என்ற மாவோவின் கோட்பாடு இல்லாமற் போயிருந்தால், பாட்டாளி வர்க்கப் புரட்சிகரக் கட்சிகளுக்கும் உலகப் பாட்டாளி வர்க்கத்துக்கும் என்ன இழப்பு ஏற்பட்டிருக்கும்? ஆளும் திரிபுவாதக் கட்சிகள் மற்றும் ஆட்சிகள் திடுதிப்பென கலைந்து போனதைப் புரிந்து கொள்ள இயலாமல் போயிருக்கும். ஏகாதிபத்தியவாதிகளினதும், அவர்களது அடிவருடிகளான குட்டி முதலாளிகள் மற்றும் பிற்போக்காளர்களின் சித்தாந்த மற்றும் அரசியல் தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாமல் போயிருக்கும். மகத்தான கம்யூனிஸ்டுகள் லெனின் அல்லது ஸ்டாலினுடன் அல்லது திரிபுவாத பிரஷ்னேவ் அல்லது கோர்பசோவுடன் மார்க்சிய - லெனினியத்தின் வளர்ச்சி நின்றுவிட்டது என்ற நவீன திரிபுவாதிகளின் முட்டாள்தனமான வாதங்களை மறுக்க இயலாது போயிருக்கும்.

உலக முதலாளியக் கட்டமைவினுடைய அதீத உற்பத்தி என்ற நெருக்கடி சீறிக் கொண்டு இருக்கிறது; முன்னெப்போதும் கண்டிராத அளவு ஒடுக்குமுறையையும் சுரண்டலையும் அது கட்டவிழ்த்து விட்டுள்ளது; புரட்சிப் போராட்டங்களைத் தொடுக்கும்படி பாட்டாளி வர்க்கத்தையும் மக்களையும் அது உந்தித் தள்ளுகிறது. ஏகபோக முதலாளிகளின் கரங்களில் உள்ள உயர் தொழில் நுட்பம், மிகச் சிலவான பெரிய ஆனால், பூதாகரமான ஏகபோகங்கள் அதிமிகு இலாபத்தைச் சுரண்டி எடுப்பது, ஏகபோகங்களுக்கு இடையிலான கழுத்தறுப்பு போட்டி, செறிவான நிதி மற்றும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வேலை வாய்ப்புகளை அழிப்பது, புதிய காலனிய சார்பு நாடுகளைத் தீவிரமாக அடக்கி ஒடுக்கிச் சுரண்டுவது ஆகியவை நெருக்கடியை மேலும் மேலும் முடுக்கி விடுகின்றன.

இந்த நெருக்கடி ஏகாதிபத்திய எதிர்ப்பு சோசலிச இயக்கப் புத்தெழுச்சியை அவசியமானதாக்கி நியாயப்படுத்துகிறது. ஆனால் எப்போதும் எழும் கேள்வி, ஏகபோக முதலாளியம் உலகளாவிய அளவில் தோற்கடிக்கப்படுவதற்கு முன்னர், பல நாடுகளில் உள்ள புதிய ஜனநாயக மற்றும் சோசலிசப் புரட்சிகளின் புதிய அலை வெற்றி பெறுமா என்பதே.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்ற கோட்பாட்டினால் மாவோ இதற்கு விடை அளித்து உள்ளார். மார்க்சிய - லெனினியக் கோட்பாடு மற்றும்


படிப்பகம்

www.padippakam.com

நடைமுறையினுடைய வளர்ச்சியில் ஒரு புதிய மற்றும் உயர்ந்த கட்டத்தைத் துவக்கியதன் மூலம் இந்தக் கோட்பாடு மகத்தான வரலாற்று முக்கியத்துவத்தை அடைகிறது. இது மாசேதுங் சிந்தனையின் அல்லது மாவோயியத்தின் வளர்ச்சிக் கட்டம்.

இந்தக் கோட்பாட்டால் ஆயுதபாணியான, பல்வேறு நாடுகளின் பாட்டாளி வர்க்கமும் மக்களும், சோசலிசப் புரட்சியில் வெற்றிபெறும் போது, சோசலிசத்தை வளர்க்க தாம் எதிர்கொள்ளும் பிரச்சினையைப் புரிந்து கொள்ளவும் தீர்க்கவும் முடியும். உலக அளவில் ஏகாதிபத்தியமும் அனைத்துப் பிற்போக்கும் தோற்கடிக்கப்பட்டு, கம்யூனிசத்தின் இறுதி இலட்சியம் நிறைவேற்றப்படும் நிலை தோன்றும் வரையிலான பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளவும் தீர்க்கவும் இக் கோட்பாடு உதவும்.

## முடிவுரை

இப்பிரகடனத்தில் மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையின் அல்லது மாவோவியத்தின் மகத்தான செம்பதாகையை நாங்கள் உயர்த்திப் பிடித்து உள்ளோம். இக்கோட்பாட்டைக் கற்று நடைமுறைப்படுத்துவோம். ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் அவர்களது அனைத்துக் கம்யூனிச எதிர்ப்பு அடிவருடிகளின் சித்தாந்த மற்றும் அரசியல் தாக்குதல்களுக்கு எதிராக எதிர்த்தாக்குதலை நடத்துவோம்; ஏகாதிபத்தியம் மற்றும் அனைத்து பிற்போக்குக்கும் எதிராகவும் தேச விடுதலை, ஜனநாயகம் மற்றும் சோசலிசத்துக்கான புரட்சிகர இயக்கப் புத்தெழுச்சியில் பாட்டாளி வர்க்கத்தையும் மக்களையும் தட்டியெழுப்பி, அமைப்பாக்கி அணிதிரட்டுவோம் — இவை அனைத்தையும் ஈடேற்ற நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்.

மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையை உறுதியாகப் பற்றி நிற்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்கள்தான் இன்று உலகப் பாட்டாளி வர்க்கத்தினுடைய மிகவும் முன்னேறிய கெட்டிப்படுத்தப்பட்ட படையணியினர் ஆவர். திரிபுவாதக் கட்சிகள் மற்றும் ஆட்சிகள் கலைந்து தகர்ந்து போனது, மோசமடையும் உலக முதலாளியக் கட்டமைவின் நெருக்கடி, ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் சோசலிச இயக்கத்தின் எதிர்வரும் புத்தெழுச்சி, உலகில் எதிர்கால சோலிசத்தின் நிச்சய வெற்றி மற்றும் கம்யூனிசத்தின் இறுதி வெற்றி ஆகிய அனைத்தையும் அவர்கள் அதிமிக உள்ளாற்றலுடனும் அதிமிக ஆழ்ந்தறிவாற்றலுடனும் புரிந்து கொண்டு உள்ளனர்.

மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனையின் கோட்பாட்டையும் நடைமுறையையும் முன்னேற்றுவது; சோசலிசத்துக்காகவும் ஏகபோக முதலாளியத்துக்கு எதிராகவும் போராடுகின்ற, நவீன திரிபுவாதத்தின் வீழ்ச்சியைப் பற்றி கற்க அவாக் கொண்ட, நேர்மையான கட்சிகள் மற்றும் அமைப்புகளை வென்றெடுப்பது; உலகில் புதிய புரட்சிகர போராட்ட காலகட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தினரும் மக்களினதும் ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் சோசலிச இயக்கத்தின் புத்தெழுச்சியை உருவாக்குவது - இவை அனைத்துப் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்களினதும், அவர்களது கட்சிகள் மற்றும் அமைப்புகளினதும் சீரிய புரட்சிகர மற்றும் சர்வதேசியக் கடமையாகும்.

★ ★ ★



படிப்பகம்

www.padippakam.com

# புரட்சிப் புயல்

ஜனவரி 1994 - மார்ச் 1996
ஆண்டு-20 இதழ்-2 முதல்
ஆண்டு-22 இதழ்-4 முடிய

இந்திய பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாகும். புரட்சியில் இந்திய மக்களை வழி நடத்திச் செல்லும் அரசியல் கருக்குழுவாகும். அதே சமயத்தில் கட்சியானது உலகப் பாட்டாளி வர்க்கப் போர்ப்படையின் ஓர் அணியாகும். இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) அதன் சிந்தனைக்கும் நடைமுறைக்குமான வழிகாட்டியாக மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனையை உயர்த்திப் பிடிக்கிறது.

- பசுமைப் புரட்சிக்குப் பாலிடால்! - கருமைப் புரட்சிக்கு காம்ப்ளெக்ஸ் உரம்!

★ ★ ★

- மாசேதுங் சிந்தனை பற்றிய பொதுப் பிரகடனம்

★ ★ ★

- செங்கொடி குழுவின் விமர்சனமும் நமது மறுப்பும்

★ ★ ★

## இந்தியாவில் தேசிய இனப்பிரச்சினை குறித்த சிறப்பியல்புகளும் அதைக் கையாளுவதில் உள்ள சில தவறான போக்குகளும்

இந்தியாவில் தேசிய இனப் பிரச்சினை பற்றி பல்வேறு கருத்தரங்குகளும் ஆராய்ச்சிகளும் நடத்தப்பட்டு அறிக்கைகள் பல வெளியாகியுள்ளன. தேசிய இனப் பிரச்சினை குறித்த மா-லெ அடிப்படைகளைப் பின்பற்றாததால் பல தவறுகளும் நடந்துள்ளன. எனவே, கோட்பாடு, நடைமுறை இரண்டிலும் பலதவறான போக்குகள் தொடர்ந்து நிலவுகின்றன. பல மா-லெ குழுக்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

சில தவறான போக்குகள் பின்வருமாறு:

★ தேசிய இனப் பிரச்சினைகளின் சில கூறுகள் இருந்தாலே போதும், அவற்றை தேசிய இன இயக்கமாகச் சித்தரிப்பது - எடுத்துக்காட்டாக, தனிமாநிலக் கோரிக்கை அல்லது சுயாட்சி அமைப்புக்களை தேசிய இனத்திலேயே ஒரு பிரிவு கோருவது; அல்லது, சிறுபான்மை தேசிய இனங்களே கோருவது தெலுங்கானா, விதர்பா, ஜார்கண்டு, போடோ, லடாக்கிய, உத்தர்கண்ட் இயக்கங்களின் போராட்டங்கள்.

★ எந்த ஒரு மக்கள் பகுதியினர் தாங்கள் ஒரு தேசிய இனம் என்று அறிவித்தாலும் - அது பழங்குடி இனத்தின் ஒரு பகுதியேயானாலும், மதப்பிரிவானாலும், மொழிச் சிறுபான்மையினரானாலும் - அவற்றை தேசிய இனப் போராட்டமாக இனங்கண்டு அங்கீகரிப்பது.

★ வெற்றுத் தேசிய இனவாதப் பேச்சுக்களையே அல்லது முதலாளித்துவவாத தனிநபர்களின் தனிமனித தாக்குதல் சாகச நடவடிக்கைகளையே பெரிதுபடுத்தி முதிர்ந்த தேசிய இன இயக்கங்களாகக் காட்டுவது.

படிப்பகம்

www.padippakam.com

★ எந்த ஒரு தேசிய இன இயக்கமும் அது போர்க்குணமிக்க ஆயுதப் போராட்ட வடிவத்தை எடுத்துக் கொண்டதுமே, அதன் தாரதம்மியத்தை அளவிடாமல், உடனே அங்கிகரித்து உயர்த்திப் பிடிப்பது.

★ தேசிய இன இயக்கங்களின் இனவெறிக்குப் பலியாவது; வால்பிடிப்பது; அவற்றுக்கெதிரான கடுமையான அரசு அடக்குமுறையைக் காரணம் காட்டி அவற்றை நியாயப்படுத்தவும் முயல்வது.

★ தேசிய இனப்பிரச்சினை குறித்த மா-லெ வழிகாட்டும் கோட்பாடுகளை பகுதியளவோ அல்லது முழுமையாகவோ நிராகரிப்பது; அதற்கு இந்திய நிலைமைகள் பிரத்தியேகமாக இருப்பதால் மா-லெ கோட்பாடுகளை பிரயோகிக்க முடியாதென்று காரணங்கள் சொல்வது.

★ பல மா-லெ குழுக்கள் புதிய ஜனநாயகப் புரட்சியின் அங்கமாகவே தேசிய இனப் பிரச்சினையின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்திக் கூறினாலும், தெளிவான திட்டமில்லாமல் இருக்கின்றன. எந்த பிராந்தியத்தில் அதைப் பேசினால் அரசியல் ஆதாயம் பெற முடியுமெனக் கருதுகிறார்களோ அங்கு மட்டும் அழுத்தம் கொடுத்துப் பேசுகிறார்கள். ஈழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பது தமிழக மக்களின் கடமையாக மட்டுமே பார்ப்பது — அதுவே, அவர்களின் மத்திய பிரதேசம், ஆந்திர பிரதேசம், கர்நாடகம், மராட்டிய, கேரள மற்றும் பிற மாநில கட்சிப் பிரிவிற்கும் கடமையாக வரையறுப்பதில்லை.

அதே சமயம், பின்தங்கியுள்ள மக்களின் கருத்தை ஒட்டியே அநேக குழுக்கள் அரசியல் வேலை செய்கின்றன. ஆளும் வர்க்கங்களின் ''இந்திய தேசியம்'' பற்றி கேள்வி எழுப்புவதில்லை. இந்திய ஆளும் வர்க்கங்களின் 'இந்து — இந்தி — இந்துஸ்தான்' அணுகுமுறையை பல மா-லெ குழுக்கள் எதிர்ப்பதில்லை.

அப்படிப்பட்ட கோட்பாடு — நடைமுறை இரண்டிலுமான சந்தர்ப்பவாதக் குளறுபடிகள், பாரதூரமான சித்தாந்தப் போராட்டத்தின் அடிப்படையில் வந்தடைந்த ஒரு தெளிவான திட்டமில்லாயிருப்பது ஆகியவையும் மா-லெ குழுக்களிடையே ஐக்கியம் ஏற்படாமல் இருப்பதற்கான, புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுத்துச் செல்வதில் உள்ள தடைக் கற்களாகும். எத்தனையோ கருத்தரங்குகள் நடத்தலாம், கட்டுரைகள் படிக்கலாம் — அவை செய்திகளைச் சேகரிப்பதில் மட்டுமே உதவி புரியும்.

இச்சிறு கட்டுரை இவை பற்றிச் சில கேள்விகளை எழுப்புகிறது; கோட்பாடு, நடைமுறை இரண்டிலும் தட்டுப்படும் சந்திர்ப்பவாதப் போக்குகளைக் களைந்து கொள்ளவும் கோருகிறது.

## இந்து — இந்தி — இந்தியா

இந்தியாவில் ஒடுக்கப்படும் பல தேசிய இனங்கள் உள்ளன; ஆனால் ஒடுக்கும் தேசிய இனம் என்று ஒரு குறிப்பிட்ட இனம் எதுவும் இல்லை. இந்தி மொழி பேசுகின்ற மக்கள் அனைவரும் சேர்ந்து ஒரு தேசிய இனம் என்றும் அதுவே பிற தேசிய இனங்களை ஒடுக்குவதாகவும் ஒரு தவறான கருத்து கூட வழங்கி வருகிறது. உண்மையில், 70 பல்வேறு வட்டார பேச்சு மொழி வழக்குகள் கொண்ட, பல வேறான கலாச்சாரங்கள் கொண்ட, பல்வேறு பிராந்தியங்களில் பல்வேறு பொருளாதார நிலைமைகளில் வாழுகின்ற மக்களை எல்லாம் ஒன்று சேர்த்து இந்திய ஆளும் வர்க்கங்கள் 'இந்தி பேசும் மக்கள்' என்று அழைக்கின்றன. அது கூட உண்மையில், மேல்சாதிகள் மற்றும் பார்ப்பனர்கள் (பண்டிட்கள்) பேசுகின்ற சமஸ்கிருதமயமான ஒரு மொழிவழக்கே, இந்தி மொழியென்று மக்கள் மேல் சுமத்தப்பட்டுள்ளது. அம்மொழியின் பெயர் கூட இந்து — இந்தி — இந்துஸ்தான் என்ற கோட்பாட்டின் குறியீடாகவே தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்திய தேசிய இனப்பிரச்சினையை சாரிச இரசிய நிலைமையோடு ஒப்பிடக்கூடாது. அங்கே மாபெரும் இரசிய தேசியம் மற்ற சிறிய தேசிய இனங்களை ஒடுக்கியது; அல்லது இலங்கை நிலைமையோடும் ஒப்பிடக் கூடாது; அங்கே சிங்களப் பேரினம் ஈழத்தமிழனத்தை அடக்குகிறது; அல்லது புரட்



படிப்பகம்

www.padippakam.com

சிக்கு முந்தைய சீன நிலைமையோடு ஒப்பிடக் கூடாது. அங்கே மொத்த சீன மக்கள் தொகையில் 95 சதவீதத்தினர் ஹான் தேசிய இனம் மற்ற சிறிய தேசிய இனங்களை ஒடுக்கியது.

இந்தியாவிலோ — ஏகாதிபத்தியங்களும் அவர்களது அடிவருடிகளான தரகு அதிகார வர்க்க முதலாளித்துவமும், நிலப்பிரபுத்துவமும் கூட்டாக எல்லா தேசிய இனங்களையும் அடக்கி ஒடுக்குகின்றன; எந்த ஒரு குறிப்பிட்ட தேசிய இனமும் மற்றவைகளை ஒடுக்கிக் கொண்டிருக்கவில்லை; மேலே குறித்த நாடுகளில் ஒரு குறிப்பிட்ட தேசிய இனத்தின் ஆளும் வர்க்கங்களே மற்றவற்றை ஒடுக்கின; ஆனால், இந்தியாவிலோ ஆளும் வர்க்கங்கள் பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்தவையாக உள்ளன; வர்க்கம் — தேசிய இனம் இரண்டு விதத்திலும் தங்களது சொந்த தேசிய இனத்தையும் சரி, மற்ற தேசிய இனங்களையும் சரி ஒடுக்கிச் சுரண்டுகின்றன.

ஒடுக்கப்படும் தேசிய இனங்களிலேயே அரசியல் சாசனப்படியான சில முன் உரிமைகளையும், சலுகைகளையும் 'இந்தி பேசுகிற மக்கள்' பெறுகிறார்கள். ஆனால், அதனாலேயே இந்தி பேசாத மக்கள் மீது இந்தி பேசுகிற மக்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்று சொல்லி விட முடியாது. ஆளுகின்ற தரகு அதிகார வர்க்க முதலாளித்துவத்துக்குள்ளேயே, ''இந்தி பேசுகிற தேசிய இனங்களிலேயே'' ஏதாவதொன்றின் ஆதிக்கம் இருப்பதாகவும் சொல்ல முடியாது; அப்படியானால், ஆளும் வர்க்கங்கள் யார்? மேலாதிக்கம் பெற்று பல்வேறு தேசிய இனங்களை ஒடுக்குகின்றது யார்? சித்தாந்த, அரசியல் தலைமையிலும், (அதிகாரவர்க்க) அதிகாரக் கட்டமைப்பிலும் பார்ப்பனச் சாதி மேலாதிக்கம் செலுத்துகிறது. தரகுப் பெரும் முதலாளிகளிலேயே பனியாக்கள் மார்வாரிகள் (சாதிகளாக), பார்சிகள் அடித்தளமாய் அமைகிறார்கள்; அவர்களே கூட வேறு வேறு தேசிய இனங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்; மற்ற தேசிய இனங்களை ஒடுக்கித் தங்கள் சொந்த தேசிய இனத்தின் நலனுக்குச் சேவை செய்யும் பிரதிநிதியாகவும் அவர்கள் இல்லை.

''நாம் எல்லோரும் இந்தியர்கள்; பல மொழி, இனம், மதம் என்று வேற்றுமைகள் இருந்தாலும் ஒரே தேசத்தால் ஒன்றுபட்டவர்கள்'' என்ற ஆளும் வர்க்கப் பிரச்சாரத்தை மக்கள் ஏற்றுக் கொள்வதற்கான அடிப்படையை மேலே நாம் வைத்த வாதங்களே உருவாக்குகின்றன. ஆக, இந்திய ஆளும் வர்க்கங்கள் ஒற்றை இந்திய தேசம் பற்றிய தாங்கள் சித்தாந்த, கலாச்சாரக் கோட்பாட்டை மக்களிடம் பரப்பி திட்டமிட்டு தேசிய இன உணர்வுகளை மழுங்கடிக்க முயலுகின்றன. பார்ப்பனீய கலாச்சார, பாரம்பரியத்தை முன் தள்ளி பல்வேறு தேசிய இனங்களின் கலாச்சார அடையாளங்களை இருட்டிப்பு செய்து துடைத்து அழித்து விட எத்தனிக்கின்றன.

பார்ப்பனர்கள், அவர்கள் எந்த தேசிய இனத்தைச் சேர்ந்தவரானாலும் சமஸ்கிருதத்தை உயிர்ப்பித்துப் பரப்பவே முயலுகிறார்கள். காரணம், அவர்கள் சமஸ்கிருதத்தை மட்டுமே புனிதமான மதமொழியாக நம்புகிறார்கள்; அதை மட்டும் மற்ற தேசிய இன மொழிகளை விட உயர்ந்த பீடத்தில் வைக்கிறார்கள். ''ஒரு கலாச்சாரம், ஒரு நாகரிகம்'' என்ற ஆளும் வர்க்கங்களின் தற்போதைய முழக்கம் வெகு காலத்துக்கு முன்பே பார்ப்பனர்களால் உருவாக்கப்பட்டது. அவர்கள் தான் நயவஞ்சகமாக பிராந்திய மத நம்பிக்கைகள், மற்றும் கலாச்சாரங்களை பார்ப்பனீய சனாதன மதத்தோடு பிணைத்துக் கலந்ததன் மூலம் அடக்கி ஒடுக்கினார்கள்.

தரகு முதலாளிகள் பிரித்தானியர்களிடமிருந்து தாங்கள் பெற்ற பிளவுபடாத, சிதையாத, ஒற்றை இந்தியச் சந்தைச் சுயநலனைக் காப்பாற்ற ஒரு சித்தாந்த ஆயுதத்தைத் தேடிய போது பார்ப்பனீய இந்து தேசியம் வாகவமாக அவர்கள் கையில் கிடைத்தது. இந்த இரு சக்திகளின் நோக்கமும் நலனும் இந்து — இந்தி — இந்துஸ்தான் என்ற ஒரே ஆயுதமாக வடிக்கப்பட்டது. தேசிய இனங்களை மேலிருந்து அடக்குகின்ற ஆயுதமாக பார்ப்பனீயம் செயல்படும்போதே, சாதிய வடிவத்தில் செயல்பட்டு கீழிருந்து தேசிய இனங்கள் உருவாகி வளர்ச்சி பெறுவதையே சீர்குலைத்துத் தடுத்து விடுகிறது.

எனவே, 'ஒற்றைத் தேசக் கோட்பாட்'டின் சித்தாந்த அடிப்படையிலான 'இந்து — இந்தி — இந்துஸ்தான்' என்ற கோட்பாட்டை அம்ப



படிப்பகம்

www.padippakam.com

லப்படுத்தாமல், தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வழமையான — சலித்துப் போன — தேய்ந்து இற்றுப் போன தீர்வுகளை வைத்து மட்டுமே ஆளும் வர்க்கங்களின் நயவஞ்சக மான திட்டத்தை முறியடித்து விட முடியாது. பார்ப்பனீயம் — சாதி அடுக்குகள் என்ற வடிவத்தில் — தேச ஐக்கியத்துக்கும், வர்க்க ஐக்கியத்துக்குமே ஒரு தடைக்கல்லாகும்; எனவே பார்ப்பனீயச் சித்தாந்தம், கலாச்சா ரத்தை எதிர்த்து முறியடிக்காமல் தேசிய இனங் களின் விடுதலை, புதிய ஜனநாயகப்புரட்சி இரண்டையுமே நம்மால் சாதிக்க இயலாது. இதுவே இந்தியாவில் தேசிய இனப் பிரச்சினை குறித்த மிக முக்கியமான சிறப்பியல்பாகும்.

அவலம் என்னவெனில், பார்ப்பனீயம் என்ற சொல்லைக் குறிப்பிட்ட உடனேயே சில பேருக்குக் கூச்சம் எடுத்து விடுகிறது; நமது ஆய்வும், அணுகுமுறையும் அம்பேத்கரியம் என்றும் பெரியாரியம் என்றும் முத்திரை குத்தி விடுகிறார்கள். அதையே ஒரு குறிப்பிட்ட சாதியின் மீதான நியாயமற்ற தாக்குதல் என்றும் பார்க்கிறார்கள். மாறாக, அவர்கள் ஆர்.எஸ். எஸ். — யின் கண்டுபிடிப்பான 'இந்துத்துவம்' என்ற சொல்லைப் பயன்படுத்துவதோடு நின்று கொள்கிறார்கள். சரியாகச் சொன்னால், இது அவர்கள் விரித்த பொறியில் சிக்குவதாகும்; எனவே தான் தேசிய இன ஒடுக்குமுறை என்ற சந்தர்ப்பத்தில் அவர்கள் பார்ப்பனீயத்துக்கெதி ரான எந்த ஒரு பருண்மையான போராட்டங்க ளிலும் இறங்குவதேயில்லை; அல்லது 'இந்துத் துவ'த்துக்கெதிரான எந்த ஒரு போராட்டத்தை யும் கூட நடத்துவதில்லை. உண்மையில், இந்து மதம் என்றழைக்கப்படுவது பார்ப்பனீய சனாதன தருமமன்றி வேறில்லை. இது ஒற் றைத் தேசக் கோட்பாட்டுக்கு அடித்தளமாகும் — இதனையே நாம் எதிர்த்துப் போரிட்டுவருகி றோம்.

தேசிய இன அடையாளத்தின் குறியீடு மொழி என்பதால், ஆளும் வர்க்கங்கள் சமஸ்கி ருத மயமாக்கப்பட்ட இந்தியை, — தனது மைய அரசின் அதிகார பலத்தைக் காட்டி, திட்டமிட்ட முறையில், — ஒரே தேசிய மொழியாகத் திணித்து வருகின்றன; இந்தி பேசும் மக்கள் என்று அழைக்கப்படும் மக்கள் மீதும் சமஸ்கிருதமயமாக்கப்பட்ட இந்தியைத் திணித்து அவர்களின் சொந்த வட்டார மொழி வழக்குகளை அழிக்கின்றன.

ஆனால் இந்தி பேசும் பிராந்தியங்களில் உள்ள சில புரட்சிக் குழுக்கள் இந்தித் திணிப் புக்கு எதிராகப் போராடுவதில்லை; இந்தியை தேசிய மொழி என்று ஒப்புக்கொள்வது கூட தவிர்க்க முடியாதது என்றும் எண்ணுகிறார்கள். தேசிய இன ஒடுக்குமுறையில் ஒரு முக்கிய அம்சமான இந்தித் திணிப்பு என்பது அவர்க ளுக்கு ஒப்புதலும் கூட. ஆக, அவர்கள் ஆளும் வர்க்கங்களின் இந்திய தேசியத்துக்குப் பாட் டாளிவர்க்க நலன்களைப் பலியிடுகிறார்கள்.

## தேசிய இனப்பிரச்சினை குறித்த மா-லெ கோட்பாடுகளைத் தவறாகப் பிரயோகிப்பது பற்றி

மா-லெ ஆசான்கள் ஏற்கனவே தேசிய இனப் பிரச்சினை குறித்த கோட்பாடுகளை உருவாக்கி அதன் பல்வேறு அம்சங்களையும் வரையறுத்துள்ளார்கள். அவை — தேசிய இனப் பிரச்சினை குறித்த தேசிய முதலாளிக ளின் பங்கு, பாட்டாளி வர்க்கத்தின் பங்கு, ஏகாதிபத்தியத்தின் பங்கு பாத்திரம், தேசிய இன இயக்கங்களிலேயே முற்போக்குக்கும் பிற்போக்குக்கும் உள்ள வேறுபாடு.

எனவே, ஒவ்வொரு மார்க்சிய - லெனி னிய வாதிக்கும் தனது ஆய்வும், கோட்பாட்டு முடிவுகளும் அப்படிப்பட்ட ஆசான்களின் போதனைகளை அடிப்படையாகக் கொண் டவை என்று நிரூபிக்க வேண்டிய கடமை உள்ளது; அல்லாது போனால், மா-லெ ஆசான் களின் பழைய வழிகாட்டுதல்கள் காலாவதி யாகி விட்டனவா அல்லது பகுதியளவோ முழுமையாகவோ அவை திருத்தப்பட வேண் டியனவா என்பவற்றைத் தெளிவுபடுத்த வேண்டும். இதுதவிர, அவர்களின் புதிய கோட்பாட்டு முடிவுகள் பொது மா-லெ தத்து வத்தின் நெறிமுறைகளைத் தழுவியவையா, அவற்றை உறுதி செய்பவையா என்றும் நிரூ பிக்கக் கடமைப்பட்டவர்கள்.

ஆனால் அநேக மா-லெ குழுக்கள் மேலே சொன்ன கோட்பாட்டு நெறி முறைகளைப் பின்பற்றுவதில்லை; பதிலாக, மேலோட்ட மான, அராசக, வசதிக்கேற்ற முடிவுகளை எடுக்கிறார்கள் — ஒரு சில சொற்றொடர்க



படிப்பகம்

www.padippakam.com

ளைப் பயன்படுத்தி ஆலற்றை நியாயப்படுத்த முயற்சிக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, உத்தர் கண்ட் மக்களின் தனிமாநிலக்கோரிக்கை, தனி ஆட்சி கோரும் போடோ போராட்டம், லடாக் புத்தமதத்தினரின் போராட்டம், சீக்கியர்களின் காலிஸ்தான் போராட்டம் ஆகியவை சில மா-லெ குழுக்களால் தேசிய விடுதலைப் போராட்டமாகச் சித்தரிக்கப்படுகின்றன; அவை எதார்த்தத்தில் ஒரு தேசியமாகக் கூட அமையவில்லை. அவற்றில் சில தேசியச் சிறுபான்மையானவை; சில சிறுபான்மை மதத்தைச் சேர்ந்தவை. எடுத்துக் காட்டாக, சீக்கியர்கள் பஞ்சாபில் பெரும்பான்மை மதத்தவர் என்றாலும் இந்து, முசுலிம், சீக்கிய நம்பிக்கைகள் கொண்டவர்கள் அனைவரும் சேர்ந்தே ஒரு பஞ்சாபி தேசிய இனமாக அமைகிறார்கள். பஞ்சாபில், அகாலிகள் மாநில சுயாட்சி அல்லது மாநிலத்துக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று போராடுகிறார்கள் — திராவிடக் கட்சிகள் போல. ஆனால் சீக்கிய மத அடிப்படைவாதிகளோ காலிஸ்தான் என்ற தனி தேசியத்தைக் கோருகிறார்கள். ஆனால் இவ்விரு பிரிவுகளுமே சீக்கிய மக்களையே பிரதிநிதித்துவம் செய்கின்றன; அதில் கூட ஆளும்வர்க்கப் பிரிவை மட்டுமே பிரதிநிதித்துவம் செய்கின்றன — மொத்த பஞ்சாபி தேசிய இனத்தை அல்ல. இது காஷ்மீர் போன்றது அல்ல; அங்கே பாகிஸ்தான் ஆதரவு மத அடிப்படைவாதிகள், மற்றும் ஜே.கே. எல்.எஃப் (JKLF) என்று இரு சக்திகளும் உள்ளன. ஆனால் பஞ்சாபில் அகாலிகள், காலிஸ்தான் அல்லாத வேறெந்த உண்மையான (அசலான) தேசிய இயக்கமும் இல்லை.

பஞ்சாபில் காலிஸ்தான் பயங்கரவாதத்துக்கெதிராக அரசு பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது; அவர்களுக்குள்ளே மோதிக் கொள்கிறார்கள். முன்னது, பின்னதன் விளைவு தான் என்றாலும் அந்த ஒரே காரணத்துக்காக முன்னதை ஆதரிக்க முடியாது. அரசு பயங்கரவாதத்தை எதிர்க்கும் அதே வேளையில் சீக்கியத் தீவிரவாதத்தை ஆதரிக்க முடியாது. ஆனால். காலிஸ்தானியர்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சில மா-லெ குழுக்கள் ஆதரிக்கின்றன. காலிஸ்தானியரின் தீவிரவாதச் செயல்களையே ஒரு மாபெரும் பஞ்சாபி தேசிய எழுச்சியாகத் தூக்கிப் பிடிக்கிறார்கள். அதுவே அவர்களை நெருக்கிப் பிடித்து காலிஸ்தானியரை ஆதரிக்கின்றனரா என்று கேள்வி கேட்டால் அகாலி, காலிஸ்தான் அல்லாத மூன்றாவது நேர்மையான தேசிய இயக்கம் இருப்பதாகப் பரப்புகிறார்கள். பஞ்சாப் மீதான தேசிய இன ஒடுக்குமுறை இருக்கிறது; அதற்கெதிராக மக்கள் போராடுகிறார்கள்; எனவே அந்த இயக்கத்தை ஆதரிக்கிறோம் என்கிறார்கள். சாராம்சத்தில் இது அகாலிகளையோ அல்லது காலிஸ்தானியரையோ ஆதரிப்பதாகவே பொருள்படும்.

தேசிய இனப்போராட்டத்தை ஆதரிப்பது;
ஒரு தேசிய இனத்தில் குறிப்பிட்டதொரு பிரிவை ஆதரிப்பது;
— இந்த இரண்டுக்கும் உள்ள வேறுபாடு

தேசிய இனப்பிரச்சினை என்ற மேடையில் இயங்கும் எல்லா அமைப்புக்கள் மீதும் எப்படிப்பட்ட வகையில் அடக்குமுறை நடத்தப்பட்டாலும் அவற்றை எதிர்த்துப் போராடுவது பாட்டாளிகளின் கடமை. ஆனால் பாட்டாளி வர்க்கம் அதற்காக அவற்றின் எல்லா நடவடிக்கைகளையும் ஆதரிக்க வேண்டும் என்பது கிடையாது. அரசியல் களத்தில் பாசிசம் அரங்கேறத் தொடங்கிய பிறகு அப்படிப்பட்ட சில இயக்கங்கள் — தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் (எல்.டி.டி.இ.) - போன்றவை நிலை கொண்டு விட்டன. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கமே முன்னணியில் போராடுகிறது, ஆயுதப்போராட்டம் நடத்துகிறது, தமிழர்களைக் காப்பாற்ற தியாகம் செய்கிறது என்ற காரணங்களைக் கூறி பலர் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிக்கிறார்கள்; அது மட்டுமே களத்தில் நிற்கிறது என்பதை உண்மையில் மற்ற ஜனநாயக இயக்கங்களை பாசிச முறையில் துரத்தியோ அல்லது அழித்தோ விட்டது என்று தான் சொல்ல வேண்டும்.

''ஓரியக்கம் அது தொடர்ந்து இடைவிடாத ஆயுதப் போராட்டத்தில் இருக்கிறது என்பதால் அதை ஆதரிப்பதென்பது பரவசத்துக்குத் தலை கொடுப்பதாகும்.''

ஸ்டாலினை மேற்கோள் காட்டுவது எனில்:



படிப்பகம்

www.padippakam.com

''அப்படி என்றால், தொழிலாளி வர்க்கம் ஒவ்வொரு தேசிய விடுதலை இயக்கத்திற்கும், எந்த இடத்தில் நடந்தாலும் எல்லா சமயங்களி லும், ஒவ்வொரு குறிப்பிட்ட பருண்மையான இயக்கத்திற்கும் ஆதரவு கொடுக்க வேண்டும் என்று இதற்கு பொருள் இல்லை. மாறாக, ஏகாதிபத்தியத்தை எந்தெந்த தேசிய விடுதலை இயக்கம், பலவீனப்படுத்துகின்ற வகையிலும் அதை வீழ்த்தக் கூடிய வழியிலும் செல்கின் றதோ, அந்தந்த தேசிய விடுதலை இயக்கத் திற்கே ஆதரவு கொடுக்க வேண்டும்; எதெது ஏகாதிபத்தியத்தைப் பலப்படுத்தும் வழியி லும், பாதுகாக்கும் வழியிலும் நடக்கின்றதோ, அதற்கு ஆதரவு தரக் கூடாது என்று பொருளா கும். சில ஒடுக்கப்பட்ட தேசங்களின் தேசிய விடுதலை இயக்கங்கள், தொழிலாளி வர்க்க இயக்க வளர்ச்சியின் நலன்களுக்கு எதிராக மோதிக் கொள்ளும் காட்சிகளும் நிகழ்வ துண்டு. அப்படிப்பட்ட இயக்கங்களுக்கு ஆத ரவு கொடுப்பதா, வேண்டாமா என்ற கேள் விக்கே இடமில்லை; ஆதரவு கொடுக்க முடி யாது. தேசிய இனங்களின் உரிமைகள் பற்றிய பிரச்சினை, தனித்து இயங்கும், தன்னோடு நின்று கொள்ளும் பிரச்சினை அல்ல. அது தொழிலாளி வர்க்கப்புரட்சி என்கிற பொதுப் பிரச்சினையின் ஒரு பகுதியே. பகுதி என்பது பிரச்சினையின் முழுமைக்கும் கீழ்ப்பட்டுத் தானிருக்க வேண்டும். ஆகவே, பொதுப் பிரச்சி னையை அடிப்படையாகக் கொண்டே அதை கவனிக்க வேண்டும்''

(ஸ்டாலின், லெனினியத்தின் அடிப்படை அம்சங்கள், 6 — வது அத்தி. தேசிய இனப் பிரச்சினை)

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் பாட்டாளி வர்க்க இயக்கத்தை, மற்றும் தனிந பர்களைப் பாசிச முறையில் அழித்தொழிக்கி றது; அது என்றுமே ஏகாதிபத்தியத்தை எதிர்த் துக் குரல் கொடுப்பதில்லை; சரியாகச் சொல்வ தானால் இந்திய அரசை தனது நம்பகமான கூட்டாளியாக அறிவிக்கிறது. ஆனால் இந்திய அரசோ தெற்காசியப் பிராந்தியத்தில் மேல் நிலை வல்லரசுகளின் ஏவல் நாயாகச் செயல்ப டுகிறது; தெற்காசியப் பிராந்தியத்தில் விரி வாக்க ஆதிக்க நோக்கம் கொண்ட சக்தியாக இருக்கிறது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகரான திருவாளர் ஆண்டன் பாலசிங்கம் அண்மையில் 'அவுட்லூக்' என் னும் ஆங்கில ஏட்டிற்கு அளித்த பேட்டி இதற்குச் சான்று கூறும்.

**கேள்வி: இந்தியாவில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பணி, பங்கு என்ன?**

பதில்: த.ஈ.வி.பு. இயக்கத்தைப் பொறுத்த வரை, இந்தியாவை நட்பு மிக்க நேச சக்தியா கக் கருதுகிறோம். இப்போது கூட, இந்திய அரசின் மீதும் இந்திய மக்கள் மீதும் எங்களுக் குப் பகைமை இல்லை. இந்தியாவில் நடக் கும் எந்த ஒரு பிரிவினை வாத அரசியலுக்கும் நாங்கள் உதவ மாட்டோம். அதில் சம்பந்தப்ப டவும் மாட்டோம். இந்திய தேசியத்திற்கோ, அல்லது அதன் பிரதேச நலனுக்கோ ஊறு விளைவிக்கும் எந்தச் செயலையும் நாங்கள் செய்ய மாட்டோம். இங்கே எங்களது சுய நிர்ணயத்துக்கான போராட்டம் நியாயமானது; அது பிரதானமாக சகிக்க முடியாத அரசு அடக்குமுறையின் காரணமாக வருவது. ஆனால் இந்தியாவில் ஒரு வித பயபீதி உணர்வை த.ஈ.வி.பு. இயக்கம் எதற்காக எழுப்ப வேண்டும்?

எங்கள் போராட்டம் சரியாக புரிந்து கொள்ளப்படவில்லை. இதுவே த.ஈ.வி.பு. இயக்கத்திற்கும் இந்திய அரசுக்கும் இடையே பிரச்சினைகளை உருவாக்கிவிட்டது. முன்பு இந்திய அரசு தலையிட்டது கூட தமிழ் சுதந்திர இயக்கத்தின் கரத்தை வலுப்படுத்துவதற்காகத் தான். இது தவிர, இந்தியாவுக்குத் தனி அரசியல் நோக்கங்கள் உண்டு. முன்பு இந் தியா இந்தியப் பெருங்கடலில் அமெரிக்க ஏகாதிபத்திய ஆதிக்கத்தை வளர ஒட்டாமல் தடுக்க சோவியத்யூனியனோடு கூட்டுச் சேர விரும்பியிருக்க வேண்டும். ஆனால் இப்போ தைய புதிய உலகக் கட்டமைவில் பழைய சேர்க்கைகள் தறிக்கப்பட்டு விட்டன. இன் றைய சூழலில் எங்களது விடுதலைப் போராட் டம் தேவையில்லை என்பது இந்தியாவின் கருத்து. எனவே, இந்தியா எங்கள் மீது அதே அளவு பகைகை பாராட்டுவது விரும்பத் தக்கதுமில்லை. இந்திய மக்களின், அரசியல் கட்சிகளின், இந்திய அரசாங்கத்தின் ஆதரவு



படிப்பகம்

www.padippakam.com

எங்களுக்குத் தேவை. (அவுட்லுக் - நவ. 8, 1995 - பக். 26).

இந்திய அமைதிப் படையோடு த.ஈ.வி.பு.இ. போரிட்டதை ஒருவர் எடுத்துச் சொல்லலாம். ஆனால், அரசோடு நட்பு பாராட்டும் நோக்கத்தைத் தவறாகப் புரிந்து கொள்கிறது இந்தியா என்று தான் த.ஈ.வி.பு. இயக்கம் அறிவிக்கிறது. இதன் பொருள் என்ன? 'தெற்காசியப் பிராந்தியத்தில் இந்திய அரசாங்கம் மேலாதிக்க விழைவுகளை நிறுவுவதற்கு த.ஈ.வி.பு. இயக்கம் ஒத்துழைக்கவே எப்போதும் விரும்புகிறது' என்பதே பொருள். த.ஈ.வி.பு. இயக்கமும் அதன் பிரதிநிதிகளும் 'தமிழ் ஈழம்' என்றும் எப்போதும் இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவின் பிராந்திய அரசியல் நலனுக்கு ஆதரவாகவே இருக்கும் என்று மீண்டும் மீண்டும் உறுதி செய்து வருகிறார்கள்.

மற்றுமோர் எடுத்துக்காட்டு — திராவிட இயக்கத்தை முற்போக்கான தமிழ் தேசியத்தின் தேசிய இன விடுதலை இயக்கமாகச் சித்தரிப்பது. 'திராவிடம்' என்பது ஒரு தேசிய இனம் அல்ல; திராவிட தேசிய விடுதலை இயக்கம் ஏகாதிபத்திய எதிர்ப்புடையதும் அல்ல; அவர்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு விசுவாசிகளே;

பல்வேறு நாடுகளில் ஏகாதிபத்தியங்களும், ஆளும் வர்க்கங்களும் தங்கள் கேடு கெட்ட நோக்கங்களுக்காக பல அமைப்புகளை உண்டாக்கி - அசாமில் போடோ, திரிபுராவில் திரிபுரா உபஜாதிசமிதி, ஈழத்தில் ஈபிடிபி (FPDP), தென்னாப்பிரிக்காவில் இன்காதா — நெறிப்படுத்தி வழி காட்டுகின்றன. அவர்கள் எதை தேசிய இன நலன் என்கிறார்களோ, அது உண்மையான தேசிய இன நலன்களுக்கு எதிரானது; ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிவது. ஆர்.எஸ்.எஸ். பிஜேபி, அதன் ஸ்வதேசி ஜாக்ரன் மஞ்ச் ஆரிய பார்ப்பனீய மத வெறியர்கள் தேசியத்தை முன்நிறுத்துவதும், ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதும் சாராம் சத்தில், தேசத்துரோகமே; ஏகாதிபத்தியங்கள் உள்ளே நுழைந்து கொள்ளையடிக்க உதவும் ஏகாதிபத்தியச் சார்பே ஆகும்.

இது தவிர, போலி சன்னியாசி என்.டி.ஆரின் தெலுங்கு தேச கட்சியையே தெலுங்கு தேசிய இன இயக்கமாகச் சிலர் சித்தரிக்கிறார்கள்.

இதே போல் சதாம் ஹுசைன் கும்பலின் ஏகாதிபத்திய எதிர்ப்பும் வரம்புக்குட்பட்டது தான். அதன் பிராந்திய விரிவாக்கக் கொள்ளையை அமெரிக்க ஏகாதிபத்தியம் எதிர்க்கின்ற அளவில் மட்டுமே சதாமின் எதிர்ப்பும் இருக்கிறது. பாசிசக் கோமாளி இடி அமீனின் ஏகாதிபத்திய எதிர்ப்பும் சொந்த நாட்டு மக்களின் கவனம் முழுவதும் அவனது வக்கிர லீலைகளின் பக்கம் விழாமல் திசை திருப்புவதற்காகவே நடத்தப்பட்டது. ஒருவர் தேசிய விடுதலை என்ற பெயரில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கெதிராகக் குரல் எழுப்புவதால், சண்டையிடுவதால் மட்டுமே அவரை ஆதரிப்பது பாசிசத்தையும், பிராந்திய விரிவாக்க வெறியையும் கூட ஆதரிப்பதில் கொண்டு சென்று விடும். முசுலீம் அடிப்படைவாதிகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலையைக் கூட நாம் கவனமாகவே கையாள வேண்டும்.

எனவே, தேசிய விடுதலை என்று யார் பேசினாலும் அதைப் பகுத்தறியாமல், அவர்களின் சித்தாந்தத்தைக் கேள்விக்குட்படுத்தாமல் வெறுமனே உடனே அதை தேசிய விடுதலை இயக்கம் என்பது கேலிக்கிடமானது.

ஆக, பாட்டாளிவர்க்கம் தேசிய இனப்பிரச்சினை குறித்து பின்வரும் இரண்டு கொள்கைகளைக் கவனமாகப் பிரயோகிக்க வேண்டும்.

1. பல தேசிய விடுதலை இயக்கங்கள் சந்தேகத்துக்கிடமின்றி புரட்சிகரமாகவே உள்ளன. எனினும் ஒரு சில இயக்கங்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதுமில்லை, அவற்றைப் பலவீனப்படுத்துவதும் இல்லை. பாட்டாளி வர்க்க நலன்களுக்கு எதிரான முரண்பட்ட அத்தகைய இயக்கங்களை நாம் மறுதலிக்க வேண்டும்.

2. முற்போக்கான தேசிய விடுதலை இயக்கங்கள் — அவை பாட்டாளி வர்க்கத்தால் ஆதரிக்கப்பட்டாலோ, அல்லது தலைமை தாங்கப்பட்டாலோ அவற்றின் நோக்கங்கள், கொள்கைகள், திட்டங்கள் வேறுதான் தேசிய முதலாளிகளுடையவை வேறு தான்.



படிப்பகம்

www.padippakam.com

பாட்டாளி வர்க்கம், தேசிய முதலாளிகளின் எல்லா விருப்பங்கள், கோரிக்கைகளோடு ஒத்துப் போய்விட முடியாது. பிரிந்து போகும் உரிமையை உயர்த்திப் பிடிக்கும் போதே, ஒரு குறிப்பிட்ட தேசிய இனம் பிரிந்து போகின்ற பிரச்சினையை பாட்டாளிவர்க்கம் எதிர் மறையில்தான் அணுகுகிறது.

மேற்குறித்த இரு கொள்கைகளை நாம் கடைப்பிடிக்காவிட்டால் குறுகிய தேசிய வெறியில் விழுந்து விடுவோம்.

## 'தேசிய இனப் பிரச்சினை'யை முன்னிட்டு வளரும் போனபார்ட்டிசம், தனிநபர்வாதம், பிழைப்புவாதம், அரைப்பாசிசம் போன்ற போக்குகளும் அவற்றுக்கான அமைப்புகளும்

தேசிய இனங்கள் மீதான அடக்குமுறை காரணமாகப் பல்வேறு அமைப்புக்கள் இந்தியாவில் எழுந்தன; தேசிய இன அடையாளம், பெருமிதம் இரண்டையும் முன் வைத்து அவை அரசியல் செல்வாக்கை வளர்த்துக் கொண்டன. தமிழ்நாட்டில் மட்டுமே அத்தகைய 70 அமைப்புகள் உள்ளன; பெரும்பாலான அமைப்புக்கள் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தால் வழிநடத்தப்படுகின்றன. ஒன்றிரண்டைத் தவிர, மற்ற எந்த அமைப்புக்கும் வரையறுத்த கொள்கை கிடையாது, திட்டம் கிடையாது, திசை — இலக்கு கிடையாது. அந்த ஒன்றிரண்டுக்கும் தொடர்ச்சியான அக்கறையான நடைமுறை கிடையாது. அவற்றில் பெருவாரியானவை வெகு மக்கள் அடிப்படை இல்லாதவை. ஒற்றை நபரின் செல்வாக்கை வைத்து, அவரது செல்வாக்குக்காகவே நடத்தப்படுபவை; தாய் மொழியை நெஞ்சார நேசிக்கும் இளைஞர்கள், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மீது ஒரு வித மரியாதையை வளர்த்துக் கொண்ட இளைஞர்கள் இத்தகைய அமைப்புகளில் உறுப்பினர்களாகிறார்கள். தமிழ் ஈழ விடுதலைப் புலி இயக்கத்தின் மீதும் அவர்களின் வீரசாகசங்கள் மீதும் மரியாதை உணர்வை வளர்த்துக் கொண்ட இவர்கள் தங்களைத்தாங்களே வீரநாயகர்களாகக் கற்பனை செய்து கொண்டு சுயதிருப்தியை வளர்த்துக் கொள்கிறார்கள். ஆக, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் நாயக வழிபாட்டை உயர்த்திப் போற்றுவதும் பிரச்சாரம் செய்வதுமே அவர்களின் பிரதான 'நடைமுறை'யாகும். மேலும், காவேரி தகராறு அல்லது இந்தி திணிப்பு போன்ற பிரச்சினைகள் எழும் போது இவ்வமைப்புகள் ஒன்று சேருகின்றன; ஆர்ப்பாட்டம் நடத்துகின்றன; முடிந்த பிறகு மீண்டும் அவை தங்கள் ஓய்வு உறக்க நிலைக்குத் திரும்பி விடுகின்றன. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுதப் போராட்டத்தை வாயாரப் புகழுகின்ற இவர்கள் சொந்த தேசிய இன விடுதலைக்கு ஆயுதப் போராட்டப்பாதை வேண்டும் என்று பிரச்சாரம் கூடச் செய்வதில்லை.

இப்படிப்பட்ட வாய் வீச்சுக்களின் மூலம் கொஞ்சம் புகழைத் தேடிக் கொள்கிறார்கள். பிறகு அதையே மூலதனமாக வைத்து ஆளும் வர்க்கங்களோடு பேரம் பேசி சில வசதிகளையும், சலுகைகளையும் இரந்து பெறுகிறார்கள். இந்த போனபார்ட்டிச, பிழைப்புவாதிகளுக்கு தொலைநோக்கும் கிடையாது; அதைப் பற்றிய அக்கறையும் கிடையாது. தன்னெழுச்சியையும், தனிநபர்வாதத்தையும் மட்டுமே அவர்கள் சார்ந்திருக்கிறார்கள்.

இந்தக் குழுக்கள் அநேகமாக, மா-லெ குழுக்கள் உட்பட கம்யூனிஸ்டுகளைப் பழி தூற்றுகிறார்கள். தேசிய இனப்பிரச்சினையைச் சரியாகக் கையாளுவதில்லை என்பதே அந்தப் பழி. குறிப்பாக தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் புகழ் பெறத் தொடங்கியபிறகு, 'வர்க்கப் போராட்டம்' என்ற சொல்லை உச்சரிப்பதையே இழிவாகக் கருதிப் பார்க்கிறார்கள். தேசிய இனப்பிரச்சினை பற்றிய அக்கறை எடுத்துக் கொண்ட திராவிட இயக்கங்களே உண்மையான சக்திகள் என்று பாராட்டும் அவர்கள் காஷ்மீரிலும் வடகிழக்கிலும் நடந்து வரும் தேசிய விடுதலை இயக்கங்கள் மீது அரசு பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்படுவது பற்றி வாயே திறப்பதில்லை; அது பற்றி வெட்கப்படுவதுமில்லை. தமிழ் தேசிய பெருமிதம் பற்றியும், மொழி மேலாண்மை பற்றியும் அவர்கள் கம்பீரமாகத் தம்பட்டம் அடிப்பதன் பின்னால் தமிழ் தேசிய வெறி என்ற அபாயம் பதுங்கி உள்ளது. இத்தகைய சில சக்திகள் தாம் விடுதலைப் புலிகள் போலவும் அதன் பாசிச முறைகளைத் தாமும் செய்யும் கனவுகளை வளர்த்து வருகிறார்கள். இத்த



படிப்பகம்

www.padippakam.com

கைய குழுக்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பில் எந்த அக்கறையும் இல்லாதவை; அப்படி ஒரு எதிரி இருப்பதையே அங்கிகரிக்காதவை; தற்போது பாட்டாளிவர்க்க இயக்கத்தோடு மோதுகின்ற அளவு அவர்கள் இல்லையென்றாலும் அவர்கள் வளர்ச்சி பெற்றால் அவ்வாறு செய்யத் தயங்க மாட்டாரகள். மா-லெ இயக்கம் பல்வேறு பிரச்சினைகளில் அத்தகையவர்களின் பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டுக்கெதிரான நிலைப்பாடுகளை விழிப்போடிருந்து கவனித்து அம்பலப்படுத்த வேண்டும்; இதன் மூலம் மட்டுமே எதிர்காலத்தில் வரப்போகும் அவர்களது தாக்குதலைச் சந்திக்கத் தயாராக முடியும்.

அத்தகைய குழுக்களின் அணிகளை வென்றெடுப்பதற்காகவே தேசிய இனப் பிரச்சினையைக் கையில் எடுக்கின்ற ஒரு தவறான போக்கு மா-லெ இயக்கத்தில் உள்ளது. இந்த அணுகுமுறையைக் மேற்கொள்கின்ற குழுக்கள் அந்த அணிகளைப் பகைத்துக் கொண்டு விடுவோமோ என்ற அச்சத்தில் அவர்களைப் பற்றிய விமரிசனத்தைக்கூட வெளிப்படையாகச் சொல்வதில்லை; இதனால் அவர்களின் பின்னால் வால் பிடித்துச் செல்கின்றன; புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் கடமையின் ஓர் அங்கமாகவே தேசிய இனப்பிரச்சினையை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும், நமது சொந்த நடைமுறையில் முழு முன்முயற்சியைக் கட்டவிழ்த்து விட்டு அதன் கூடவே அத்தகைய அமைப்புக்கள் மீது விமரிசனங்களையும் வைக்க வேண்டும்.

அத்தகைய அமைப்புக்களிலிருந்து அணிகளை வென்றெடுப்பதற்கான நடைமுறைத் தந்திரமாக தேசிய இனப் பிரச்சினையைப் பயன்படுத்துவது கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதமாகும்; இது முறியடிக்கப்பட வேண்டும்.

### தேசிய இனப்பிரச்சனைக்கு நாம் பிரதான முக்கியத்துவம் கொடுக்கலாமா?

''ஆம்! அவசியம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்'' என்று சில தேசிய இன அமைப்புக்கள் பதிலளிக்கின்றன. அவை தங்களை மா-லெ அமைப்புக்கள் என்றும் சொல்லிக் கொள்கின்றன. பாட்டாளி வர்க்கம் இதை மறுதலிக்கிறது. பாட்டாளிவர்க்கம் தலைமை தாங்கும் புதிய ஜனநாயகப் புரட்சியின் ஒரு அங்கமாக, முழுமையின் ஒரு பகுதியாக மட்டுமே தேசிய இன பிரச்சினையை நாம் கருத முடியும். அதற்குரிய முக்கியத்துவத்தை நாம் கட்டாயம் தருவோம்; ஆனால் அந்நிய ஆக்கிரமிப்பு, காலனிய நிலைமை தவிர எத்தகைய சூழ்நிலையிலும் அதுமட்டுமே பிரதானப் பணியாக விட முடியாது. நமது பிரதானப்பணிக்குக் கீழ்ப்படிந்து தான் அப்பணி இருக்க முடியும்.

புதிய ஜனநாயகப் புரட்சியிலேயே சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்துக்குப் பிரதான முக்கியத்துவம் கொடுத்து ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் போராட வேண்டும் என்று சிலர் வாதிடுகிறார்கள்; இல்லையென்றால், முதலாளிகளும் குட்டி முதலாளிகளும் மதச்சார்பற்ற புரட்சிகர மக்கள் ஜனநாயகத்துக்கெதிராக தேசிய இன ஒடுக்குமுறையை நிறுத்தி மக்களிடையே பிளவை ஏற்படுத்தி விடுவார்கள் என்கின்றனர். தேசிய இனப் பிரச்சினையில் 'பாராமுகமாக' இருக்கிறார்கள் என்று கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகச் செய்யப்படும் விமரிசனத்தை எதிர்கொள்ளாமல் குற்ற உணர்வுக்கு ஆட்படுவதிலிருந்தே இந்த வாதங்கள் எழுகின்றன. சொல்லிக் கொள்ளும் தேசிய அமைப்புக்களின் வாய் வீச்சுகளும் இத்தகைய வாதங்களைத் தூண்டி விடுகின்றன.

தேசிய இனங்களுக்கிடையே எழும் வேறுபாடுகள், முரண்பட்ட நலன்கள் கூர்மைப்பட, கூர்மைப்பட சுய நிர்ணய உரிமைக்கான போராட்டமே முதன்மையானதென்று சொல்லுகிறவர்கள் தங்கள் தேசிய இனத்தோடு நின்று கொண்டு குறுகிய தேசிய வெறிக்கு வெகு சீக்கிரம் பலியாவார்.

### மேலும் சில தவறான போக்குகள்

★ தேசிய இனப்பிரச்சினையைக் கையாளுவதில் உள்ள ஒரு முக்கியத்தவறு தேசிய இன விடுதலைக்கு என தனி அமைப்பு கட்டுவதாகும். கர்நாடகத்தின் கே.வி.ஆர். ஓர் உதாரணமாகும். ஆனால் சாராம்சத்தில் முதலாளிகளின் கோரிக்கைகளுக்கு என தனிப்பட்ட அமைப்பு கட்டி இயக்கும் போது பாட்டாளிவர்க்கம் முதலாளிின் தனிமுழு கோரிக்கைகளுக்காக மட்டுமே போராட நேர்ந்து விடும்.

★ மற்றொரு தவறான போக்கு - 'சுதந்திரத் தமிழ் நாட்டை அமைப்போம்!', 'சுதந்திர கருநாடகத்தை அமைப்போம்!' போன்ற முழக்கங்களை முன்வைப்பது. இவ்வாறான முழக்கங்களை வைத்



படிப்பகம்

www.padippakam.com

தால் ஒடுக்கப்படும் தேசிய இனங்களை புரட்சிக்கு வென்றெடுத்து விட முடியும் என்று சிலர் நம்புகிறார்கள்.

இந்த அணுகு முறை இரு தவறுகளைச் செய்கிறது. முதலாவதாக, ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் ஒற்றுமைக்குப் பதிலாக பிரிவினைக்கு முதல் முக்கியத்துவம் அளிக்கிறது; இரண்டாவதாக, 'சுதந்திரத் தமிழ்நாடு' என்ற முழக்கம் பிரிவினையைச் சுட்டிக் காட்டுகிறது. சுதந்திரமான தமிழ் தேசிய அரசை உருவாக்குவதை முன் வைக்கிறது. இவ்வாறாக அது பாட்டாளி வர்க்க சர்வதேச ஐக்கியத்தை உயர்த்திப் பிடிப்பதை விட முதலாளிகளின் நோக்கத்தை தூக்கிப் பிடிக்கிறது. அத்தகைய முழக்கங்களின் நோக்கமே - தேசிய இன ஒடுக்குமுறைக்கெதிரான வெற்றி வீரனாகத் தன்னை முன்தள்ளிக் காட்டுவதுதான். இதன் மூலம் ஒருபகுதி மக்களை வென்றெடுத்துக் கொள்வதுதான். இவ்வித அணுகுமுறை பகுதியின் நலன்களுக்கு முழுமையின் நலனை அடகு வைப்பதாகும். இது பொருளாதார வாத கண்ணோட்டமே தவிர வேறல்ல.

★ மூன்றாவது தவறான போக்கு, அகில இந்திய பாட்டாளி வர்க்க கட்சி என்ற கோட்பாட்டையே எதிர்க்கிறது; தேசிய இன ரீதியாக கட்சிகட்டி பிரிவினைக்குப் போராடச் சொல்லி பாட்டாளிகளுக்கு அறைகூவல் விடுக்கிறது. இதனை விரும்பும் தேசிய இனங்கள் வெற்றிகரமான பிரிவினைக்குப் பிறகே ஐக்கிய அமைப்பைக் கட்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள். இந்தியாவில் ஒடுக்குகின்ற ஒரு குறிப்பிட்ட தேசிய இனம் இல்லாத சிறப்பியல்பைக் காரணம் காட்டி அந்த அடிப்படையிலேயே தாங்கள் அப்படிப்பட்ட முடிவுகளுக்குச் சென்றதாக இப்போக்கின் பிரதிநிதிகள் பேசுகிறார்கள்.

அதே தனிச்சிறப்பியல்பு, பிரிவினைக்கு முழுமுற்றிலும் எதிரான சில சாதகமான கூறுகளைத் தோற்றுவித்திருப்பதை அவர்கள் காணத் தவறுகிறார்கள். பாட்டாளி வர்க்க கண்ணோட்டத்திலிருந்து இது கூடுதல் சாதகமானது. மேலே சொன்ன கூறுகளைத் கணக்கில் எடுக்காமல் பிரிவினை ஒன்றையே தீர்வாக முன்வைப்பது குறுகிய முதலாளித்துவ தேசியவாதத்தை திணிக்கும் முயற்சி அன்றி வேறல்ல.

★ நான்காவது போக்கு அகில இந்தியக் கட்சித் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சி என்ற பெயரில் பின்வரும் கோட்பாட்டை முன்நிறுத்துகிறது.

''புரட்சிக்குப் பிறகு ஒவ்வொரு தேசிய இனமும் தனது சொந்தக் குடியரசை நிறுவும். பிறகு சுயேச்சையான ஒருங்கிணைப்பின் மூலம் ஐக்கியக் குடியரசு கட்டப்பட்டு குடியரசுகளின் ஐக்கியம் நிறுவப்படும்''

மேலே உள்ளது தேசிய முதலாளிகளின் நோக்கம், கொள்கை, திட்டமே. ஆனால் பாட்டாளிகளோ ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தையே ஆதரிக்கின்றனர்; அதாவது - பிரிந்து போகின்ற அரசியல் உரிமைக்காக நிற்கின்றனர். பிரிந்து போகின்ற உரிமை வேறு; பிரிந்து போவது வேறு; இரண்டும் ஒன்றல்ல. பிரிந்து போகின்ற உரிமையை நாமும் அங்கீகரிக்கிறோம். ஆனால் ஒரு குறிப்பிட்ட தேசிய இனம் பிரிந்து போகின்ற பிரச்சினையில் உடனடியாக ஆம் அல்லது இல்லை என்ற பதிலைச் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட ஓர் 'உடனடியான' முடிவு அபத்தமானதாகவும், சித்தாந்த ரீதியாக இயக்க மறுப்பியலாகவுமே இருக்கும். நடைமுறையில் அது பாட்டாளி வர்க்க நலனை முதலாளித்துவ நலனுக்குக் கீழ்ப்படியவைப்பதாகும். பழைய முறையிலான முதலாளித்துவப் புரட்சிகளிலும் கூட, ஒரு தேசிய இனம் மற்றொன்றை விட்டுப் பிரிந்து போவதில் முடியுமா, இல்லையா என்பதைக் கணிக்க முடியாது என்றார் லெனின்.

லெனினது வரையறைப்படி, ஒவ்வொரு புரட்சியின் பருண்மையான நிலைமையை வைத்தே 'ஆம்' அல்லது 'இல்லை' என்பது தீர்மானிக்கப்படும். ஆனால், அவரே சொல்வது போல, தேசிய அரசுகள் உருவாக்கும் உரிமையை அங்கீகரிக்கிறோம்; சம அந்தஸ்தும், உரிமையும் அவற்றுக்கு வழங்கப்பட வேண்டும் என்கிறோம்; ஆனால் நமது தரப்பிலிருந்து எல்லா தேசிய இனங்களின் ஐக்கியத்துக்கே நாம் முதன்மை முக்கியத்துவம் அளிக்கிறோம்.

எனவே, தேசிய இனப்பிரச்சினை புதிய ஜனநாயகப் புரட்சியின் அங்கம். வேறு தனியான குடியரசுகளை அமைக்கும் இணைத்திட்டத்தை ஏற்பதும், பிறகு அவற்றின் சுயேச்சையான ஐக்கியத்துக்கு முயல்வதும் - எளிமையாகச் சொல்வதானால் பச்சையான முதலாளித்துவத் தேசியமேயாகும். ●



படிப்பகம்

www.padippakam.com

# செங்கொடிக் குழுவின் விமரிசனமும், நமது மறுப்பும்

"மேல் நிலை வல்லரசுகளின் மேலாதிக்கமும் பாட்டாளி வர்க்கப் புரட்சியும்" என்ற நமது கட்டுரை குறித்து செங்கொடிக் குழுவின் ஆங்கில ஏடான "ரெட் ஸ்டார்" -இன் பிப்ரவரி 1994 இதழ் விமரிசித்துள்ளது. கீழே அதன் விமரிசனமும் முழுமையாக தரப்பட்டு பதிலளிக்கப்படுகிறது.

'மூன்றுலகக் கோட்பாட்டி'லிருந்து
'இரண்டு முகாம்கள் கோட்பாட்'டிற்கு

மாவோவின் மரணத்திற்கு ஓராண்டுக்குப் பின், டெங் திரிபுவாதத்தின் முன்னணியாளரான ஹுவா குவா பெங்கினால் மூன்றுலகக் கோட்பாடு முதன் முதலாக முன் வைக்கப்பட்டது. இதற்கு முன்னர் 1974-ல், ஐக்கிய நாடுகள் அவைக்கான பிரதிநிதிக் குழுவுக்குத் தலைமை ஏற்றுச் சென்ற டெங் ஷியாபிங், உலகம் மூன்று பிரிவுகளாக பிரிந்துள்ளதைப் பற்றி முன் வைத்ததோடு, உலக நிகழ்வுகளில் மூன்றாம் உலகம் ஆற்ற வேண்டிய முக்கியப் பாத்திரம் பற்றியும் முன்வைத்தனர். இந்தக் கேடுகெட்ட கோட்பாட்டை அதனது கரு வடிவில் முன்வைப்பதற்கான முதல் முயற்சி என்று வேண்டுமானால் நாம் இதைக் குறிப்பிடலாம். ஆனால், சீனாவுக்குத் திரும்பியபின், அவர், இந்த உரைக்காக விமரிசிக்கப்பட்டார். மாவோ இறக்கும் வரையில் இதைப் பற்றிய பேச்சு எதுவுமில்லை. 'மாபெரும் விவாத'த்தின் போது லெனினிய போதனைகளை அடியொற்றி "சமாதான சகவாழ்வு; எதிரெதிரான இரு கொள்கைகள்" என்பதை மாவோ முன்வைத்தார். உலகப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுவழி, ஒரு சோசலிச நாடு பின்பற்றும் வெளிநாட்டுக் கொள்கை ஆகியவற்றுக்கு இடையிலான அடிப்படையான வேறுபாடுகளையும் இடையுறவையும் மாவோ அதில் விளக்கினார். இவை இரண்டையும் குருச்சேவ் குழப்பினார்; சோசலிச நாடு கடைபிடிக்கும் வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படையான "சமாதான சகவாழ்வை"யே உலகப் பொதுவுடைமை இயக்கத்தின் பொது வழியாக குருச்சேவ் சித்தரித்துக் காட்டினார். இதற்காக மாவோ, குருச்சேவைத் தாக்கினார்.

"உலகப் பொதுவுடைமை இயக்கத்தின் பொது வழிக்கான முன் மொழிவு" என்ற அடிப்படை ஆவணத்தை மாவோ 1963-ல் முன் வைத்தார். அது இந்த முக்கியப் பிரச்சினையின் பாலான அடிப்படை அணுகுமுறையைக் கொண்டிருந்தது. மாவோவைப் பொருத்தவரை, இப்பிரச்சினையிலான, அவரது அணுகுமுறையில் தெளிவின்மை என்பதே இல்லை. ஹுவாகுவா பெங் மற்றும் டெங் ஷியாபிங் ஆகட்டும், அல்லது அவரது சீன மற்றும் மற்ற நாடுகளிலுள்ள கூட்டத்தாராகட்டும் இந்த கேடுகெட்ட வர்க்க சமரச மூன்றுலகக் கோட்பாடு மாவோவினுடையது என்பதை நிரூபிக்க ஒரு, ஆம் ஒரே ஒரு மேற்கோளைக் கூட, அவரது படைப்புகளிலிருந்து எடுத்துக் காட்ட இயலவில்லை. அப்படி இருந்த போதிலும் டெங்கும் அவரது கூட்டத்தாரும் அதை மாவோவினுடையது என்று முன்வைத்தனர். சீனாவில் முதலாளியத்தை மீண்டும் நிலைநாட்டுவதில் அவர்கள் முன்னேறிய போது, இந்தக் 'கோட்பாட்டை'ப் பயன்படுத்தி ஏகாதிபத்தியவாதிகளுடனான கள்ளக் கூட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்தனர். இதை ஏற்றுக் கொண்டு இது மாவோவினுடையது என்று முன்வைத்த புரட்சியாளர்கள், பல்வேறு அளவுகளிலான வர்க்க சமரச நிலைப்பாடுகளில் வீழ்ந்தனர்.

டெங் கும்பலால் மாவோவினுடைய கோட்பாடு என்று முன்வைக்கப்பட்டதைக் காட்டி, மாவோவையும் அவரது அழிவற்ற பங்களிப்புகளையும், உலக மட்டத்தில் சோவியத் சமூகவாதிகள் மற்றும் குருச்சேவியர்கள் ஒருபுறமும் ஹோக்சயிட்டுகள் இன்னொரு புறமும் தாக்கினர். 1982 வாக்கில், டெங், கட்சி மற்றும் அரசு அதிகாரத்துவத்தில் தனது மேலாண்மையை நிறுவி விட்டார்; ஹுவா போன்ற மையவாத



படிப்பகம்

www.padippakam.com

முன்னணியாளர்களை ஓரங்கட்டிவிட்டார். இதன்பின்னர், மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி உள்ளிட்ட சோசலிச சாதனைகள் அனைத்தையும் தாக்கி, இரு மேல்நிலை வல்லரசுகளுடனான கள்ளக் கூட்டுக்கு முன்னேறினார். அப்போது, காலத்துக்கு ஒவ்வாதது என்று கூறி மூன்றுலகக் கோட்பாட்டையும் உதறித் தள்ளினார்.

சோசலிசப் பாதையாளர்களை 'நால்வர் கும்பல்' என்ற கண்டனம் செய்த, கலாச்சாரப் புரட்சியின் போது 'மித மிஞ்சியவை' என்ற விமர்சித்த, சீனக் கட்சியின் 11வது பேராய அறிக்கையை உயர்த்திப் பிடித்த, மூன்றுலகக் கோட்பாட்டைத் தழுவிய, பொதுவாக டெங்கிய வழியை ஏற்ற, அதுவரை புரட்சிகரக் குழுக்களாக இருந்தவற்றை, இம்மாற்றங்கள் குழப்பத்தில் ஆழ்த்தின. இ.பொ.க. (மா-லெ) லிபரேஷன் போன்ற குழுக்கள் முழுக்கவும் டெங்கிய நிலைப்பாடுகளை ஏற்கும் நிலைக்கு இழிந்தன; பல குழுக்கள் மையவாத நிலையை மேற்கொண்டன. தாம் இதுவரை பின்பற்றிய டெங்கிய நிலைப்பாடுகளை நியாயப்படுத்திய அவர்கள், இப்போது, மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியை டெங் பகிரங்கமாக தாக்கியதையும், முதலாளிய பாதையை நோக்கிய விரைவான மாறுதல்கள் உள்ளிட்ட ஏகாதிபத்தியவாதிகளுடனான பகிரங்க கூட்டையும் தாக்கத் தொடங்கினர். ஆனால், சீனாவில் முதலாளியம் மீண்டும் நிலைநாட்டப்பட்டதை ஏற்றுக் கொண்ட மையவாதிகள், தாம் ஏற்றுக் கொண்ட மூன்றுலகக் கோட்பாடு மாவோவினுடையது என்றே தொடர்ந்து கூறினர். இதன் விளைவாக ஐக்கிய முன்னணி குறித்துப் புரட்சிகர அணுகுமுறையை மேற்கொள்வதிலிருந்து விலகிப் போய், வர்க்க சமரசம் மற்றும் வர்க்க உள்ளடக்கமற்ற அல்லது வர்க்க உள்ளடக்கத்துக்கு அப்பாற்பட்டுப் பல பிரச்சினைகளிலும் நிலைப்பாடுகள் மேற்கொண்டனர்.

சமூக ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசான சோவியத் யூனியன் சிதறிப் போனதானது அவர்களை மேலும் குழப்பத்தில் தள்ளியது. முதல் உலகின் அங்கமான இரு மேல்நிலை வல்லரசுகளில் ஒரு மேல்நிலை வல்லரசு மறைந்த பின்னர் மூன்றுலகக் கோட்பாட்டை எவ்வாறு விளக்குவது. உலகில் ஒரு மேல்நிலை வல்லரசு, அதாவது அமெரிக்கா மட்டும் உள்ளதா? அல்லது இரசியா இன்னும் மேல் நிலை வல்லரசா? அல்லது மேலும் சில மேல்நிலை வல்லரசுகள் தோன்றினவா? அல்லது மூன்றுலகக் கோட்பாடு இப்போதும் பொருந்தக் கூடியதா?

இத்தகைய குழப்பத்தை எதிர்கொண்ட ஓரிரண்டு குழுக்கள் இப்போது பொருத்தமற்றது எனக் கூறி மூன்றுலகக் கோட்பாட்டை கைவிட்டன. குறைந்த பட்சம் ஒரு குழு ஈருலகக் கோட்பாடாக சுருக்கி விட்டது; அமெரிக்கா மற்றும் ஏகாதிபத்திய நாடுகளை ஒரு உலகமாகவும் மற்றவை அனைத்தையும் மற்றொரு உலகமாகவும் இது வரையறுத்தது. ஆனால் ஒரு குழு இரசியா இன்னமும் மேல்நிலை வல்லரசுதான் என்று கூறி, மூன்றுலகக் கோட்பாட்டில் மாறுதல் ஏதும் தேவையில்லை, அது இன்னமும் செல்லுபடியாகக் கூடியதே என்று கூறிவிட்டது. இவை அனைத்துக்கும் ஒரு விஷயம் பொதுவாக உள்ளது. இவை மூன்றாம் உலக நாடுகளை அதாவது, மூன்றாம் உலக அரசுகளை உலகப் புரட்சியின் கூர்முனையாக கருதுகின்றன. மூன்றாவது உலக நாடுகள் நவீன காலனியத் தரகு அரசுகள் என்ற உண்மையைக் காண இவை மறுக்கின்றன. இவ்வாறு மூன்றுலகக் கோட்பாட்டில் தொடர்ந்து ஊன்றி நிற்பவை அனைத்தும் தமது வர்க்கசமரச வழியில் ஊன்றி நிற்கின்றன; நடைமுறையில் பாட்டாளி வர்க்க வழியைக் கைவிடுகின்றன.

இத்தகையவற்றுள் ஒன்றுதான் மா.அ.க., இ.பொ.க. (மா.லெ); இது தமிழகத்தில் மட்டுமுள்ள சிறு குழு; வர்க்க சமரச நிலைப்பாடுகளில் ஊன்றி நிற்பது; அது "மேல்நிலை வல்லரசுகளின் மேலாதிக்கமும் பாட்டாளி வர்க்கப் புரட்சியும்" என்ற நூலை வெளியிட்டுள்ளது; அதில் சில விசித்திரமான கோட்பாடுகளை முன் வைத்து உள்ளது; இதுவரை மூன்றுலகக் கோட்பாட்டைக் கடைபிடித்ததை நியாயப்படுத்துவதுடன் அதை இரு முகாம்கள் கோட்பாடாக மாற்றி உள்ளது. முட்டாள்தனமானதும் கற்பனைப் புனைவானதுமான இந்த நிலைப்பாட்டை அம்பலப்படுத்த நாங்கள் தீர்மானித்து உள்ளோம். ஏனெனில் புரட்சிகரக் குழுக்கள் பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டை ஒருக்கால் கைவிட்



படிப்பகம்

www.padippakam.com

டால், அவை எந்த அளவுக்கு சீரழிய முடியும் என்பதை இந்நிலைப்பாடுகள் காட்டுகின்றன.

இரு முகாம்கள் கோட்பாடு

மூன்றுலகக் கோட்பாடு மாவோவால் முன் வைக்கப்பட்டது என மீண்டும் கூறுவதுடன் இந் நூல் தொடங்குகிறது. மூன்றுலகக் கோட்பாட்டை விளக்கும் போக்கில் லெனினுடைய பல மேற்கோள்களை - இவை சந்தர்ப்ப பொருத்தமற்றவையே - இது அளிக்கிறது. ஆனால் இது மாவோவின் கோட்பாடு என்று மீண்டும் மீண்டும் கூறுகிறதே ஒழிய, அது அவருடையது என மெய்ப்பிக்க அவரது படைப்புகளிலிருந்து ஒரு மேற்கோளைக் கூட தரவில்லை. அது மாவோவினுடைய அவ்வளவு முக்கியக் கோட்பாடாக இருந்தால், மாவோ வாழ்ந்த காலத்தில் ஏன் முன் வைக்கப்படவில்லை; ஆனால் அவருடைய மறைவுக்குப் பின் ஏன் முன் வைக்கப்படுகிறது என்பதற்கும் இது பதில் கூறவில்லை.

''ஏகாதிபத்தியத்தின் ஆரம்ப காலங்களில் லெனின் முன் வைத்தக் கருத்தோட்டங்களையும் கோட்பாடுகளையும் கிளிப்பிள்ளை போல் திரும்பத் திரும்பச் சொல்வதற்காக'' அது போலி புரட்சியாளர்களை ஏளனம் செய்கிறது. அதைப் பொறுத்த வரையில் ஸ்டாலின் முன்வைத்த கருத்தோட்டங்களும் கூட இன்றைக்குப் பொருந்தாது. எனவே, இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிந்திய காலத்தை ஆய்வு செய்து மாவோ தமது மூன்றுலகக் கோட்பாட்டை முன்வைத்தாராம்! 1977-ல் ஹுவா அதை வெளியிடும் வரையில் சீ.பொ.க. இதை இரகசியமாக வைத்திருந்ததாம்!

ஆனால் மேலும் சுவையான விசயங்கள் தொடர்கின்றன. இப்போது உலகம் மீண்டும் மாறுதல் அடைந்து உள்ளது. ''அமெரிக்காவும் இரசியாவும் இராணுவ ரீதியில் மேல்நிலை வல்லரசுகளாக நீடிக்கும் அதே வேளையில், அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பியப் பொருளாதார சமூகம் ஆகியவற்றைப் பொருளாதார மேல் நிலை வல்லரசுகளெனக் குறிப்பிடலாம்.... இம் மேல்நிலை வல்லரசுகள் உலக மக்களின் பொது எதிரிகள்; மிகமிகப் பெரிய சுரண்டல், ஒடுக்கு முறை மற்றும் ஆக்கிரமிப்பு சக்திகள்; இவை ஏகாதிபத்திய உலகில் தனியொரு முகாமாக அமைந்து உள்ளன.'' இதுவே புதிய முதலாவது முகாம். ''ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த பின்தங்கிய நாடுகள் இரண்டாவது முகாமாக அமைகின்றன; இவை மேல் நிலை வல்லரசுகளின் மிகமிக மோசமான கொடிய சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் உட்படுத்தப்படுகின்றன.''

இரண்டாவது உலகம் முன்பு சுதந்திரமடைந்து ஏகாதிபத்தியத்தை எதிர்க்க முயன்று தோற்றுப் போயிற்று. மீண்டும் காலனிகளாக்கப் படுகின்றன. எனவே மறு - காலனியாக்கப்படுவது நடக்கிறது! ''ஒரு புதிய மற்றும் நியாய பூர்வமான உலகப் பொருளாதார அமைப்புக்கான தனது போராட்டத்தில்... இரண்டாவது முகாம் தோல்வியுற்று உள்ளது. இருந்த போதிலும், ஏகாதிபத்திய மேலாதிக்கம் மற்றும் மறு-காலனியாக்கலுக்கு எதிரான உலகு தழுவிய போராட்டத்தில் அது பிரதான சக்தியாக விளங்குகிறது.'' ''பிரேசில், அர்ஜென்ட்டினா, இந்தியா, மெக்சிகோ, தென் கிழக்கு ஆசிய நாடுகள் ஆகியவை ஒப்பீட்டளவில் ஒரு உயர்ந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளன.'' எனவே, இவற்றை இரண்டாவது முகாமின் அங்கமாகக் கருத முடியாது. அவை ''துணை வல்லரசுகளாக உள்ளன; விரிவாக்க மற்றும் பிராந்திய மேலாதிக்கத் தன்மைகளை அவை கொண்டு உள்ளன.'' ''ஏகாதிபத்தியத்திய காலகட்டத்தின் இப்போதைய துணைக் காலகட்டத்தில் மறுகாலனியாக்கலையும் மேலாதிக்கத்தையும் தூக்கியெறிவது உடனடிக் கடமையாக உள்ளது.'' எனவே ''இரண்டாவது முகாமின் நாடுகளும் மக்களும் உலக தழுவிய புரட்சிகரப் போராட்டத்தில் பிரதான சக்திகளாக விளங்குகின்றனர்.'' என்னே பரிதாபம்! ஒரு துணை வல்லரசான இந்தியாவின் மக்களுக்கு இப்போராட்டத்தில் எந்த பாத்திரமுமில்லை!

இன்றைய உலக நிலைமை பற்றி ஆய்வு செய்யும் 112 பக்க நூல் இவ்வாறுதான் பேசிக் கொண்டு செல்கிறது. மூன்றுலக கோட்பாடு உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு கூர்முனையாக மூன்றாவது உலகை கொண்டிருந்தது; மா.அ.க.வின் புதிய கோட்பாடோ மூன்றாம் உலகத்துக்கு பதிலியாக பின் தங்கிய நாடுகளை முன் வைக்கிறது - இதுவே இந்நூலின் வற்புறுத்தலாக உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்நாட்டில் தனது நடவடிக்கை முழுவதையும் பொதுவில் பார்ப்பனீயத்தையும், குறிப்பாக அதில் ஜெயலலிதாவின் வகையையும் எதிர்ப்பதாகக் குறுக்கிக் கொண்ட ஒரு அமைப்பிடம் இருந்து இம்மாதிரியான ஒரு இரண்டு முகாம் கோட்பாடு வெளித்தோன்றுவதால் யாரும் ஆச்சரியப்படவேண்டாம். மேலும் இப்போது காவிரிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜெயலலிதாவின் பின்னே அணிதிரளும் அளவுக்கு அதன் சந்தர்ப்பவாதம் தாழ்ந்து போய்விட்டது. இந்த மாதிரியான புரட்சியாளர்கள் நம்மைச் சுற்றியிருக்கும்போது, இப்போது எதிர்ப்புரட்சி எங்கும் பலம் பெறுவது குறித்து யாரும் ஆச்சரியப்படவேண்டியதில்லை''

பரிசிலனையில் உள்ள இந்த நூல் இந்நிலமையிலிருந்து விதிவிலக்காக இல்லை. பல்வேறு குழுக்களில் சில, இரசியா இன்னமும் ஒரு மேல்நிலை வல்லரசே என நிரூபிக்க முயல்கின்றன; சில குழுக்கள் மூன்றுலகக் கோட்பாட்டை நியாயப்படுத்தி வாதிடுகின்றன. இதற்காக இவை பல்வேறு சுவாரசியமான கட்டுக்கதைகளை ஆய்வு என்ற பெயரில் வெளியிடுகின்றன. இத்தகைய குப்பைகள் மார்க்சிய - லெனினிய இலக்கியம் என்று முன்வைக்கப்படுகின்றன. இவர்கள் அனைவரும் மையவாதி ஹுவா குவா பெங்கின் உண்மையான சீடர்கள்தான்! ஒரு காலத்தில் மகத்தானதாக இருந்த சி.பொ.க.யின் 11வது பேராயத்துக்கான அறிக்கையில், சியாங் சிங் உள்ளாடைகள் வாங்கிய கணக்கை முன்வைத்து, இதனால் அவர் அரசியல் தலைமைக் குழுவிலிருந்து நீக்கப்பட்டு, சாகும்வரை சிறைவாசம் அனுபவிக்க வேண்டுமென்ற தண்டனையை அளிக்கப்படுவதற்கான நிரூபணமாக முன்வைத்தார். கேடுகெட்ட மூன்றுலகக் கோட்பாட்டை இன்னமும் உயர்த்திப் பிடிக்கும் அனைவரும் இன்னும் மோசமான சீரழிவு நிலைக்கு வீழ்ந்தே தீருவர். ஏனெனில் அவர்கள் வெகுகாலத்திற்கு முன்னரே பாட்டாளி வர்க்க நிலைப்பாடுகளுக்கு விடைகொடுத்து அனுப்பி விட்டனர்.

மா.அ.க. இந்த அளவுக்கு சீரழிந்தது; போல்சவிக் குழு நீண்ட காலத்திற்கு முன்பே புரட்சிகரத் தன்மையினை இழந்து வெறும் சந்தைக் கடையாகி விட்டது; தமிழ்நாடு அமைப்புக் கமிட்டி குட்டி முதலாளிய அரைவேக்காடாகி விட்டது; மக்கள் யுத்தக் குழுவின் தமிழ்நாட்டுப் பிரிவு உட்பட அனைத்து சிறுசிறு குழுக்களும் விடுதலைப் புலிகள், பாட்டாளி மக்கள் கட்சி, அல்லது கோபால்சாமி பின்னால் செல்கின்றன; இந்திய மக்கள் முன்னணி வெகு காலத்திற்கு முன்பே தன்னார்வக் குழுக்களால் விழுங்கப்பட்டு விட்டது. இவை அனைத்தும் புரட்சிகர திசை வழியைச் சிந்திப்பவரையே, கையறு நிலையை ஏற்படுத்தும் கடுமையான நிலைமையை உருவாக்கி உள்ளன. போலிப் புரட்சி குட்டி முதலாளிய அறிவாளிகள் ஆற்றும் பாத்திரம் நெருக்கடியை மேலும் ஆழப்படுத்தி உள்ளது.

இத்தகைய கடுமையான நிலைமையில், தமிழகத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்களின் கடமை, தமது அணிகளை நெருக்கமாக இணைத்துக் கொண்டு இந்த அன்னியப் போக்குகள் அனைத்துக்கும் எதிராக தீவிரமான சித்தாந்தப் போராட்டத்தை நடத்துவதே ஆகும். இந்த வழியில் மட்டுமே மார்க்சிய - லெனினிய சக்திகள் ஒன்றிணைக்கப்படும்; தமது பொற்காலத்தில் உள்ள அனைத்துப் பிற்போக்கு சக்திகளை ஊக்குமுடன் எதிர் கொண்டு சமாளிக்க முடியும்.

"ரெட் ஸ்டார்" - பிப்ரவரி'94.

## நமது பதில்:

ஒரு புரட்சிகர அமைப்பின் இன்றியமையாத இலக்கணம் - இலட்சணம் அதன் நேர்மை. நேர்மையில்லாத ஒருவன் புரட்சியாளனாகவே இருக்க முடியாது. எதிரியைப் பற்றிய மதிப்பீடு செய்வதானால் கூட, அவனது யதார்த்த நிலை என்னவோ அதன் அடிப்படையில்தான் இருக்க வேண்டும். அவ்வாறின்றி தனது அகவய நோக்கில் எதிரியைக் காண்பானாகில் புரட்சியில் வெல்லமாட்டான்; புதை குழியில் வீழ்த்தப்படுவான். புரட்சிகர அமைப்புகளைப் பற்றிப் புறங்கூறியே ''நாடு சுற்றும் நாயகன்'' கேரள செங்கொடி குழுவின் தலைவர் இராமச்சந்திரன் அவர்கள் தனது அரசியல் நேர்மையின்மைக்கு இன்னொரு சான்று காட்டியிருக்கிறார்.

இ.பொ.க (மா.லெ) மா.அ.க.வின் ''மேல்நிலை வல்லரசின் மேலாதிக்கமும் பாட்டாளி வர்க்கப்புரட்சியும்'' என்ற ஆவணத்துக்கு அவரது ''ரெட் ஸ்டார்'' பிப்ரவரி'94 இதழில் விமரிச



படிப்பகம்

www.padippakam.com

னம் வெளிவந்துள்ளது. அதில் அவரது குழுவின் அரசியல் நேர்மையின்மைக்கு சான்றாக நமது அமைப்பு பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார். ''தமிழ்நாட்டில் தனது நடவடிக்கை முழுவதை யும் பொதுவில் பார்ப்பனீயத்தையும், குறிப்பாக அதில் ஜெயலலிதாவின் வகையையும் எதிர்ப்ப தாகக் குறுக்கிக் கொண்ட ஒரு அமைப்பிடம் இருந்து இம்மாதிரியான ஒரு இரண்டு முகாம் கோட்பாடு வெளித்தோன்றுவதால் யாரும் ஆச்ச ரியப்படவேண்டாம். மேலும் இப்போது காவி ரிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜெயலலிதா வின் பின்னே அணிதிரளும் அளவுக்கு அதன் சந்தர்ப்பவாதம் தாழ்ந்து போய்விட்டது. இந்த மாதிரியான புரட்சியாளர்கள் நம்மைச் சுற்றியி ருக்கும்போது, இப்போது எதிர்ப்புரட்சி எங்கும் பலம் பெறுவது குறித்து யாரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை'' (ரெட் ஸ்டார்'94; பிப்; பக் 12)

''காவிரிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜெயலலிதாவின் பின்னே'' அணிதிரண்டுள் ளோம் என்று பச்சையாகப் புளுகும் இவர்களி டம் இருந்து நமது சர்வதேச ஆவணம் குறித்த நேர்மையான விமரிசனத்தை எதிர்பார்ப்பதே முட்டாள்தனம்தான். மேலும் மார்க்சிய - லெனி னிய அடிப்படையிலான யுத்த தந்திரமும், செயல்தந்திரமும் வகுத்துக் கொண்டு புரட்சிகர இயக்கத்தை வளர்த்தெடுப்பதில் நாம் ஈடுபட் டுள்ளோம். அத்தகைய மா - லெ கண்ணோட் டம் சிறிதும் இல்லாத ''போர்க்குணமிக்க'' பொருளாதாரவாதத்தில் மூழ்கிக் கிடக்கும் குழுக்களில் ஒன்றான ''செங்கொடி'' குழு பாசிச, இந்துமதவெறி எதிர்ப்பு செயல் தந்திரத் தின் ஒரு பகுதியாக பார்ப்பன - பாசிச ஜெயல லிதா கும்பலை எதிர்த்து நாம் அரசியல் போராட் டம் நடத்துவதன் முக்கியத்துவத்தை அறிய முடி யாதது வியப்பில்லை. ஆகவே தான் நமது நடவ டிக்கைகளை பொதுவில் பார்ப்பன எதிர்ப்பாக வும், குறிப்பாக ஜெயலலிதா எதிர்ப்பாகவும் சுருக்கிவிட்டதாக குறைகூறுகின்றனர். இதிலி ருந்து அவர்கள் இன்னமும் நம்பூதிரிபாடுவகை அரசியலில் இருந்து விடுபடவில்லை என்று தெரிகிறது. இந்த இலட்சணத்தில் நம்மைப் போன்ற புரட்சியாளர்கள் இருப்பதால்தான் எதிர்ப்புரட்சி எங்கெங்கும் பலம் பெறுவதாக வேறு சரடு விடுகின்றனர்.

நமது சர்வதேச அறிக்கை மீது 2 பக்க விமரிச னம் எழுதுவதாகப் பாவித்துக் கொண்டு, முதல் பக்கம் முழுவதும் ''மூன்று வகைக் கோட்பாடு'' மாவோ முன்வைத்ததில்லை டெங்சியாவோ பிங்கின் கண்டுபிடிப்புத்தான்; ''நால்வர் கும்பல் '' எனப்படும் புரட்சியாளர்களை டெங் கும்பல் நயவஞ்சகமாக ஒடுக்கிவிட்டனர் என்றெல்லாம் தனது வழக்கமான பல்லவிக்குப் பிறகு, மாநில அமைப்புக் கமிட்டி இ.பொ.க. (மா.லெ) வர்க்க சமரச நிலைப்பாடு கொண்டுள்ள, தமிழ்நாட் டில் முடங்கிப் போயுள்ள ஒரு சிறு துண்டு அமைப்புதான் என்று அறிமுகப்படுத்தி, நமது நிலைப்பாடுகளைத் திரித்துச் சொல்லி சாடுகின் றனர்.

வெளி மாநிலங்களில் குடியேறியுள்ள மலையாளிகளை மையமாக வைத்து செங் கொடி குழு அகில இந்திய அமைப்பைக் ''கட்டு வது'' போன்று தமிழர்களை மையமாக வைத்து நமது அமைப்பை விரிவுபடுத்தும் எண்ணம் நமக்கில்லை; மேலும் டி.என்.ஓ.சி. ஓடுகாலி கும்பலையும் கூட புரட்சியாளர்களாகக் கருதி செங்கொடிக் குழு கூடிக் குலாவியதைப் போல அரசியல், சித்தாந்த வேறுபாடுகளை மூடிம றைத்துக் கொண்டு மற்ற மாநிலக் குழுக்களுடன் சந்தர்ப்பவாத உறவு கொள்ளும் எண்ணமும் நமக்குக் கிடையாது. மற்றபடி புரட்சிகரக் குழுக் கள் என்கிற கறாரான வரையறைக்குட்பட்ட குழுக்களுடன் தோழமை உறவே கொண்டுள் ளோம். ஆகவே, தமிழ்நாட்டில் ''மட்டும்'' முடங்கிக் கொண்டுள்ளோம், ''வர்க்க சமரசவா திகள்'' என்பது செங்கொடிக் குழுவின் வழக்க மான சவடால்தான்.

''மூன்றுலகக் கோட்பாடு'' மாவோவால் முன் வைக்கப்பட்டதுதான் என்பதை நிரூபிப்ப தற்கான ஒரே ஒரு மேற்கோள் கூடக் கிடையாது; 1974-இல் டெங்சியாவோ பிங்கின் ஐ.நா. சபை உரையில்தான் அக்கோட்பாட்டின் கரு இருந் தது; அவர் நாடு திரும்பியதும் அதற்காக கண்டிக் கப்பட்டார்; அதன் பிறகு மாவோ இறக்கும் வரை யாருமே கேள்விப்பட்டதில்லை; ஏகாதி



படிப்பகம்

www.padippakam.com

பத்தியங்களுடன் கூட்டுச் சேர்வதற்காக டெங் - ஹுவா கும்பல் இந்தக் கோட்பாட்டை முன் வைத்தது; இது மாவோவின் கோட்பாடு என்று ஏற்றுக் கொண்ட புரட்சிகர சக்திகள் பல்வேறு அளவுகளில் வர்க்க சமரசச் சக்திகளாகச் சீரழிந் தன; சோவியத், அல்பேனியத் திரிபுவாதிகள் மாவோவைத் தாக்குவதற்கு இதைப் பயன்படுத் திக் கொண்டனர். டெங்கின் முழு மேலாதிக்கம் நிலைநாட்டப்பட்டு கலாச்சாரப் புரட்சி உட்பட சோசலிச சாதனைகளை நிராகரித்த பிறகு இரு மேல்நிலை வல்லரசுகளுடனும் வெளிப்படை யாக கூட்டுச் சேர்ந்து கொண்டதால் மூன்றுலகக் கோட்பாட்டையும் நிராகரித்துவிட்டது. இவை செங்கொடி குழுவின் வாதங்கள்.

பிறகு, மூன்றுலகக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்ட இந்தியப் புரட்சிகரக் குழுக்களின் "சீர ழிவுகள்" என்று தனது சொந்தக் கருத்துக்களை செங்கொடிக் குழு எழுதியுள்ளது. "நால்வர் கும் பலை" ஏற்காத அக்குழுக்கள் மேற்கண்ட மாற் றங்களால் சிக்கலில் மாட்டிக் கொண்டன; வினோத் மிஸ்ரா குழு போன்றவை முழுமை யாக டெங்கின் நிலைக்குச் சீரழிந்துபோன அதே சமயம் பிற குழுக்கள் மையவாத நிலை எடுத் தன; சீனத்தில் முதலாளித்துவ மீட்பு, கலாச்சாரப் புரட்சி நிராகரிப்பு ஆகியவற்றை எதிர்த்தபோதே மூன்றுலகக் கோட்பாடு உட்பட டெங்கின் நிலைப்பாடுகளை பின்பற்றுகின்றன. இதன் விளைவாக ஐக்கிய முன்னணி குறித்துப் புரட்சி கர அணுகுமுறை கொள்வதில் இருந்து விலகிப் போய் வர்க்க சமரச மற்றும் வர்க்கங்களற்ற அல் லது வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டு பல பிரச்சி னைகளைகளிலும் முடிவெடுக்கின்றனர்; சமூக - ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசான சோவியத் யூனியன் கலைந்து போனது இவர்களை குழப் பத்தில் தள்ளியது; முதல் உலகின் இருமேல் நிலை வல்லரசுகளில் ஒன்று மறைந்து போன பிறகு மூன்றுலகக் கோட்பாட்டை எப்படி வியாக்கியானம் செய்வது? அமெரிக்க மேல் நிலை வல்லரசு மட்டும் இருக்கிறதா? இரசியா இன்னமும் மேல்நிலை வல்லரசா? மேலும் சில மேல்நிலை வல்லரசுகள் தோன்றினவா? அல் லது மூன்றுலகக் கோட்பாடு அப்போதும் பொருத்தமுடையதாகக் கருத முடியுமா? என்று அக்குழுக்கள் குழம்பின. இதனால் ஓரிரு குழுக் கள் மூன்றுலகக் கோட்பாட்டைக் கைவிட்டன; ஒரு குழு இரண்டுலக கோட்பாட்டை முன் வைத்தது; அமெரிக்கா உட்பட ஏகாதிபத்தியங் கள் ஒரு உலகம், மற்றவை இரண்டாம் உலகம் என்கிறது; இன்னொரு குழு இரசியா இன்னமும் மேல்நிலை வல்லரசாக நீடிப்பதால் மூன்றுலகக் கோட்பாடு இப்போதும் பொருந்தும் என்கிறது; ஆனால் அனைத்துக் குழுக்களுமே நவீன கால னிய தரகு அரசுகளான (மூன்றாம் உலக அரசு களை) உலகப் புரட்சியின் தலைமைச் சக்திகளா கவே கருதுகின்றன; இவ்வாறு வர்க்க சமரச நிலையிலேயே அவை நீடிக்கின்றன இவைதாம் செங்கொடிக் குழுவின் பொதுவான படப்பி டிப்பு.

ஆனால் காமாலை நோய் கண்டவனுக்குக் காண்பதெல்லாம் மஞ்சளாகத் தெரிவது போன்ற பார்வைக் கோளாறு செங்கொடி குழுவிடம் பீடித்திருப்பதையே இது காட்டுகிறது. மூன்றுல கக் கோட்பாட்டை ஏற்றிருந்த நமது அமைப்பு டெங்கின் எந்த நிலைப்பாட்டையும் ஆதரித்த தில்லை; தவறான ஐக்கிய முன்னணி அணுகு முறை மேற்கொண்டதாகவோ, வர்க்க சமரச, வர்க்கங்களற்ற, வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட நிலைப்பாடு எடுத்ததாகவோ அவர்கள் சான்று காட்டவும் முடியாது. அதேபோல உலக நிலை மைகளின் மாறுதலுக்கேற்ப பழைய கோட்பாடு களை நிராகரித்துப் புதியவற்றை வகுத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தைக் காண மறுத்து நாம் குழப்பமடைந்திருப்பதாக சுய திருப்தியுடன் கூறிக் கொண்டு பழைய வரட்டுச் சூத்திரத்தைப் பிடித்துக் தொங்கிக் கொண்டிருப் பதில் பெருமைப்படுகிறது, செங்கொடிக் குழு.

1974 ஐ.நா. சபை உரையில் மூன்றுலகமாக வகைப்படுத்தியதற்காக டெங் விமர்சிக்கப்பட் டார் என்றும் அதன் பிறகு மாவோ இறக்கும் வரை அப்படி எதுவும் கிடையாது என்றும் திரித் துச் சொல்கிறது, செங்கொடிக் குழு. சில மூன் றாம் உலக நாட்டுத் தலைவர்களுடனான மாவோ உரையாடலில் மூன்றுலக வகைப்பாடு முதன்முதலாக இருந்தது; 10-வது கட்சிக் காங்கிர சிலேயே அதற்கான கரு இருந்தது; டெங்கின்



படிப்பகம்

www.padippakam.com

ஐ.நா. சபை உரைக்குப் பிறகு சர்வ தேச அரங்குக ளில் சீனப் பிரதிநிதிகள் பலமுறை மூன்றுலக வகைப்பாடு அடிப்படையில் அணுகியும் பேசி யும் வந்துள்ளனர். மாவோ காலத்திலேயே கிசிங் கரும், நிக்சனும் சீனத்துக்கு வரவழைக்கப்பட்டு அவருடனேயே உரையாடி, கொள்கை மாற்றங் கள் ஏற்பட்டன. இதையெல்லாம் ஒருபுறம் வச தியாக மறைத்து விட்டு, மறுபுறம் சோசலிச அர சின் வெளிவிவகார அணுகுமுறை வேறு, சர்வ தேச கம்யூனிச இயக்கத்துடனான அதன் உறவு வேறு என்று செங்கொடிக் குழு வாதிடுகிறது. குருச்சேவ் கும்பலுக்கெதிரான ''மாபெரும் விவாத'' ஆவணங்களே எல்லாவற்றுக்கும் அடிப்படை என்கிறது. ஆனால் அந்த ஆவணங்க ளிலேயே ''அமைதிவழிப் புரட்சி'' என்கிற தவ றான கண்ணோட்டத்தை சீனக்கட்சி முன் வைத் திருந்தது என்பதுதான் உண்மை.

மேலும் மூன்றுலகக் கோட்பாட்டை மாவோ முன் வைத்தார் என்பதற்காக மட்டும் அதை ஏற்பது எப்படித் தவறோ அதே போன்று ''அவர் அதை முன்வைக்கவில்லை'' என்கிற வாத அடிப்படையில் நிராகரிப்பதும் தவறா னதே. சர்வதேச அடிப்படை முரண்பாடுகள் மாறாமல் இருக்கும் போதே, ஏகாதிபத்தியக் கட் டம் நீடிக்கும் போதே குறிப்பிட்ட தருணத்தில் உலக அரசியல் சக்திகளின் சேர்க்கையில் ஏற்ப டும் மாறுதல்களுக்கேற்ப, பருண்மையான நிலைமைகளை ஆய்வு செய்து பொருத்தமான யுத்த தந்திர, செயல் தந்திர முடிவுகளை எடுக்க வேண்டியது புரட்சிகர இயக்கத்தின் கடமையா கும். இந்த அடிப்படையில்தான் மூன்றுலகக் கோட்பாட்டை நாம் ஏற்றதும், பிறகு மாறிய நிலைமைகளுக்கு ஏற்ப புதிய கோட்பாடுகளை வகுத்துச்செயல்படுவதும் நடக்கிறது. நமது ஆய் வுகளும், முடிவுகளும் எப்படித் தவறானவை என்கிற விமரிசனம் எதுவும் இல்லாமல் டெங் கும்பலுடன் சேர்த்து முத்திரை குத்தி வர்க்க சமர சம் என்று அவதூறு செய்து தனது கையாலாகாத்த னத்தையே செங்கொடிக் குழு வெளிப்படுத்தியி ருக்கிறது.

நமது சர்வதேச ஆவணத்தில் லெனினு டைய பல மேற்கோள்களை பொருத்தமற்ற முறையில் கையாண்டிருக்கிறோம் என்கிறது செங்கொடிக் குழு; ஆனால் இந்தக் குற்றச்சாட் டுக்கு ஒரே ஒரு உதாரணம் கூட அது தரவில்லை. மூன்றுலகக் கோட்பாடு மாவோவினுடையது என்று திரும்பத் திரும்ப நமது ஆவணத்தில் எழு தப்பட்டிருக்கிறது; ஆனால் இதை நிரூபிக்க மாவோ மேற்கோள் எதுவுமில்லை என்கிறது. லெனின், மாவோ வகுத்தளித்த கோட்பாட்டின் தொடர்ச்சியாகத்தான் நாம் நமது நிலைப்பாடுக ளைப் பார்க்கிறோம். அந்த அடிப்படையில் எழு தப்பட்டிருப்பதால் அது அவ்வாறுதான் இருக் கும்.

லெனினுடைய மேற்கோளைப் பொருத்த மற்ற முறையில், கேடாகப் பயன்படுத்துவதாக நம்மீது குற்றஞ்சாட்டும் செங்கொடிக் குழு, ''ஸ்டாலினால் முன் வைக்கப்பட்ட கருத்துக்கள் கூட இன்றைய நிலைமைக்குப் பொருத்தமற்ற வையாகிவிட்டன'' என்று நாம் நமது ஆவணத் தில் எழுதியிருப்பதாகப் புளுகுகிறது. ஆனால் நமது ஆவணத்தின் சம்பந்தப்பட்டபகுதி வரு மாறு:

''ஏகாதிபத்தியம், ஏகாதிபத்தியக் கட்ட மைப்பு, ஏகாதிபத்திய சகாப்தத்தின் அடிப்படை முரண்பாடுகள், ஏகாதிபத்தியப் போர்கள் ஆகிய வற்றின் துவக்க காலத்தில் லெனினும், ஏறக்கு றைய அரை நூற்றாண்டுக்கு முன்பு ஸ்டாலினும் முன்வைத்த கோட்பாடுகள், வரையறுப்புக ளையே கிளிப்பிள்ளைகளைப் போல சில போலிப் புரட்சியாளர்கள் கூறிக் கொண்டிருக் கின்றனர். அவை இன்னமும் பொருத்தமா னவை, சரியானவை என்றாலும் லெனின், ஸ்டா லினுக்குப் பிறகு சர்வதேச நிலைமைகளில் ஏற் பட்டு வரும் மாற்றங்களை பருண்மையாக ஆய்ந்தறிந்து தேவையான புதிய கோட்பாடு களை முன்வைத்து சர்வதேசப் புரட்சி இயக் கத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும்'' (மேல்நிலை வல்லரசின் மேலாதிக்கமும் பாட் டாளி வர்க்கப்புரட்சியும், ஆங்கிலம் பக்: 106)

இதேபோல மூன்றுலகக் கோட்பாட்டில், ''உலகப் புரட்சியின் முன்னணிச் சக்தியாக நவீன காலனி தரகு அரசுகளான மூன்றாம் உலக நாடுக ளின் அரசுகள் விளங்குகின்றன'' என்று எழுதி



படிப்பகம்

www.padippakam.com

யுள்ளதாக செங்கொடிக் குழு புளுகுகிறது. அன்றிருந்த சோசலிச அரசுகளும், சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கமுமே உலகப் புரட்சியின் முன்னணிச் சக்தியாக விளங்குவதாகத்தான் மூன்றுலகக் கோட்பாட்டில் உள்ளது. இதைத் திரும்பத்திரும்ப எடுத்துக்காட்டியும் அக்கோட்பாட்டின் எதிர்ப்பாளர்கள் அனைவருமே திரித்துச் சொல்லி அதைக் கொச்சைப்படுத்துகின்றனர். இந்தியா ஒரு துணை வல்லரசு என்று நாம் வரையறுத்திருப்பதால் உலகப் புரட்சியில் இந்திய மக்களுக்கு பங்கு - பாத்திரம் எதுவுமில்லை என்று நாம் கூறுவதாக செங்கொடிக் குழு இன்னொரு பொய்யையும் சேர்த்துக் கொண்டுள்ளது. இது குறித்து நமது சர்வதேச ஆவணத்தில் மிகத் தெளிவாகவே பின்வருமாறு எழுதியுள்ளோம்.

''ஆகவே, ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகள் அமைக்கும் பிராந்திய - தொழில் - வர்த்தக வளையங்களில் அவற்றின் இளைய பங்காளிகளாக உள்ள பின்தங்கிய நாடுகளின் அரசுகள், பிராந்திய துணை வல்லரசுகள், அவற்றுக்கு சேவை செய்யும் கூட்டமைப்புகள் ஆகியவை ஏகாதிபத்தியம், மறுகாலனியாதிக்கம் மற்றும் மேலாதிக்கத்துக்கு எதிரான உலகு தழுவிய புரட்சிப் போராட்டத்தின் பிரதான சக்தியாக, உந்து சக்தியாக இருக்க முடியாது. அதற்கான அடிப்படை இத்தகைய நாடுகளின் ஆளும் வர்க்கங்களுக்கும் அரசுகளுக்கும் கிடையாது'' (மேற்படி நூல், பக்.94)

மேற்கண்டவாறு ஆளும் வர்க்கங்களையும் அரசுகளையும் உலகப் புரட்சியின் உந்து சக்தியாக, பிரதான சக்தியாக இருக்க முடியாது என்று நாம் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தபோதும், இந்த நாடுகளின் மக்களை அவ்வாறு குறிப்பிட்டிருப்பதாக செங்கொடிக் குழு புளுகுகிறது. ஆக, இரண்டாம் முகாமின் துணை வல்லரசு நாடுகளது ஆளும் வர்க்கங்களும் அரசுகளும், சர்வதேசப் புரட்சிப் போராட்டத்தின் உந்து சக்திகளாக இருக்க முடியாது என்பதுதான் நமது நிலைப்பாடு. இதனால் நமது நிலைப்பாடு வர்க்க சமரச அடிப்படையிலானது என்று அவதூறு செய்வதற்கு இடமில்லாமல் போனது; எனவே முன்னே போனால் கடிப்பது, பின்னே போனால் உதைப்பது என்ற ஒரு பிராணியின் குணத்தை வெளிப்படுத்தும் செங்கொடிக் குழு, உலகப் புரட்சியில் இந்திய மக்களுக்கு இடமில்லை என்று நாம் எழுதியிருப்பதாகத் திரித்துச் சொல்லுகிறது.

இப்படிப் புளுகுவது, திரித்துச் சொல்லுவது மூலம்தான் நமது நிலைப்பாடுகளைக் குறை கூறி செங்கொடிக் குழு நிராகரித்துள்ளதே தவிர, நேர்மையான வழியில் இல்லை. அப்புறம், *1980*-களின் மத்தியில் சர்வதேச அரசியல் சக்திகளின் சேர்க்கையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைக் கணக்கில் கொண்டு நாம் புதிய கோட்பாடுகளை வந்தடைந்ததைக் கிண்டல் செய்கிறது. இதன் மூலம் செங்கொடிக் குழு தனது வரட்டுத்தனத்தையும் ஓட்டாண்டித் தனத்தையுமே வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொள்கிறது. நமது நிலைப்பாடுகள் வேடிக்கையானவை, குப்பை என்றும், இது போன்ற கோட்பாடுகள் வைப்பது ஹுவா குவாபெங்கின் மையவாத அடிப்படையிலானவை என்றும் கேலி செய்து முத்திரை குத்துகிறது செங்கொடிக் குழு; ஆனால் அதை நிரூபிக்கவோ, இன்றைய சர்வதேச நிலைமை குறித்து சரியான ஆய்வும் கோட்பாடும் இதுதான் என்றோ எதையுமே எடுத்துக் காட்டவில்லை.

இறுதியாக, தான் கூடிக் குலாவிய ஓடுகாலிக் கும்பலோடும், வி.மி.குழு, ''போல்சவிக்'' குழு ஆகியவற்றோடும் சேர்த்து புரட்சிகர நிலையில் ஊன்றி நிற்கும் மா.அ.க. மற்றும் மக்கள் யுத்தக் குழுக்களையும் சீரழிந்து போய்விட்டன; தமிழ்நாட்டில் புரட்சிகர சக்திகள் குழப்பமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளன; அவை ஒன்று திரண்டு சித்தாந்தப் போராட்டம் நடத்தி, மா-லெ சக்திகளை ஓரணியில் திரட்டி பிற்போக்கு சக்திகளின் சவாலை எதிர் கொள்ள வேண்டும் என்கிறது.

புரட்சியாளர்களை ஐக்கியப்படுத்துவதாகக் கூறிக் கொண்டு செங்கொடி குழு நடத்திய ''*சந்தர்ப்பவாத அரட்டை*'' காரணமாக எல்லாக் குழுக்களாலும் தனிமைப்பட்டுப் போனது; புரட்சிகர இயக்கம் என்பதே வெறும் சடங்குத்தனம் என்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் தமிழ்நாட்டுப் புரட்சியாளர்களுக்கு அது அறைகூவல் விடுப்பது நல்லவேடிக்கைதான்!



படிப்பகம்